விலை ரூபா 20.00


6 பேர் உடல் நசுங்கி சாவு
பக்கம் 08



கடவுள் பெண் கைது
பக்கம் 09


ஏவுகணைத் தாக்குதல் தொடரும்
பக்கம் 10


சாதனையுடன் வென்றார் சேவாக்
பக்கம் 23

www.onlineuthayan.com

பக்கங்கள் : 26

# உதயன்

சுடர் 27
கதிர் 159

வள்ளுவர் ஆண்டு 2043 சித்திரை 21 வியாழக்கிழமை (03/05/2012) UTHAYAN - A Lively National Tamil Daily

# புலிகளைக் கைதுசெய்து ஒப்படைக்க இன்ரபோலிடம் இலங்கை கோரிக்கை

கொழும்பு, மே3

நாடு கடந்து செயற்படும் தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தின் உறுப்பினர்களைக் கைதுசெய்து தங்களிடம் ஒப்படைக்குமாறு இலங்கை அரசு சர்வதேச பொலிஸான இன்ரபோலிடம் வேண்டுகோள் விடுத்துள்ளது.

நாடு கடந்து செயற்படும் புலி உறுப்பினர்கள் சர்வதேச ரீதியில் இலங்கை அரசுக்கு எதிராகக் கடுமையான பிரசாரங்களை முன்னெடுத்துவரும் நிலையிலேயே இலங்கை அரசு இந்த அவசர கோரிக்கையை முன்வைத்துள்ளது.

இது விடயம் குறித்தான கடிதத்தை இலங்கை பாதுகாப்பு அமைச்சு சர்வதேச பொலிஸ் தலைமையகத்துக்கு அனுப்பியுள்ளது என அறியமுடிகின்றது.

தேசிய பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் ஏற்படுத்தும் நடவடிக்கையில் சர்வதேச நாடுகளில் வாழும் புலி உறுப்பினர்கள் ஈடுபடுவதால் அதனைத் தடுத்து நிறுத்தி அவர்களின் செயற்பாடுகளை முடக்கும் நோக்கிலேயே இலங்கைப் பாதுகாப்புத் தரப்பு இந்தத் திடீர் நடவடிக்கையில் 04

# தெரிவுக்குழுவில் பங்கேற்க கூட்டமைப்புக்கு அழுத்தம்

## தீர்வை வழங்காமல் இருப்பதற்கான கடைசி வாய்ப்பையும் அடைக்குமாறு இந்தியாவும் அமெரிக்காவும் கோரிக்கை

கொழும்பு, மே3

இனப்பிரச்சினைக்கான நிரந்தர அரசியல் தீர்வை எட்டுவதற்கென ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவினால் அமைக்கப்பட்டுள்ள நாடாளுமன்றத் தெரிவுக்குழுவில் பங்கேற்குமாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு மீது சர்வதேச ரீதியில் அழுத்தங்கள் பிரயோகிக்கப்பட்டு வருவதாக நம்பகரமாகத் தெரியவருகிறது.

இந்த அழுத்தங்களை அடுத்து ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தலைமையிலான அரசு தீர்வை வழங்காமல் இருப்பதற்கான கடைசி வாய்ப்பையும் அடைத்து விடும் வகையில் தெரிவுக் குழுவில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு பங்கேற்பதற்கான வாய்ப்புக்கள் அதிகமாக உள்ளன என கூட்டமைப்பு வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

கூட்டமைப்பை இந்தத் தெரிவுக் குழுவில் பங்கேற்குமாறு கோரி சர்வதேச ரீதியில் அழுத்தங்கள் பிரயோகிக்கப்பட்டு வருவதாகவும் இனப்பிரச்சினைக்கான அரசியல் தீர்வு தொடர்பில் ஒரு இறுதி முடிவுக்கு வருவதற்காகவும் ஜனாதிபதியின் உண்மை நிலையை அறிந்து கொள்வதற்காகவும் தெரிவுக்குழுவில் பங்கேற்குமாறு இந்தியாவும் அமெரிக்காவும் தொடர்ந்து வலியுறுத்தி வருவதாகவும் கூட்டமைப்பு வட்டாரங்கள் மேலும் கூறின.

இனப்பிரச்சினைக்கான நிரந் 04

நாடாளுமன்றத் தெரிவுக்குழுவில்

# இரு ஆசனங்களை ஐ.தே.க. கூட்டமைப்புக்கு வழங்கும்

கொழும்பு, மே3

நாடாளுமன்றத் தெரிவுக்குழுவில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு பங்கேற்க முன்வந்தால் தெரிவுக்குழுவில் தமது கட்சிக்கு உள்ள ஆசனங்களில் 2 ஆசனங்களை அவர்களுக்கு வழங்க ஐ.தே.க. தலைவர் ரணில் விக்கிரமசிங்க தயாராகவுள்ளதாக அவரது கட்சி வட்டாரங்கள் தெரிவித்தன.

தெரிவுக்குழுவில் தமிழர்களின் பங்களிப்பை வலுப்படுத்துவதற்காக அவர் இந்த விட்டுக்கொடுப்பை மேற்கொள்ள முன்வந்துள்ளதாக அந்த வட்டாரங்கள் மேலும் கூறின.

மே தின நிகழ்வுகளுக்காக யாழ்ப்பாணம் வந்திருந்த வேளையில் எதிர்க்கட்சித் தலைவர் ரணில் இந்த விருப்பத்தைதனக்கு நெருக்கமானவர்களிடம் தெரியப்படுத்திய தாக அறியமுடிகிறது. 04

# அடுத்த வாரம் இந்தியா விரைகிறது கூட்டமைப்பு

கொழும்பு, மே3

இனப்பிரச்சினைக்கான அரசியல் தீர்வு தொடர்பில் உள்ள தடைகள் மற்றும் எதிர்கால செயற்பாடுகள் குறித்து பேசுவதற்காக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் குழு ஒன்று அடுத்த வாரம் இந்தியா பயணமாகிறது.

கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் 04

# இலங்கை வந்த இந்தியக் குழுவை அவசரமாக சந்திக்கிறார் மன்மோகன்

புதுடில்லி,மே 3

இலங்கைக்குப் பயணம் மேற்கொண்ட இந்திய நாடாளுமன்ற உறுப்பினர்கள் குழுவை இந்தியப் பிரதமர் மன்மோகன்சிங் இன்று சந்தித்துப் பேசவுள்ளார். இந்திய நாடாளுமன்ற எதிர்க்கட்சித் தலைவர் சுஷ்மா சுவராஜ் தலைமையிலான 12 நாடாளுமன்ற உறுப்பினர்களும் இந்தச் சந்திப்பில் பங்கேற்கவுள்ளனர்.

இந்தச் சந்திப்பில் இலங்கையின் போருக்குப் பின்னரான நல்லிணக்க முயற்சிகள் மற்றும் மீள்குடியேற்ற விடயங்கள் குறித்துக் கவனம் கொள்ளப்படவுள்ளது.

இலங்கையின் இனப்பிரச்சினைக்கு 13ஆவது திருத்தச் சட்டத்துக்கு அப்பால் சென்று தீர்வை வழங்கத் தயாராக இருப்பதாக ஜனாதிபதி மஹிந்த உறுதியளித்திருந்ததாக கொழும்பிலும், புதுடில்லியிலும் சுஷ்மா சுவராஜ் தெரிவித்திருந்தார்.

ஆனால், ஜனாதிபதி மஹிந்த இவ்வாறு எந்த உறுதிமொழியையும் சுஷ்மா சுவராஜி 04

# யாழ். – கொழும்பு பஸ்களுக்கு புதிய விதிமுறை

கொழும்பு, மே 3

கொழும்பிலிருந்து யாழ்ப்பாணம் செல்லும் பயணிகளின் நலன்கருதி போக்குவரத்தில் ஈடுபடும் அனைத்துத் தனியார் பஸ்களும் பெஸ்தியன் மாவத்தையிலிருந்து மட்டுமே தரித்து நின்று போக்குவரத்தில் ஈடுபட வேண்டும் என தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவின் தலைவர் [illegible] தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் மேலும் 04

# அரிய சந்தர்ப்பத்தை கைநழுவ விடாதீர்

## அரசிடம் ஆயர் பேரவை கோரிக்கை

கொழும்பு, மே 3

அரசுக்கு இப்போது கிடைத்துள்ள மேலும் ஒரு அருமையான சந்தர்ப்பத்தைக் கைநழுவிப் போகாமல் பார்த்துக்கொள்ள வேண்டும். நல்லிணக்க ஆணைக்குழுவின் பல பரிந்துரைகள் நல்லிணக்கத்தை மீண்டும் கட்டியெழுப்பவும் மக்களுக்கிடையில் ஐக்கியத்தை ஏற்படுத்தவும், அவர்களுக்கு ஏற்பட்டுள்ள காயங்களைக் குண 04

# புலிகளுக்கு உதவிய குற்றச்சாட்டில் தமிழருக்கு 15 ஆண்டுகள் சிறை

## அமெரிக்க நீதிமன்று தீர்ப்பு

கொழும்பு, மே 3

விடுதலைப் புலிகள் இயக்கத்துக்கு உபகரணக் கொள்வனவில் ஈடுபட்டார் என்ற குற்றச்சாட்டின் பேரில் கனேடியக் குடிமகனான றமணன் மயில்வாகனத்துக்கு 15 ஆண்டு காலச் சிறைத்தண்டனை வழங்கப்பட வேண்டும் என அமெரிக்க நீதித்துறை தீர்மானித்துள்ளது. 04

### பதுமனுக்கு தொடர்ந்தும் விளக்கமறியல்

தமிழீழ விடுதலைப் புலிகளின் திருகோணமலை மாவட்ட முன்னாள் தலைவரான பதுமன் என்னும் சிவசுப்பிரமணியம் வரதானந்தனை இராணுவ முகாம்களைத் தாக்கியமை மற்றும் இராணுவத்தினரைக் கொலை செய்ய முயன்றமை ஆகிய குற்றச்சாட்டுகளின் காரணமாக அவரை மேலும் விளக்கமறியலில் வைக்குமாறு நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது. திருகோணமலை மேல்நீதிமன்ற பதில் நீதிபதி எம். இளஞ்செழியன் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை இந்த உத்தரவை விடுத்தார். வரதானந்தன் சார்பில் சட்டத்தரணி எவரும் ஆஜராகவில்லை. அவரை மே 21 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிபதி இளஞ்செழியன் உத்தரவிட்டார்.

### தந்தையும் மகளும் வெட்டிக்கொலை

மொனராகலை - 14 ஆம் கட்டை கும்புக்க பகுதியில் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த தந்தை, தாய் மற்றும் மகள் ஆகியோர் கத்தி வெட்டுக்கு இலக்காகியதில் இருவர் உயிரிழந்துள்ளனர். நேற்றுமுன்தினம் இரவு 9 மணிக்கு இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது. சம்பவத்தில் 58 வயதுடைய தந்தையும் 30 வயது மகளும் உயிரிழந்ததோடு தாய் படுகாயமடைந்து வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். இந்தக் கொலைச் சம்பவத்துடன் தொடர்புடைய சந்தேகநபர் கைது செய்யப்பட்டுள்ளதாக மொனராகலைப் பொலிஸார் தெரிவித்தனர். இவர் நீதிமன்றில் முன்னிலைப்படுத்தப்படவுள்ளதாகவும் மேலதிக விசாரணைகள் இடம்பெற்று வருவதாகவும் பொலிஸார் மேலும் கூறினர்.

### ஆணின் சடலம் மீட்பு

ஆயித்தியமலை - வட்டாரமடுகுளம் விலஓயா தெற்குக் கரைப் பகுதியில் இருந்து இனந்தெரியாத ஆண் ஒருவரின் சடலம் மீட்கப்பட்டுள்ளது. இந்தச் சடலம் நேற்றுக் காலை 8.30 மணியளவில் மீட்கப்பட்டுள்ளது. ஆயித்தியமலை பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். இதேவேளை, நீர்கொழும்பு கொச்சிக்கடை முறுநாத மாஓயா கரையில் பழுதடைந்த நிலையில் ஆண் ஒருவரின் சடலம் மீட்கப்பட்டுள்ளது.சடலம் அடையாளம் காணப்படாத நிலையில் நீர்கொழும்பு வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது.

### மூத்த ஊடகர்களுக்கு கௌரவிப்பு இன்று

சுதந்திர ஊடகக் குரல் நடத்தும் மூத்த ஊடகவியலாளர்கள் கௌரவிப்பும் ஒளிப்படக் கண்காட்சியில் வெற்றிபெற்றவர்களுக்கான பரிசளிப்பு நிகழ்வும் இன்று காலை 9.30 மணிக்கு நாவலர் கலாசார மண்டபத்தில் நடைபெறவுள்ளது. நிகழ்வில் பிரதம விருந்தினராக ஜனாதிபதி சட்டத்தரணி செல்வி சாந்தா அபிமன்னசிங்கம், சிறப்பு விருந்தினராக யாழ். அரச அதிபர் திருமதி இமெல்டா சுகுமார் ஆகியோர் கலந்துகொள்வர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எனக்கு எதிராகச் சதி

## மேர்வின் சில்வா கூறுகிறார்



தனக்கு எதிராகப் புதிதாக முன்வைக்கப்பட்டுள்ள குற்றச்சாட்டை மறுத்துள்ள அமைச்சர் மேர்வின் சில்வா, தனக்கு எதிராக மிகப்பெரிய சதித்திட்டங்கள் சிலரினால் முன்னெடுக்கப்படுவதாகவும் நேற்று தெரிவித்துள்ளார்.

நடுநிலையாகச் செயற்படுமாறு ஊடகங்களிடம் அமைச்சர் மேர்வின் சில்வா கோரிக்கை விடுத்துள்ளதுடன், அமைச்சருக்கு எதிரான குற்றச்சாட்டு தொடர்பில் பக்கச்சார்பின்றிச் செய்திகளை வெளியிடுமாறும் அவர் கூறியதாக அமைச்சரின் ஊடகச் செயலாளர் ரெஹான் விஜயவர்தன தெரிவித்துள்ளார்.

'எனக்கு எதிரான சதித்திட்டங்கள் மற்றும் குற்றச்சாட்டுக்களுக்கு ஊடகங்கள் முன்னுரிமையளிக்கின்றன. இதனை விடுத்து ஊடகங்கள் மக்களுக்கு நடுநிலையான தகவலையே வழங்க வேண்டும்' என அமைச்சர் கூறினார்.

மேதினக்கூட்டத்தில்கலந்து கொள்ளுமாறு மக்களுக்கு அறிவிப்பதற்குப் பிரதேசசபையின்கடிதத்தலைப்புகளைஅமைச்சர் மேர்வின் சில்வா பயன்படுத்தியதாகக் களனிப் பிரதேச சபைத் தலைவரினால் தெரிவிக்கப்பட்ட குற்றச்சாட்டைத் தொடர்ந்து அமைச்சர் மேற்கண்டவாறு கூறினார்.

'எனக்குப் போதுமானளவு மக்கள் பலம் உள்ளது, போதுமானளவு புகழ் உண்டு, மக்களைத் திரட்டுவதற்கு இந்த உத்திகளை கையாள வேண்டிய அவசியம் எனக்கு இல்லை. இந்தக்கடிதங்களுக்கும் எனக்கும் எந்தவித தொடர்பும் இல்லை. என் மீது அர்த்தமற்ற வகையில் அவர்கள் குற்றஞ்சாட்டாமல் அவர்கள்பொலிஸில் முறையிட வேண்டும். நாட்டில் சட்டம் ஒன்று உள்ளது, சட்ட அதிகாரிகள் உள்ளனர், அவர்களால் குற்றவாளிகளைக் கண்டுபிடிக்க முடியும்' என அமைச்சர் கூறினார். (த)

# பேச்சை மீள ஆரம்பிப்பதா? கூட்டமைப்பு கூடி ஆராயும்

கொழும்பு, மே 3

அரசுடனான பேச்சுகளை மீண்டும் தொடங்குவதா இல்லையா என்பது பற்றி எதிர்வரும் 8ஆம் திகதி நாடாளுமன்றக் குழுக்கூட்டத்தில் தீர்மானம் எடுக்கப்படும் என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராஜா நேற்று 'உதய'னிடம் தெரிவித்தார்.

**அரசுடன் மீண்டும் பேச்சுகளைத் தொடங்குவது தொடர்பில் நாம் எதுவித தீர்மானத்தையும் எடுக்கவில்லை.**

அரசு மற்றும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கிடையிலான பேச்சுகளைத் தொடங்குவதற்கான ஏற்பாடுகள் இடம்பெறுகின்றன என்று ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தலைவரும் அமைச்சருமான ரவூப் ஹக்கீம் கொழும்பில் நேற்று முன்தினம் இடம் பெற்ற ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் மேதினக் கூட்டத்தில் கலந்துகொண்டு உரையாற்றியபோது கூறினார்.

அமைச்சர் இவ்வாறு கூறியது தொடர்பில் கருத்துக் கூறியபோதே மாவை சேனாதிராஜா மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் கூறியவை வருமாறு:-

அரசுடன் மீண்டும் பேச்சுகளைத் தொடங்குவது தொடர்பில் நாம் எதுவித தீர்மானத்தையும் எடுக்கவில்லை. அரசின் நேர்மையற்ற தன்மை காரணமாகவே அரசுக்கும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்குமிடையில் இடம்பெற்று வந்த தொடர் பேச்சுகள் நிறுத்தப்பட்டன.

அரசியல் தீர்வு தொடர்பில் நாம் முன்வைத்த யோசனைகளுக்குப் பதிலளிப்பதற்கு இணங்கிய அரசு பின்னர் அந்த இணக்கப்பாட்டை மீறியது. இதுவே நாம் பேச்சுகளைத் தொடர்வதற்குத் தடையாக அமைந்தது.

இந்தப் பேச்சுகள் மீண்டும் தொடரவேண்டும் என்று அரச தரப்பு விரும்பினாலும் அது தொடர்பில் நாம் எதுவித முடிவையும் இன்னும் எடுக்கவில்லை.

எதிர்வரும் 8ஆம் திகதி எமது கட்சியின் நாடாளுமன்றக்குழுக் கூட்டத்தின் போது இந்த விடயம் தொடர்பாகக் கலந்தாலோசித்து ஒரு முடிவெடுப்போம் - என்றார். (த-சி)

# வெளிநாடுகளின் சதிகளுக்கு ஒருபோதும் இடமளியோம்

## புலம்புகிறார் ஜனாதிபதி

கொழும்பு,மே 3

சில வெளிநாடுகள் இலங்கையில் ஆட்சியைக் கவிழ்க்கச் சதி செய்வதாக ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ மீண்டும் குற்றம்சாட்டியுள்ளார். கொழும்பு நகர மண்டபத்தில் நேற்று முன்தினம் பிற்பகல் ஆளும் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் சார்பில் இடம்பெற்ற மே தினப் பேரணியில் உரையாற்றிய போதே அவர் இவ்வாறு கூறியுள்ளார்.

நாட்டில் குழப்பத்தையும் உறுதியற்ற நிலையையும் ஏற்படுத்தும் நோக்கில் குறிப்பிட்ட சிலர் பெயர், முகவரி இல்லாமல் இலங்கைக்கு வருகிறார்கள். தேசியத்துக்கு எதிரான பரப்புரைகளை மேற்கொள்ளும் அவர்களுக்குத் துரதிர்ஷ்டவசமாக சில வெளிநாடுகளும் உதவுகின்றன.

இலங்கையில் ஆட்சிக் கவிழ்ப்பைச் செய்வதற்கு இந்த நாடுகள் சதி செய்கின்றன. ஆனால் இலங்கையில் ஆட்சி மாற்றத்தை மக்களால் மட்டும் தான் ஏற்படுத்த முடியும். உண்மையான, நீதியான தேர்தல் மூலம் தான் மக்களால் அதைச் செய்ய முடியும்.



வெளிநாட்டுச் சக்திகளின் உதவியுடனோ, சதிகள், சூழ்ச்சிகள் மூலமோ ஆட்சி மாற்றத்தை ஏற்படுத்த இடமளியோம்.

இலங்கை ஆசியாவின் பழைமையான ஜனநாயக நாடுகளில் ஒன்று. கிளர்ச்சிகள், ஆட்சிக் கவிழ்ப்புச் சதிகளுக்கு இந்த நாட்டில் இடமில்லை. அதற்கு எனது அரசு இடமளிக்காது என்றும் அவர் மேலும் கூறியுள்ளார். (த)

# சீனப் பிரஜைகள் மூவரை நாடு கடத்துமாறு உத்தரவு

கடவுச்சீட்டு, விஸா எதுவுமின்றி சட்டவிரோதமாக இலங்கையில் தங்கியிருந்த குற்றச்சாட்டின் பேரில் கைது செய்யப்பட்ட சீனப் பிரஜைகள் மூவரை நாடு கடத்துமாறு கொழும்பு நீதிமன்றமொன்று நேற்று உத்தரவிட்டது.

கொள்ளுப்பிட்டியில் வைத்து இந்த மூவரும் கைதுசெய்யப்பட்டு கோட்டை நீதிவான் நீதிமன்றில் முன்னிலைப்படுத்தப்பட்டனர். இவர்களின் சார்பில் முன்னிலையான வழக்குரைஞர் சுதர் ஷினி குணரட்ன, தமது கட்சிக்காரர்கள் மூவரும் நுரைச்சோலை மின்நிலையத்தில் ஒப்பந்த அடிப்படையில் பணியாற்றுபவர்கள் எனவும் அவர்களின் கடவுச்சீட்டுக்களை அந்த நிலையத்தின்தலைமையதிகாரி தன்வசம் வைத்துள்ளதாகவும் கூறினார். எனினும் கடவுச்சீட்டு மற்றும் செல்லுபடியான விஸா இல்லாமல் எவரும் நாட்டில் தங்கியிருக்க முடியாது எனக் கூறிய நீதிவான், இந்த மூவரையும் நாடு கடத்துமாறு உத்தரவிட்டார். இந்த உத்தரவு நடைமுறைப்படுத்தப்படும்வரை இவர்களை மிரிஹான தடுப்பு முகாமில் வைக்குமாறு அவர் கூறினார். (த)



ஹட்டனில் நேற்றுப் புதன்கிழமை பால் உற்பத்தியாளர்களும் பால் சேகரிப்பாளர்களும் இணைந்து பெருமளவு பாலை வீதியில் ஊற்றி ஆர்ப்பாட்டமொன்றில் ஈடுபட்டனர். பால் கொள்வனவு செய்யும் பல நிறுவனங்கள் பால் உற்பத்தியாளர்களிடமிருந்து பால் கொள்வனவு செய்வதை கடந்த ஒரு வார காலமாக நிறுத்தியுள்ளன. இதனால் பால் உற்பத்தியாளர்கள் மற்றும் பால் சேகரிப்பாளர்கள் பாலை விற்பனை செய்ய முடியாது சிரமத்திற்குள்ளாகியுள்ளனர். இந்த நிலையில் பால் உற்பத்தியாளர்களும் பால் சேகரிப்பாளர்களும் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

# இரு சிறுமிகளைக் கடத்தியதாக பஸ் நடத்துநரும் - சாரதியும் கைது!

யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த 16 வயதுச் சிறுமிகள் இருவரைக் கடத்தியதாக தனியார் பஸ் ஒன்றின் சாரதியும் அதன் நடத்துநரும் சந்தேகத்தின் பேரில் வவுனியாவில் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இது குறித்து மேலும் தெரிய வருவதாவது:-

பெற்றோருடன் ஏற்பட்ட தகராறு காரணமாக புத்தூர் பகுதியைச் சேர்ந்த 16 வயதுச்சிறுமி கோபித்துக் கொண்டு வீட்டை விட்டு வெளியேறியுள்ளார். பின்னர் அவர் துணைக்கு தனது நண்பியையும் அழைத்துக்கொண்டு மாங்குளத்திலுள்ள உறவினர் வீட்டுக்குச் செல்வதற்காக வவுனியா செல்லும் பஸ்ஸில் ஏறியுள்ளார். சிறுமிகள் இருவரும் மாங்குளம் பஸ் நிலையத்தை வந்தடைந்த போதும், தாம் எந்த இடத்தில் இறங்க வேண்டும் என்பது தெரியாமல் தடுமாறினர்.

இதனை தமக்குச் சாதகமாகப் பயன்படுத்திக் கொண்ட குறித்த பஸ்ஸின் சாரதியும் நடத்துனரும் சிறுமிகள் இருவரையும் தந்திரமாகப் பேசி, வவுனியாவுக்கு அழைத்துச் சென்றனர். அங்கு தேக்கவத்தை என்ற இடத்திலுள்ள வீடு ஒன்றில் சிறுமிகள் இருவரையும் தங்க வைத்தனர்.

இந்த விடயம் வவுனியா மாவட்ட தனியார் பஸ் போக்குவரத்துச் சங்கத்துக்கு தெரியவரவே அவர்கள் உடனடியாக இது குறித்து சாரதியிடமும், நடத்துனரிடமும் விசாரணை செய்தனர். பின்னர் வவுனியா மாவட்ட அரச அதிபர் திருமதி சாள்ஸுக்கும் தெரியப்படுத்தினர். இதன் பின்னர் பொலிஸார் சிறுமிகளைக் கடத்தியதாக சாரதியையும் நடத்துனரையும் சந்தேகத்தின் பேரில் கைது செய்தனர். (ங)

# ஐ.நா. வாகனம் மோதியதில் நேற்று தாய் சாவு; பிள்ளைகள் படுகாயம்

## வந்தாறுமூலையில் சம்பவம்

**வீதியைக் கடக்க முனைந்த தாய் மற்றும் இரு பிள்ளைகள் மீது அந்த தொடரணியில் வந்த ஐக்கிய நாடுகள் சபைக்குச் சொந்தமான வாகனம் ஒன்று மோதியுள்ளது.**

மட்டக்களப்பு,மே 3

மட்டக்களப்பு மாவட்டத்தின் ஏறாவூர் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட வந்தாறு மூலையில் நேற்று மாலை 5.45 மணிக்கு ஐக்கிய நாடுகள் சபையின் வாகனம் மோதியதில் பெண்ணொருவர் உயிரிழந்துள்ளதுடன் அவரது இரு பெண் பிள்ளைகள் படுகாயமடைந்துள்ளனர்.

வாழைச்சேனை - மட்டக்களப்பு பிரதான வீதியில் நடைபெற்ற இந்தச் சம்பவத்தினையடுத்து பொதுமக்கள் வாகனத்தை தாக்கிச் சேதப்படுத்தியுள்ளதுடன் அப் பகுதியில் பெரும் பதற்ற நிலைமை ஏற்பட்டுள்ளது.

இது தொடர்பில் மேலும் தெரியவருவதாவது,

நேற்று மட்டக்களப்புக்கு வருகைதந்த ஐரோப்பிய ஒன்றிய நாடாளுமன்ற தூதுக்குழுவினர் - கிரான் பிரதேச செயலாளர் பிரிவிலுள்ள குடும்பிமலைப் பகுதியில் மேற்கொள்ளப்படும் செயற்றிட்டங்களைப் பார்வையிட்ட பின்னர் மட்டக்களப்பு மாவட்ட செயலகத்தில் இடம்பெறும் கூட்டத்துக்காக வருகைதந்துள்ளனர். இந்த நிலையில் வந்தாறுமூலை, அம்பலத்தடிக் கருகில் வீதியைக் கடக்க முனைந்த தாய் மற்றும் இரு பிள்ளைகள் மீது அந்த தொடரணியில் வந்த ஐக்கிய நாடுகள் சபைக்குச் சொந்தமான வாகனம் ஒன்று மோதியுள்ளது.

இதன்போது குறித்த தாய் சம்பவ இடத்திலேயே உயிரிழந்துள்ளதுடன் இரு பெண் பிள்ளைகளும் படுகாயமடைந்த நிலையில் செங்கலடி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு மேலதிக சிகிச்சைகளுக்காக மட்டக்களப்பு போதனா வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டுள்ளனர்.

விபத்தில் பெரிய தம்பிரான் வீதி வந்தாறுமுலையைச் சேர்ந்த பொன்னுத்துரை ஜீவா (வயது -30) என்ற இரண்டு பிள்ளைகளின் தாயே உயிரிழந்துள்ளார். மாணவிகளான சிவலிங்கம் சிந்துகா (வயது -12) ,சுமதி (வயது -08) ஆகிய இருவரும் படுகாயமடைந்து வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இதேவேளை குறித்த பகுதியில் ஐக்கிய நாடுகள் சபையின் வாகனத்தின் மீது பொதுமக்கள் தாக்குதல் மேற்கொண்ட வேளையில் படையினர் - பொதுமக்கள் மீது தாக்குதல் நடத்தியுள்ளதாகவும், அதனால் சில இளைஞர்கள் காயமடைந்துள்ளதாகவும் பிரதேசத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இதன் காரணமாக அப் பகுதியில் பெரும் பதற்ற நிலைமையேற்பட்டுள்ளதுடன் போக்குவரத்துக்களும் பாதிக்கப்பட்டுள்ளதாக அப் பகுதித் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இந்த விடயம் தொடர்பாக ஏறாவூர் பொலிஸ் நிலையத்துடன் தொடர்பு கொண்டுகேட்டபோது, குறித்த சம்பவம் இடம்பெற்ற இடத்திற்குப் பொலிஸார் சென்றிருப்பதாகவும் தற்போது வரை தமக்கு அது தொடர்பான விவரங்கள் கிடைக்கவில்லை எனவும் தெரிவித்தனர். (த)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சுக்கான் உடைந்ததில் அந்தரித்த குமுதினி

யாழ்ப்பாணம், மே 3

குறிகாட்டுவானில் இருந்து நேற்றுக் காலை 8.30 மணிக்கு நெடுந்தீவுக்குப் பயணிகளுடன் சென்று கொண்டிருந்த குமுதினிப் படகு நடுக் கடலில் சுக்கான் 'திறட்' உடைந்ததில் அந்தரித்தது.

இதனால் பயணத்தைத் தொடரமுடியாத நிலையில் கஷ்டம் அடைந்ததாக ஊழியர்கள் குறிப்பிட்டனர்.

குறித்த திரட்டைப் பூட்ட முடியாத நிலையில் பிடித்தபடி படகைக் கரை சேர்த்ததாகவும் மக்கள் தெரிவித்தனர்.

படகு பழுதடைந்ததைத் தொடர்ந்து பிற்பகல் 2 மணிக்குப் புறப்படும் வட தாரகை பிற்பகல் 3.30 மணிக்குப் புறப்படும் என்று அறிவிக்கப்பட்டது.

**வேறு சேவைகள் இன்மையால் மக்கள் ஏமாற்றம்**

எனினும் வடதாரகை 2.45 மணிக்கே நெடுந்தீவில் இருந்து குறிகாட்டுவானுக்குப் புறப்பட்டு விட்டதால் 3.30 மணிக்குச் செல்வதற்காகத் துறைமுகத்துக்கு வந்த பயணிகள் பெரும் சிரமம் அடைந்தனர்.

வேறு சேவை இன்மையால் ஏமாற்றமடைந்து திரும்பி வீட்டுக்குச் சென்றதாகவும் கூறப்பட்டது. (ம-7)

# கட்டட வசதி இல்லாத கோப்பாய் மீன் சந்தை

### மரத்தின் கீழேயே விற்பனை

யாழ்ப்பாணம்,மே 3

கோப்பாய் பகுதியில் மீன் சந்தைக் கட்டடம் இல்லாததால் மீன் விற்பனையில் ஈடுபடுபவர்கள் பெரும் சிரமங்களை எதிர்கொண்டு வருகின்றனர்.

கோப்பாய் சந்திக்கும் மானிப்பாய் வீதி இராசபாதைச் சந்திக்கும் இடைப்பட்ட பகுதியில் ஒரு மரத்தின் கீழ் இருந்தே மீன் விற்பனையில் ஈடுபட்டு வருகின்றனர்.

மழைக் காலங்களில் மீன்விற்பனையில் ஈடுபடுபவர்களும் நுகர்வோரும் பெரும் சிரமங்களை எதிர்கொண்டு வருகின்றனர்.

கோப்பாய் மீன் சந்தைக் கட்டடம் ஒன்று முன்னர் இருந்ததாகவும் அது இயங்காத நிலையில் அதாவது மீனை வாங்குவதற்கு மக்கள் அங்கு வராத நிலையில் அந்தக் கட்டடம் செயலிழந்து இருப்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

**கோப்பாய் சந்திக்கும் மானிப்பாய் வீதி இராச பாதைச் சந்திக்கும் இடைப் பட்ட பகுதியில் ஒரு மரத்தின் கீழ் இருந்தே மீன் விற்பனை நடைபெறுகிறது.**

கோப்பாய் சந்தியில் இருந்து ஒரு கிலோ மீற்றர் தூரத்தில் அந்த மீன் சந்தைக் கட்டடம் உள்ளதால் மக்கள் அங்கு செல்ல முடியாத நிலை ஏற்பட்டதாகவும் தெரி விக்கின்றனர்.

தற்போதைய மீன்சந்தை மக்கள் குடியிருப்புக்கு அண்மையில் இருப்பதால் மீனை விற்பனை செய்ய முடிகிறது என்று மீன் வியாபாரிகள் தெரிவிக்கின்றனர்.

ஆகவே சம்பந்தப்பட்ட தரப்பினர் இந்த விடயத்தில் அக்கறை எடுத்து மீன் விற்பனைக் கட்டடம் ஒன்றை அமைத்துத் தருமாறு கேட்டுள்ளனர். (எ)

# மீளக்குடியமர்ந்த பகுதியில் குடும்ப வன்முறை அதிகரிப்பு

### விசாரணை அதிகாரி தெரிவிப்பு

யாழ்ப்பாணம்,மே. 3

மக்கள் மீளக்குடிமயர்ந்துள்ள பகுதிகளில் குடும்ப வன்முறைகள் அதிகரித்துக் காணப்படுகின்றன என்று மனித உரிமைகள் ஆணைக் குழுவின் யாழ்.பிராந்திய அலுவலக விசாரணை அதிகாரி வி.வசந்தராஜ் தெரிவித்தார்.

இந்த விடயம் தொடர்பாக அவர் மேலும் தெரிவித்ததாவது:-

யாழ்.மாவட்டத்தில் மக்கள் மீளக்குடியமர்ந்துள்ள பகுதிகளில் குடும்ப வன்முறைகள் அதிகரித்துக் காணப்படுகின்றன. இவ்வாறு அதிகரித்துச் செல்வது கவலை அளிப்பதாக உள்ளது.

இரண்டு மாதங்களில் 8 பேரை இந்த விடயம் தொடர்பாகச் சந்திக்க வேண்டிய சூழல் ஏற்பட்டது. இவர்கள் சட்ட ரீதியாக உரிமைப் பிரச்சினையை வலியுறுத்தி எம்மை அணுகினர்.

குடும்ப வன்முறை தடுப்புச் சட்ட நிவாரணம் ஒரு போதும் குடும்ப வன்முறைக்குத் தீர்வாகாது. இந்தச் சட்டம் குடும்பங்களை வறுமைக்கே இட்டுச் செல்லுமே தவிர ஒருபோதும் குடும்ப ஆரோக்கியத்துக்குத் தீர்வாக அமையாது.

குடும்பம் பிரிவின்றி ஒற்றுமையுடன் வாழக் கூடிய நிலைமை ஏற்படுத்தப்பட வேண்டும். இதற்கான ஆக்கபூர்வமான நடவடிக்கை எடுக்க வேண்டும்.

குடும்பங்களின் சுய பொருளாதார மேம்பாட்டுக்கான உதவிகள் வழங்கப்பட்டு குடும்பத் தலைவன் அல்லது தலைவி உளவியல் ரீதியாக ஆற்றுப்படுத்தல் செயற்பாட்டுக்கு உட்படுத்தப்பட வேண்டும்.- என்றார். (எ-3)



சுதந்திர ஊடகக் குரல் நேற்று நடத்திய ஒளிப்படக் கண்காட்சியில் அனைவரது மனங்களிலும் இடம்பிடித்து முதலிடம் பெற்ற புகைப்படம்

எஸ். சுரேஸ்
மீசாலை மேற்கு, சாவகச்சேரி.

# இளம் ஊடகவியலாளருக்கு களம் கொடுத்த ஊடகக் குரல்

### 'சிலோன் ருடே' பத்திரிகையின் மூத்த செய்தி ஆசிரியர் அனந்த் பாலகிருஷ்ணன்

யாழ்ப்பாணம், மே 3

சுதந்திர ஊடகக் குரல் மிகக் குறுகிய காலத்தில் வடக்கில் ஒளிப்படக் கண்காட்சியை நடத்தி இளம் ஊடகவியலாளர்களுக்கு களம் அமைத்துக் கொடுத்துள்ளது. இது பாராட்டத்தக்க விடயமாகும்.



பத்திரிகைத் துறைக்கு இவ்வாறான கண்காட்சி மிகவும் அவசியமானதாகும்.

இலங்கைத் தமிழ் ஊடகவியலாளர் ஒன்றியத் தலைவரும் 'சிலோன் ருடே' பத்திரிகையின் மூத்த செய்தி ஆசிரியருமான அனந்த் பாலகிருஷ்ணன் இவ்வாறு தெரிவித்தார்.

சுதந்திர ஊடகக் குரல் நடத்திய ஒளிப்படக் கண்காட்சி நேற்று நல்லூர் தியாகி அறக்கொடை நிலைய மண்டபத்தில் இடம்பெற்றது. இதில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு உரை நிகழ்த்தும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.





சுதந்திர ஊடகக் குரல் அமைப்பின் தலைவர் இரா.புத்திரசிகாமணி தலைமையில் இடம்பெற்ற இந்த நிகழ்வில் 'சமாதானமும் நல்லிணக்கமும்' என்ற தொனிப்பொருளில் தத்ரூபமாக எடுக்கப்பட்ட சுமார் 70 ஒளிப்படங்கள் காட்சிப்படுத்தப்பட்டன.

இளம் ஊடகவியலாளர்களால் எடுக்கப்பட்ட பல ஒளிப்படங்களும் இதில் காட்சிப்படுத்தப்பட்டன.

இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு நிகழ்வை நாடாவெட்டி ஆரம்பித்த அனந்த பாலகிருஷ்ணன் தொடர்ந்து உரை நிகழ்த்தும் போது தெரிவித்ததாவது:-

தலைநகரில் இடம் பெற்ற ஒளிப்படக் கண்காட்சிகளில் காட்சிப்படுத்தப்பட்ட பல்வேறுபட்ட புகைப்படங்களை நான் பார்த்துள்ளேன். அவற்றை விட சுதந்திர ஊடகக் குரல் யாழ்ப்பாணத்தில் ஏற்பாடு செய்துள்ள இந்தக் கண்காட்சியில் தத்ரூபமாக-கருத்தாழம் மிக்க ஒளிப் படங்கள் காட்சிப்படுத்தப் பட்டுள்ளன. இளம் ஊடகவியலாளர்களுக்கு களம் அமைத்துக் கொடுத்திருக்கும் இவ்வாறான ஒளிப்படக் கண்காட்சி தொடர்ந்தும் பெரியளவில் இடம்பெற வேண்டும்.

சிறிய டிஜிற்றல் கமரா மூலம் மிகத் துல்லியமான - தத்ரூபமான ஒளிப்படங்கள் எடுக்கப்பட்டு காட்சிப்படுத்தப்பட்டிருப்பதை பார்த்து நான் வியப்படைகிறேன்.- என்றார்.

ஒருநாள் ஒளிப்படக் கண்காட்சியாக இடம்பெற்ற இந்த நிகழ்வில் ஊடகவியலாளர்கள், ஊடக பயிற்சி மாணவர்கள், பொதுமக்கள் எனப் பலர் கலந்து கொண்டனர்.

இதேவேளை, இன்று வியாழக்கிழமை காலை 9.30 மணிக்கு ஊடகவியலாளர் கௌரவிப்பு நிகழ்வு நாவலர் கலாசார மண்டபத்தில் இடம்பெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம-3)

# மின் நிலுவை 200 மில்லியன் அறவீடு

யாழ்ப்பாணம்,மே. 3

வடமாகாணம் முழுவதும் இந்த வருடம் முதல் 3 மாத காலப் பகுதியில் மின் நிலுவைப் பணமாக 200 மில்லியன் ரூபா அறவிடப்பட்டுள்ளது என மின்சார சபை வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

இந்த விடயம் சம்பந்தமாக மின்சார சபை வட்டாரங்கள் மேலும் தெரிவித்ததாவது:-

வடமாகாணம் முழுவதும் 3 மாதங்க [illegible] ஆயிரம் ரூபாவுக்கு மேற்பட்ட தொகையை உடைய மின்பாவனையாளர்களுக்கு நிலுவை நோட்டீஸ் அனுப்பப்பட்டது.

இந்த நிலுவை நோட்டீஸ் கடந்த முதலாம் திகதி தொடக்கம் அனுப்பப்பட்டுள்ளது. வடமாகாணம் முழு வதும் 25 ஆயிரம் பேருக்கு நிலுவை நோட்டீஸ் அனுப்பப்பட்டுள்ளது.

நிலுவை நோட்டீஸ் கிடைக்கப் பெற்று 3 நாள்களுக்குள் மின்கட்டணம் செலுத்தாது விட்டால் மின் துண்டிக் [illegible] எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் தபால் நிலையங்கள் மற்றும் வங்கிகள் ஆகியவற்றில் மின் கட்டணம்செலுத்தப்பட்டால் அவற்றை மின் நிலையங்களில் கொடுத்து சரிபார்த்துக் கொள்ள வேண்டும். இது தவறும் பட்சத்தில் மின் துண்டிப்பதற்காக வரும் அதிகாரிகளிடம் மின் நிலுவை செலுத்தப்பட்ட சிட்டைகள் காண்பிக்க வேண்டும்.

3 நாள்களுக்குள் மின் கட்டணம் செலுத்தாது துண்டிக்கப்பட்டால் மீண்டும் நிலுவைப் பணத்தோடு 2 வீதம் அதிகம் செலுத்த வேண்டும் என்று மின்சார சபை வட்டாரங்கள் மேலும் தெரிவிக்கின்றன. (எ-13)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொலிஸ், காணி அதிகாரம் இல்லாத தீர்வை சம்பந்தன் நிச்சயம் ஏற்பார்

## சிங்கக்கொடி பேற்றிக் காட்டிவிட்டார் என்கிறது தேசப்பற்றுள்ள இயக்கம்

இன்று தேசியக் கொடியைக் கையிலேந்திய சம்பந்தன், நாளை பொலிஸ், காணி அதிகாரங்கள் இல்லாத தீர்வொன்றையும் நிச்சயம் ஏற்பார். எனவே, கூட்டமைப்பின் கோரிக்கைகளுக்கு அரசு அடிபணியக்கூடாது என தேசப்பற்றுள்ள தேசிய இயக்கம் தெரிவித்துள்ளது.

பொது எதிரணியின் யாழில் நடைபெற்ற மேதினக் கூட்டம் தொடர்பில் கருத்து வெளியிடும்போதே தேசப்பற்றுள்ள தேசிய இயக்கத்தின் தலைவர் கலாநிதி குணதாச அமரசேகர மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் கூறியவை வருமாறு:-

சம்பந்தன் தேசியக் கொடியை ஏந்துகின்றார் என்றால் அதில் ஏதோ ஒரு காரணம் இருக்கின்றது என்பதை நாம் முதலில் புரிந்துகொள்ளவேண்டும். அரசுக்கெதிராக சூழ்ச்சிகளை மேற்கொண்டுவரும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு இன்று அரசியல் யுத்தத்தில் அரசுடன் தோல்வியுறும் கட்டத்துக்கு வந்துள்ளது.

அதனால்தான், தேசியக் கொடியை கையிலேந்தி ஆதரவு சமிக்ஞையைக் காட்டுவது போல் அடைக்கலம் கோரியுள்ளார் சம்பந்தன். இந்தச் சந்தர்ப்பத்தை அரசு பயன்படுத்திக்கொள்ளவேண்டும் - என்றார்.

# புலிகளைக் கைதுசெய்து ஒப்படைக்க இன்ரபோலிடம் இலங்கை கோரிக்கை

01↘ இறங்கியுள்ளது. அரசியல்தஞ்சம்அடைந்துள்ள புலி உறுப்பினர்கள் மீண்டும் அந்த அமைப்பின் செயற்பாடுகளை ஆரம்பிக்கும் நோக்கில் பிரசாரங்களை முன்னெடுத்துவருகின்றனர் என்றும், அதனைத் தடுத்து நிறுத்தாவிட்டால் மீண்டும் பயங்கரவாதம் தலைதூக்கும் என்றும் விமர்சனங்கள்எழுந்துள்ளமையை அடுத்தே முன்னோடி நடவடிக்கையாக இலங்கை அரசு இன்டபோலுக்கு கடிதம் எழுதியுள்ளது எனத் தெரியவருகின்றது.

## புலிகளுக்கு உதவிய குற்றச்சாட்டில் தமிழருக்கு 15 ஆண்டுகள் சிறை

01↘ தடைசெய்யப்பட்ட இயக்கமான புலிகள் இயக்கத்தின் நடவடிக்கைகளுக்கு உதவுவதற்கான உபகரணக் கொள்வனவில் நமணன் மயில்வாகனம் ஈடுபட முற்பட்டது மிகத் தீவிர குற்றம் என்று நியுயோர்க் நீதிமன்றில் தண்டனை வழங்கப்பட்ட அறிக்கையில் சட்டத்தரணி லொறேற்றா லின்ஞ்ச் குறிப்பிட்டுள்ளார்.

இலங்கையில் உள்நாட்டு யுத்தம் முடிவுக்கு வந்துள்ள நிலையில், தற்போது குற்றம் சாட்டப்பட்டு சிறைத்தண்டனை வழங்கப்பட்டுள்ள நமணன் மயில்வாகனம் என்பவர் அரசியல் செயற்பாடுகளில் பங்குபற்றவில்லை என்பதால், காலத்தைக் கருத்திற்கொண்டு இவருக்கு வழங்கப்பட்டுள்ள தண்டனையைக் குறைத்து இவரை விடுதலை செய்யுமாறு நீதிபதியிடம், வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது.

இவருக்கான தண்டனைக் காலம் கடந்த வெள்ளியன்று அறிவிக்கப்பட்டது. 35 வயதான மயில்வாகனம் புலிகளுக்காக இரவு நோக்குக் கண்ணாடிகளைக் கொள்வனவு செய்ய முற்பட்டார் எனக் குற்றம் சாட்டப்பட்டுள்ளார்.

வொஷிங்டனில் வேலை செய்த காலப்பகுதியிலேயே இவரால் சில குற்றங்கள் மேற்கொள்ளப்பட்டன எனக் கூறப்பட்டுள்ளது.

இதனாலேயே அமெரிக்க நீதித்துறை இவருக்கு 15 ஆண்டு கால சிறைத் தண்டனை வழங்க வேண்டும் என விரும்புகின்றது.

நமணன் மயில்வாகனத்தின் வழக்குத் தொடர்பாக கருணை காட்டுமாறு இவரது பதினொரு நண்பர்களும், குடும்பத்தவர்களும் நீதிபதியிடம் கோரியுள்ளனர்.

நாளைமறுதினம் 4 ஆம் திகதி மயில்வாகனம் வீட்டுக்குத் திரும்பி வருவார் என இவரது சகோதரனான ராகவன் கதிரவேற்பிள்ளை நம்பிக்கை வெளியிட்டுள்ளார்.

"நாங்கள் மயில்வாகனம் வீடு திரும்ப வேண்டும் என ஒவ்வொரு கணமும் இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்" என அவர் மேலும் தெரிவித்தார்.

மயில்வாகனம் தனது தந்தையை இழந்த பின்னர் தனது குடும்பப் பாரத்தைச் சுமப்பதாக நீதிபதிக்கு வழங்கப்பட்ட கடிதங்களில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இவர் தனது 12 ஆவது வயதில் கனடாவுக்கு குடிபெயர்ந்ததுடன், வோட்டர்லூ பல்கலைக்கழகத்தில் கல்வி கற்றார்.

## யாழ். – கொழும்பு பஸ்களுக்கு புதிய விதிமுறை

01↘ தெரிவித்திருப்பவை வருமாறு -

யாழ். - கொழும்பு இடையே போக்குவரத்தில் ஈடுபடுவதற்கு 155 பஸ்களுக்கு அனுமதிப்பத்திரம் வழங்கப்பட்டுள்ளன. விலைமனுக்களின் ஊடாக கொள்வனவு செய்யப்பட்ட பஸ்கள் தவிர்ந்த 48 பஸ்கள் அனுமதிப்பத்திரங்கள் இன்றி போக்குவரத்தில் ஈடுபட்டு வருகின்றன. இதனால் பல்வேறு பிரச்சினைகளை எதிர்நோக்க வேண்டியுள்ளது.

தற்போது பெஸ்தியன் மாவத்தை, வெள்ளவத்தை மற்றும் கெட்டாஞ்சேனை ஆகிய இடங்களில் மூன்று பஸ் தரிப்பிடங்கள் காணப்படுவதால் பயணிகளுக்கும் பஸ் உரிமையாளர்களுக்கும் பல்வேறு பிரச்சினைகள் எதிர்நோக்கி வருகின்றனர். பல்வேறு இடங்களில் ஆசனப் பதிவுகளின் போது முறைகேடுகள் இடம்பெறுவதனைக் கருத்திற்கொண்டே இப்புதிய நடவடிக்கை எடுக்கப்பட்டது - என்றார் அவர்.

# அடுத்த வாரம் இந்தியா விரைகிறது கூட்டமைப்பு

01↘ தலைமையில் இந்தக் குழு அங்கு செல்கிறது.

இந்தக் குழுவினர் இந்தியாவில் பல்வேறு அரசியல் கட்சிகளின் தலைவர்களையும் சந்தித்து கலந்துரையாடல்களை மேற்கொள்ளவுள்ளதாகத் தெரியவருகிறது.

இலங்கையில் இனப்பிரச்சினைக்கு தீர்வு காண்பது தொடர்பில் தற்போது உள்ள தடைகள், இலங்கை அரசின் நிலைப்பாடு மற்றும் தமிழ் மக்களின் அன்றாடப் பிரச்சினைகள், இடம்பெயர்ந்துள்ள மக்களின் மீளக்குடியமர்வு, அவர்களுக்கான அடிப்படை வசதிகளை ஏற்படுத்துதல் என்பன உட்பட பல விடயங்கள் குறித்து கூட்டமைப்பின் பிரதிநிதிகள் இந்திய அரசியல் தலைவர்களுடன் கலந்துரையாடுவர் என்று கூறப்படுகிறது.

இந்திய எதிர்க்கட்சித் தலைவி சுஷ்மா சுவராஜ் தலைமையிலான இந்திய நாடாளுமன்றக் குழு இலங்கைக்கு பயணம் செய்து இங்குள்ள நிலைமைகளை பார்வையிட்ட பின்னர் இந்திய அரசின் நிலைப்பாட்டை அறிந்து கொள்வதும் இந்தப் பயணத்தின் நோக்கம் என்று தெரியவருகிறது.

கூட்டமைப்புக்குழு இந்தியா பயணமாகின்றபோதும் அவர்கள் அங்கு யார் யாரை சந்தித்துப் பேசுவர் என்ற விவரங்கள் எதுவும் வெளியிடப்படவில்லை. (த)

# தெரிவுக்குழுவில் பங்கேற்க கூட்டமைப்புக்கு அழுத்தம்

01↘ தர அரசியல் தீர்வு நாடாளுமன்றத் தெரிவுக்குழு மூலமே எட்டப்பட வேண்டும் என்பதில் ஜனாதிபதியும் அவர் சார்ந்த குழுவினரும் உறுதியாக உள்ளனர். அரசியல் தீர்வு வேண்டுமாக இருந்தால் தெரிவுக்குழுவுக்கு வாருங்கள் என்று அரசு, கூட்டமைப்பிடம் தொடர்ந்து கோரிவருகிறது. அண்மையில் இலங்கைக்கு பயணம் செய்த இந்திய நாடாளுமன்ற குழுவுடனான சந்திப்பிலும் ஜனாதிபதி மஹிந்த இதனைத் தெரிவித்திருந்தார். கூட்டமைப்பு தெரிவுக்குழுவுக்கு வருவதற்கு இந்தியா அழுத்தங்களைப் பிரயோகிக்க வேண்டும் எனவும் அவர் அந்தக் குழுவிடம் கேட்டுக் கொண்டார்.

எனினும் தெரிவுக்குழு விடயத்தில் கூட்டமைப்பு இதுவரை உறுதியாக எதனையும் தெரிவிக்கவில்லை. அரசின் தீர்வுத் திட்டம் என்ன என்பதை வெளிப்படுத்தினால் மட்டுமே தெரிவுக்குழுவுக்கு வரமுடியும் என கூட்டமைப்பு தெரிவித்துவந்தது.

இந்த நிலையில் தெரிவுக் குழுவில் பங்கேற்குமாறு இந்திய, அமெரிக்க தரப்புக்கள் கூட்டமைப்பின் தலைமையைக் கேட்டுக்கொண்டுள்ளதாக அறிய முடிகின்றது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தெரிவுக்குழுவுக்கு வராமையால் தான் அரசியல் தீர்வு தாமதமடைவதாக ஜனாதிபதி கூறிவருகிறார். அதனை அவர் ஒரு சாட்டாகப் பயன்படுத்துகிறார். தெரிவுக்குழுவுக்கு கூட்டமைப்பு வந்தால் 6 மாத காலத்தில் நிரந்தர அரசியல் தீர்வு எட்டப்படும் என அவர் சர்வதேசத் திடமும் உறுதியளித்திருக்கிறார். இந்த நிலையில் கூட்டமைப்பு தெரிவுக்குழுவில் பங்கேற்பதன் மூலம் அரசு அரசியல் தீர்வை வழங்காமல் இழுத்தடிப் [illegible] என இந்திய, அமெரிக்க அரசுகள் கூட்டமைப்பிடம் சுட்டிக்காட்டியுள்ளன. இப்போது தெரிவுக்குழுவுக்குச் சென்று இந்த ஆண்டு இறுதிவரையான 6 மாத காலப்பகுதியில் அரசுக்கு ஒரு அவகாசமாக வழங்கிப் பார்க்கலாம் எனவும் அவை எடுத்துரைத்துள்ளன.

இந்த அழுத்தங்களை அடுத்து தெரிவுக்குழுவில் கூட்டமைப்பு பங்கேற்பதற்கான சாத்தியப்பாடுகள் அதிகம் உள்ளதாகவும் அது தொடர்பில் கூட்டமைப்பு விரைவில் அறிவிப்பு ஒன்றை வெளியிடும் எனவும் ராஜதந்திர வட்டாரங்களில் இருந்து மேலும் அறிய முடிகிறது. (த)

# இலங்கை வந்த இந்தியக் குழுவை அவசரமாக சந்திக்கிறார் மன்மோகன்

01↘ டம் வழங்கவில்லை என இலங்கை அரசு மறுத்திருந்தது.

இதனையடுத்து இந்தியக் குழுவில் இடம்பெற்றிருந்த நாடாளுமன்ற உறுப்பினர்கள் அனைவரையும் இன்று சந்திக்கச் சுஷ்மா சுவராஜ் ஏற்பாடு செய்திருந்த நிலையிலேயே, பிரதமர் மன்மோகன் சிங் இவர்களை இன்று அவசரமாக சந்தித்துப் பேச்சு நடத்தவுள்ளார்.

இலங்கை விவகாரம் தொடர்பில் பிரதமர் மன்மோகன் சிங் இந்திய நாடாளுமன்ற உறுப்பினர்கள் குழுவிடம் கேட்டறியவுள்ளதாகப் புதுடில்லித் தகவல்கள் தெரிவிக்கின்றன. முன்னதாக, தமது இலங்கைப் பயணம் தொடர்பில் மக்களவை எதிர்க்கட்சித் தலைவர் சுஷ்மா சுவராஜ் மற்றும் தமிழகக் காங்கிரஸ் கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்கள் நால்வரும் பிரதமர் மன்மோகன் சிங்குக்கு விளக்கிக் கூறியிருந்தனர். (த)

# இரு ஆசனங்களை ஐ.தே.க. கூட்டமைப்புக்கு வழங்கும்

01↘ நாடாளுமன்றத் தெரிவுக்குழுவில் எதிர்க்கட்சிகளுக்கு 12 ஆசனங்கள் வழங்கப்பட்டுள்ளன. அவற்றில் ஒன்று ஜே.வி.பிக்கு உரியது. ஐ.தே.கவுக்கு 8 ஆசனங்களும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு 3 ஆசனங்களும் வழங்கப்பட்டுள்ளன.

தெரிவுக்குழுவில் தமிழர்களின் பங்களிப்பையும் பலத்தையும் அதிகரிக்கச் செய்வதற்காக ஐ.தே.கவுக்கு உள்ள 8 ஆசனங்களில் 2 ஆசனங்களை கூட்டமைப்புக்கு வழங்குவதன் மூலம் அவர்களின் ஆசனங்களை 5ஆக உயர்த்துவதற்கு விருப்பம் கொண்டுள்ளதாகவும் இதன் மூலம் கூட்டமைப்பிலிருந்து அதிக பிரதிநிதிகள் தெரிவுக் குழுவுக்கு செல்லக்கூடிய சந்தர்ப்பம் ஏற்படும் எனவும் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்ததாக ஐ.தே.க. வட்டாரங்களிலிருந்து தெரியவருகிறது.

கூட்டமைப்பு தெரிவுக்குழுவில் பங்கேற்றால் ரணில் இந்த விட்டுக்கொடுப்பை மேற்கொள்வதற்குத் தயாராக இருக்கிறார் என்று அந்த வட்டாரங்கள் மேலும் கூறின. (த)

# அரிய சந்தர்ப்பத்தை கைநழுவ விடாதீர்

01↘ மாக்கவும் வழிவகுக்கக்கூடியவையாக உள்ளன. இதன் மூலம் சர்வதேச மட்டத்தில் உருவாகி வரும் கடுமையான அழுத்தங்களையும் முறியடிக்க முடியும்.

இவ்வாறு இலங்கை கத்தோலிக்க ஆயர்பேரவை கோரிக்கை விடுத்துள்ளது.

கருதிணல் மல்கம் ஆண்டகை, பேராயர் எம்.ஹேபேட் அந்திராடி ஆண்டகை ஆகிய இருவரும் கூட்டாக இந்தக் கோரிக்கையை விடுத்துள்ளனர்.

ஆணைக்குழுவின் பரிந்துரைகளை அரசு தன்னிடமுள்ள அதிகாரங்கள் அனைத்தையும் பிரயோகித்து மிக ஆழமாகப் பரிசீலிக்குமாறு நாம் வற்புறுத்துகிறோம். இன்றைய காலகட்டத்தில் அமைதியும், மீள் நல்லிணக்கமும் மிக முக்கியமானவையாகவும் அவசரமானவையாகவும் உள்ளன என்றும் அவர்கள் தெரிவித்துள்ளனர்.

இது தொடர்பாக அவர்கள் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

அரசு இன்றைய நிலையில் நல்லிணக்கத்துக்கும் சமாதானத்துக்குமான பாதையில் நாட்டை அழைத்துச் செல்லக்கூடிய சில அடையாளங்களையும் நடவடிக்கைகளையும் வெளிப்படுத்த வேண்டும் என்று ஆர்வத்துடன் நாம் கேட்டுக்கொள்கின்றோம்.

பரிந்துரைகளின் ஒரு சிலவற்றை நாம் இங்கு சுட்டிக்காட்ட விரும்புகின்றோம். ஆணைக்குழுவின் அறிக்கை பொதுமக்கள் மத்தியில் விநியோகிக்கப்பட வேண்டும். ஆணைக்குழுவின் பரிந்துரைகள் நாட்டின் இரண்டு அரச கரும மொழிகளிலும் மொழிபெயர்க்கப்படல் வேண்டும். சிங்களம் மட்டும் என்ற நிலையிலிருந்து நகர்ந்து மொழி தொடர்பான பிரச்சினைகளை நாம் ஆழமாகக் கவனத்தில் எடுத்துத் தீர்த்துக்கொள்ள வேண்டும். சம்பந்தப்பட்ட அனைவரும் நல்லாட்சி நடைபெறுவதை நிலைநாட்ட வேண்டும்.

சட்டவிரோத ஆயுதக் குழுக்களின் ஆயுதங்கள் களையப்பட வேண்டும். காணாமல் போயுள்ளவர்கள் தொடர்பான வேதனைக்குரிய பிரச்சினையில் கவனம் செலுத்தும்படியும் இன்னும் காவலில் உள்ளவர்களின் விவரப்பட்டியலை வெளியிடும்படியும் நாம் அரசை வற்புறுத்துகிறோம். இது மக்கள் தமது உறவினர்கள் இருக்கிறார்களா? இல்லையா? என்பதை அறிந்து கொள்ள உதவும். காவலில் இல்லாதவர்களுக்கு என்ன நேர்ந்தது என்பதற்கான பொறுப்புக் கூறுவதற்கு அரசு கடமைப்பட்டிருக்கின்றது. மக்களின் தகவல் அறிந்து கொள்ளும் உரிமை கௌரவிக்கப்பட வேண்டும். தாம் அன்பு செலுத்தியவர்கள் இழக்கப்பட்டுவிட்டமை குறித்து மக்கள் துன்பமுறுவதை நாம் அங்கீகரிக்க வேண்டும். இது எல்லா மனிதர்களுக்கும் உரிய சட்டபூர்வமான ஆழம் பொதிந்த தேவைப்பாடாகும். இது தெரிய வந்துவிட்டால் மக்கள் எதிர்காலத்தை நோக்கி வாழ்க்கையில் முன்னேற உதவும்.

பரிந்துரைகளை கவனமாகப் பரிசீலித்து உத்தேச நடைமுறைச் செயற்பாடுகளைக் கவனிப்பதற்கென பொறுப்புள்ளவர்களைக் கொண்ட அமைப்பொன்றை உருவாக்குமாறும் அரசைக் கேட்டுக்கொள்கின்றோம் - என்றுள்ளது. (த-ப)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

## படிப்பது தேவாரம் இடிப்பது சிவன் கோவில் என்ற நிலையில் இங்கு ஊடக சுதந்திரம்

இன்று உலக பத்திரிகைச் சுதந்திர தினம். வருடம் தோறும், மே 3ஆம் திகதி உலக பத்திரிகைச் சுதந்திர தினமாக அனுஷ்டிக்கப் படுகிறது.

பேச்சுச் சுதந்திரமும், கருத்துச் சுதந்திரமும் ஒரு நாட்டின் ஜனநாயகத்துக்கும் நல்லாட்சிக்கும் அவசியமானவை என்று யுனெஸ்கோ பணிப்பாளர் நாயகம் ஐரினா பொகோவா ஒரு சமயம் தெரிவித்திருந்தார். ஆனால் பல நாடுகளில் இந்தச் சுதந்திரங்கள் பறிக்கப்பட்டுவிட்டன. ஊடகவியலாளர்கள் அச்சத்துடன் வாழ்கின்றனர். இலங்கையும் கடந்த பல வருடங்களாக அந்த வரிசையில் இடம்பிடித்து வருகிறது.

ஒரு நாட்டின் ஜனநாயகத்தில், பத்திரிகைச் சுதந்திரம் பிரதான பங்கு வகிக்கிறது. இலங்கையில் இப்போது செய்தித் தணிக்கை கிடையாது. ஆனால், பத்திரிகையாளர்கள் தாமாகவே செய்திகளைத் தணிக்கை செய்து பிரசுரிக்கும் அளவுக்கு அச்சத்துடன் பணியாற்றுகின்றனர். உண்மையை வெளிப்படுத்தினால் கொலைசெய்யப்படுகின்றனர், காணாமற்போகச் செய்யப்படுகின்றனர், அச்சுறுத்தப்படுகின்றனர்.

அரசுகளை, சமூகத்தை, மக்களுக்குரிய குறைகளை மாற்றி அமைப்பதில் ஊடகங்கள் பெரும்பங்கு வகிக்கின்றன. மத்திய கிழக்கு நாடுகளில் ஏற்பட்ட எழுச்சியிலும் அரசுகளின் வீழ்ச்சியிலும் ஊடகங்கள் பிரதான பங்கு வகித்துள்ளன.

உலகில் பத்திரிகைச் சுதந்திரத்தைப் பேணுவதில் பின்லாந்து, நோர்வே ஆகியவை முன்னிலை வகிக்கின்றன. 178 நாடுகளில் மேற்கொள்ளப்பட்ட ஆய்வில் இலங்கை 163 ஆவது இடத்தில் இருக்கிறது. இந்த நாட்டில் உண்மையான ஜனநாயகம் நிலவவில்லை என்ற மறுக்க முடியாத நிலையை அது வெளிப்படுத்துகிறது.

உலக பத்திரிகைச் சுதந்திரத்தைப் பேணுவதில் நீண்ட காலமாக, இலங்கை மிகவும் கீழ் நிலையில் உள்ளதாக, பிரான்ஸைத் தளமாகக் கொண்டு இயங்கும் எல்லைகளற்ற ஊடகவியலாளர் அமைப்பு குற்றஞ்சாட்டுகிறது. தமக்குரிய கடமையை, மக்களுக்கு ஆற்றவேண்டிய பணியைச் செய்யும் ஊடகவியலாளர்களே, பத்திரிகையாளர்களே கொல்லப்படுகின்றனர்; காணாமற்போகச் செய்யப்படுகின்றனர். உயிர் அச்சுறுத்தல் காரணமாக இலங்கையின் ஊடகவியலாளர்கள் பலர் வெளிநாடுகளில் தஞ்சம் அடைந்துள்ளனர். இதனால் இலங்கை பல திறமையான பத்திரிகையாளர்களை இழந்துவிட்டது. இழந்து வருகிறது. ரிச்சர்ட் டி சொய்ஸா, சிவராம், நிமலராஜன், லசந்த விக்கிரமதுங்க ஆகியோர் இலங்கையில் கொலை செய்யப்பட்ட பத்திரிகையாளர்களில் அடங்குகின்றனர்.

போர்க் காலத்தில் 'உதயன்' பத்திரிகை விமானக்குண்டுத் தாக்குதலுக்கு உள்ளாகியது. கிரைனைட் தாக்குதலுக்கு உள்ளாகியது. உதயனில் பணியாற்றிய ஐந்து பேர்வரை கடமையின் போது சுட்டுக்கொல்லப்பட்டுள்ளனர். ஒருவர் காணாமற் போய்விட்டார். உலக பத்திரிகைச் சுதந்திர தினத்துக்கு முதல் நாள் (2006 மே 02) துப்பாக்கிதாரிகள் உதயனுக்குள் நுழைந்து இருவரைச் சுட்டுக் கொன்றனர். இருவரைக் காயப்படுத்தினர். இந்திய அமைதிகாக்கும் படையினரால் யாழ்ப்பாணத்தில் பத்திரிகை அலுவலகங்கள் குண்டு வைத்துத் தகர்க்கப்பட்டன. கோட்டையில் இருந்து குறிவைத்து உதயன் மீது மிக மோசமான ஷெல் தாக்குதல்கள் நடத்தப்பட்டன. தொடரும் அடக்குமுறைகளுக்கு மத்தியிலும் உதயன் தொடர்ந்தும் மக்களுக்குரிய ஜனநாயக வரம்புகளுக்கு உட்பட்ட சேவைகளை ஆற்றி வருகின்றான்.

உலக நாடுகள் மிகப் பலவற்றில் பத்திரிகையாளர்கள் தமது உண்மையான சுதந்திரத்தை அனுபவித்துக்கொண்டு இன்றைய தினத்தைக் கொண்டாடும்போது, இலங்கைப் பத்திரிகையாளர்கள், எந்தப் பயமுறுத்தலும் இன்றி செய்திகளை பிரசுரிப்பதற்கான தமது அடிப்படை உரிமைகளுக்காக இன்னும் போராடிக்கொண்டிருக்கிறார்கள்.

இன்றைய அரசு பதவி ஏற்றதன் பின்னர், 34 பத்திரிகையாளர்கள் கொல்லப்பட்டுள்ளனர் என்று புள்ளிவிவரங்கள் தெரிவிக்கின்றன. உலகின் பெரிய மீட்புப் பணிக்கான போர் என்று அரசினால் அனைத்துலகத்துக்கு வர்ணிக்கப்பட்ட வன்னிப் போரின்போது கொலையுண்ட பத்திரிகையாளர்கள் இந்த எண்ணிக்கையில் அடங்கவில்லை. உலகிலே பயங்கரவாதத்தை முழுமையாக அழித்த நாடு இலங்கையே என்று பறை சாற்றும் அரசு இதுவரை பத்திரிகையாளர்களை படுகொலை செய்த எவரையும் கைதுசெய்யவில்லை. லசந்த விக்கிரமதுங்க, சிவராம் ஆகியோர் கொலை தொடர்பான சட்ட நடவடிக்கைகள் கூட சர்வதேச நிர்ப்பந்தத்தினால் ஏற்பட்டவைதான்.

ஜனாதிபதித் தேர்தலுக்கு இரு தினங்களுக்கு முன்னர் கடத்தப்பட்ட பிரபல பத்திரிகையாளரும், அரசியல் ஆய்வாளரும், கேலிச் சித்திரக்காரருமான பிரகீத் எக்னலிகொட பற்றி இதுவரை தகவல் இல்லை.

ஆண்டுதோறும் ஒவ்வொரு தொனிப் பொருளில் உலக பத்திரிகைச் சுதந்திர தினம் அனுஷ்டிக்கப்படுகிறது. 'புதிய குரல்கள், சமூகங்களை மாற்றி அமைக்க உதவும் ஊடக சுதந்திரம்' - என்பதே இன்றைய தொனிப்பொருள் ஆகும்.

இலங்கையை ஆசியாவின் ஆச்சரியமாக மாற்றுவதற்கு உழைப்பதாகக் கூறும் எமது நாட்டு ஜனாதிபதி பத்திரிகையாளர்களைப் பாதுகாக்க நடவடிக்கை எடுக்கவேண்டும். ஜனநாயகத்தின் நான்கு பிரதான தூண்களில் கருத்துச் சுதந்திரமும் - ஊடக சுதந்திரமும் - ஒன்றாகும். இதனைப் பாதுகாப்பதன் மூலம் சர்வதேச அரங்கில் இலங்கைக்கு இருந்து வரும் அபகீர்த்தியை நீக்க முடியும் என்பதை அரசு எப்போது தான் உணரப்போகிறது; அதனை நாடிச் செயற்படப்போகிறது?

பத்திரிகை சுதந்திரம் என்று வெறும் வாய் வேதாந்தம் பேசிக்கொண்டு, படிப்பது தேவாரம் இடிப்பது சிவன்கோவில் என்ற நிலையை நீக்கி -

உண்மையான ஜனநாயக சுதந்திரம் இந்த நாட்டில் மீண்டும் வராதா என்ற வினா வருடாந்தம் நீண்டு தொடர்வது நியதியாக்கப் பட்டுவிட்டது.

# கைதான திருமலை ஆசிரியரை உடன் விடுதலை செய்யுங்கள்

## தமிழர் ஆசிரியர் சங்கம் கோரிக்கை

யாழ்ப்பாணம், மே 3

கைது செய்யப்பட்டுள்ள திருகோணமலை புனித பிரான்சிஸ் சவேரியார் மகாவித்தியாலய ஆசிரியர் தம்பி ராஜா குகதாசை உடனடியாக விடுதலை செய்ய வேண்டும். இல்லையேல் கிழக்கு மாகாண ஆளுநர் அட்மிரல் மொஹான் விஜேவிக்கிரமவின் அலுவலகத்துக்கு முன்னால் மாகாண ஆசிரியர்கள் அனைவரும் ஒன்று கூடும் நிலை ஏற்படும் எனத்தெரிவித்து இலங்கை தமிழர் ஆசிரியர் சங்கப் பொதுச் செயலாளர் சரா.புவனேஸ்வரன் கிழக்கு மாகாண ஆளுநருக்கு கடிதம் ஒன்றை அனுப்பி வைத்துள்ளார்.

ஆங்கில ஆசிரியரான இவர் கடந்த மாதம் 23அம் திகதி கைதுசெய்யப்பட்டுள்ளார். இந்தக் கைது விவகாரம் திருகோணமலையில் உள்ள கல்விப் புலம் சார்ந்த அனைவருக்கும் அதிருப்தியை ஏற்படுத்தி உள்ளது. அத்துடன் பாடசாலை மாணவர்களின் கல்வி பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளது.

எனவே ஆசிரியரை விடுவிக்க உடன்நடவடிக்கை எடுக்க வேண்டும் எனப் பொதுச் செயலாளர் தனது கடிதத்தில் சுட்டிக்காட்டியுள்ளார். (த-3)

## யாழ்.பொது நூலகத்துக்கு 3 ஆயிரம் புத்தகங்கள்

கொழும்புத்துறை,மே 3

யாழ். பொது சன நூலகத்துக்கு 3 ஆயிரத்துக்கு மேற்பட்ட புத்தகங்கள் கொழும்பு மறைமாவட்டத்தின் மூத்த குருவும், பிலியந்தலை சுபோதி நிறுவன ஸ்தாபகருமான அருட்கலாநிதி மேர்வின் பெர்னாண்டோ அடிகளால் அன்பளிப்பு செய்யப்பட்டுள்ளன.

கடந்த வாரம் இடம்பெற்ற நூல்கள் கையளிக்கும் நிகழ்வில் பெர்னாண்டோ அடிகள் கருத்துத் தெரிவித்ததாவது:

1981 மே மாதம் 31 ஆம் திகதி இடம்பெற்ற மிலேச்சத்தனமான நடவடிக்கைகளுக்குப் பிராயச்சித்தம் செய்யும் வகையில் இந்த நூல்கள் வழங்கப்படுகின்றன.

நான் சிறுவயது முதல் புத்தகங்களை நேசித்து வாசித்து கல்விக் கடலில் மூழ்கியிருந்தேன். பல புத்தகங்களை எழுதியும் உள்ளேன். எனது நிறுவனத்தில் எனக்குச் சொந்தமான அனைத்து நூல்களையும் வடக்கில் பிரசித்தி பெற்ற யாழ்.பொதுநூலகத்துக்கு வழங்குவது ஆத்ம திருப்தியைக் கொடுக்கிறது.- என்று தெரிவித்தார்.

இந்த நிகழ்வில் யாழ். ஆயர் மேதகு தோமஸ் சவுந்தரநாயகம் ஆண்டகை, யாழ்.மாநகர சபை முதல்வர் யோகேஸ்வரி பற்குணராசா, யாழ்.அரச அதிபர் திருமதி இமெல்டா சுகுமார் உட்பட பல கல்விமான்கள், மாணவர்கள் கலந்து கொண்டனர். அன்பளிப்புக்கான ஏற்பாடுகளை அருட்திரு எஸ்.ஏ.றொசான் அடிகள் செய்திருந்தார். (ம-135)

## கிராம சேவகர் அலுவலகத்துக்கு கட்டடம் அமைக்கக் கோரிக்கை

நவாலி,மே 3

ஆனைக்கோட்டை ஜே/133 கிராமசேவையாளர் அலுவலகத்துக்குச் சொந்தக் கட்டடமொன்று அமைக்கப்பட வேண்டும் என்று இப்பகுதி மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். இந்தக் கிராம சேவையாளர் அலுவலகம் நீண்ட காலமாக இடம் மாறி மாறி ஒரு நடமாடும் செயலகமாக மாறி வருகின்றது.

தற்போது தனியார் கட்டடம் ஒன்றில் இயங்கி வரும் இந்த அலுவலகம் ஆனைக்கோட்டை கரைப்பிரான் ஆலயத்துக்குச் சமீபமாக கல்லுண்டாயை அண்டி அமைந்துள்ளது. இதனால் நீண்ட தூரம் நடந்து செல்ல வேண்டிய துர்ப்பாக்கிய நிலைமை கிராம மக்களுக்கு ஏற்பட்டுள்ளது.

கிராம சேவையாளர் அலுவலகத்துக்கும் முதியோர் பகல் பராமரிப்பு நிலையம் அமைப்பதற்குமாக ஆனைக்கோட்டையிலுள்ள கோயில் காணி ஒன்று பரிபாலன சபையினரால் வழங்கப்பட்டுள்ளது.

இந்தக் காணியில் முதியோர் பராமரிப்பு நிலையம் அமைக்கப்பட்டு அண்மையில் அதன் திறப்பு விழாவும் இடம்பெற்றுள்ளது. ஆனால் கிராம சேவையாளர் அலுவலகம் அமைக்கப்படவில்லை என்று சுட்டிக்காட்டப்படுகிறது.

இந்த நிலையில் வழங்கப்பட்ட காணியில் கிராம சேவையாளர் அலுவலகத்தை அமைத்து மக்களது சிரமங்களைப் போக்க நடவடிக்கை எடுக்குமாறு மக்களால் கேட்கப்பட்டுள்ளது. (ம-100)




யாழ்ப்பாணம்,மே 3

இருபாலை கிழக்கு, வீரகத்தி பிள்ளையார் ஆலய அலங்காரத் திருவிழாவின் நிறைவுநாள் நிகழ்வு நாளை வெள்ளிக்கிழமை நடைபெறவுள்ளது.

அன்றைய தினம் பகல் சங்காபிஷேகமும், அதனைத்தொடர்ந்து அன்னதானமும் நடைபெறவுள்ளது. மாலை திருவூஞ்சல் நிகழ்வும் சுவாமி வீதி உலா வரும் நிகழ்வும் நடைபெறும். (வ)

* * *

வடமராட்சி,மே 3

புலோலி, உபயகதிர்காமம் தான்தோன்றி முருகன் ஆலயத்தில் எதிர்வரும் சனிக்கிழமை முதல் கந்தபுராண படனப் படிப்பு ஆரம்பமாகின்றது.

தொடர்ந்து தினமும் இடம் பெறும் கந்தபுராணப் படிப்பு எதிர்வரும் ஜூலை மாதம் 7 ஆம் திகதி வள்ளி திருமண படன படிப்புடன் நிறைவுபெறும். (வ-8)

* * *

புளியங்கூடல் செருத்தலைச்சி மகாமாரி அம்பாள் ஆலய மகா கும்பாபிஷேகம் நாளை மறுதினம் காலை 8.30 மணி தொடக்கம் 9.10 மணிவரை உள்ள சுபநேரத்தில் நடைபெறவுள்ளது.

* * *

மூளாய் வதிரன் புலோ சித்தி விநாயகர் ஆலயத் தேர்த்திருவிழா நாளை வெள்ளிக்கிழமை காலை 8.30 மணிக்கு இடம்பெறும். மறுநாள் சனிக்கிழமை காலை 9.30 மணிக்கு தீர்த்தத்திருவிழா இடம்பெறும்.

கடந்த மாதம் 24 ஆம் திகதி இந்த ஆலய பெருந்திருவிழா கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி நடைபெற்று வருகின்றது. (வ)

### பிரான்ஸ் மே தினப் பேரணியில்

# இலங்கையின் கொலைக்களங்கள் ஆவணப்படபிரதிகள் விநியோகம்

பிரான்ஸ் தலைநகர் பரிசில் இடம்பெற்ற பிரமாண்டமான மே நாள் பேரணியின் போது ஈழத்தமிழர்களின் நியாயமான உரிமைப் போராட்டத்தை வலியுறுத்தி பரப்புரைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

இதன்போது பிரான்ஸ் பல்கலைக்கழக தமிழ் மாணவர் சமூகத்தின் அமைப்பினர் சனல்-4 தொலைக் காட்சியின் இலங்கையின் கொலைக் களங்கள் ஆவணப்பட பிரதிநிதிகளை பல்லின மக்களுக்கும் விநியோகித்து பரப்புரையில் ஈடுபட்டிருந்தனர்.

மறுபுறம் நாடுகடந்த தமிழீழ அரசின் உறுதுணைக்குழுவினர் துண்டுப் பிரசுர விநியோக பரப்புரையில் [illegible] ஈடுபட்டிருந்தனர்.




பிரான்ஸ் அதிபர் தேர்தலைமையப்படுத்தி ஏற்பட்டிருக்கின்ற பரபரப்பான சூழலில் பல்வேறு தொழிற் சங்கங்களும் கட்சியைச் சேர்ந்தவர்கள் நிறைந்து காணப்படுகின்ற இம் முறை மே நாள் பேரணியை தகுந்த வாய்ப்பாகப் பயன்படுத்தி இத்தகைய பரப்புரையில் ஈடுபட்டிருக்கின்றோம் என்று நாடு கடந்த தமிழீழ அரசின் உள்துறை அமைச்சர் நாகலிங்கம் பாலசந்திரன் தெரிவித்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வைத்தியர் நியமனம்

பூநகரி, மே 3

பூநகரிப் பிரதேச சபையின் ஆயுள்வேத வைத்தியசாலைக்கு வைத்தியர் ஒருவர் நியமிக்கப்பட்டுள்ளார்.

பிரதேச சபையின் வைத்தியசாலைகளில் வைத்தியர்கள் இல்லாததால் மக்கள் நெருக்கடிக்குள் தள்ளப்பட்டனர்.

இதனை நீக்கும் முகமாக கடந்த மாதத்திலிருந்து ஆயுள்வேத வைத்தியர் ஒருவர் நியமிக்கப்பட்டுள்ளார்.

இவர் பூநகரி வாடிப் பகுதியிலுள்ள பிரதம வைத்தியசாலையிலும், ஜெயபுரம், முழங்காவில் கிளை வைத்தியசாலைகளிலும் கடமையாற்றி வருகின்றார்.

கிளை வைத்தியசாலைகளில் வாரத்தில் ஒருநாள் இவர் கடமையாற்றி வருவதாகவும் பூநகரிப் பிரதேச சபையின் தலைவர் தெரிவித்துள்ளார். (க-23)

## அதிபர்களுக்கான கூட்டம் ஒத்திவைப்பு

முல்லைத்தீவு, மே 3

முல்லைத்தீவு கல்வி வலயப் பாடசாலைகளின் அதிபர்களுக்கு இன்று வற்றாப்பளை மகாவித்தியாலயத்தில் நடத்தப்படவிருந்த கூட்டம் எதிர்வரும் 10 ஆம் திகதி நடைபெறுமென வலயக் கல்விப் பணிப்பாளர் கோ.வரதராஜமூர்த்தி அறிவித்துள்ளார். (க-9)

# இரும்புகளாக மாறிவிட்ட கைவிடப்பட்ட வாகனங்கள்



நெடுங்கேணி, மே 3

இறுதிக்கட்டப் போரின் போது முல்லைத்தீவில் மக்களால் கைவிடப்பட்ட வாகனங்கள் இப்போது வெறும் இரும்புகளாகக் காணப்படுவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

முள்ளிவாய்க்கால், வலைஞர் மடம், பொக்கணை, வட்டுவாகல் ஆகிய இடங்களில் இறுதிப் போரின் போது, பொது மக்கள் தமது வாகனங்களைக் கைவிட்டுச் சென்றனர்.

தற்போது முள்ளிவாய்க்கால் - முல்லைத்தீவு பிரதான வீதி திறக்கப்பட்டதால் தமது வாகனங்களை ஆவலுடன் பார்ப்பதற்குச் சென்ற பொதுமக்கள் பெரும் ஏமாற்றமும், கவலையும் அடைந்துள்ளனர்.

பல்வேறு கஷ்டங்களுக்கு மத்தியில் கொள்வனவு செய்து உபயோகித்த பெறுமதி மிக்க வாகனங்கள் பற்றைகளுக்கு நடுவே வெயிலில் காய்ந்து, மழையில் நனைந்து உருக்குலைந்த நிலையில் துருப் பிடித்து இரும்புகளாகக் காணப்படுகின்றமை இவற்றின் உரிமையாளர்களின் மனங்களைப் பெரிதும் பாதித்துள்ளது.

**பல்வேறு கஷ்டங்களுக்கு மத்தியில் கொள்வனவு செய்து உபயோகித்த பெறுமதி மிக்க வாகனங்கள் பற்றைகளுக்கு நடுவே வெயிலில் காய்ந்து, மழையில் நனைந்து உருக்குலைந்த நிலையில் துருப் பிடித்து இரும்புகளாகக் காணப்படுகின்றமை இவற்றின் உரிமையாளர்களின் மனங்களைப் பெரிதும் பாதித்துள்ளது.**

மேலும் இந்த வாகனங்களை உரியவர்களிடம் கையளிப்பதற்கான நடவடிக்கை எடுக்கப்படும் போது, அவற்றைத் தம்மால் உறுதிப்படுத்த முடியாமல் போய் விடுமெனவும் வாகன உரிமையாளர்கள் கவலை தெரிவித்துள்ளனர்.

கடந்த போரின்போது மக்களால் கைவிடப்பட்ட வாகனங்களில் பல இவ்வாறு பழுதடைந்து உபயோகிக்க முடியாத நிலையில் உள்ளன. (க-)

## யாழ்- மன்னார் பஸ்சேவை இன்றிலிருந்து ஆரம்பம்

யாழ்ப்பாணம், மே 3

இன்று 3 ஆம் திகதி தொடக்கம் யாழ்ப்பாணத்திலிருந்து மன்னாருக்கான அரச பஸ்சேவை ஆரம்பிக்கப்படவிருப்பதாக இலங்கை போக்குவரத்துச் சபையின் வடபகுதிக்கான பிரதம பிராந்திய முகாமையாளர் செ.அஸ்கர் அறிவித்துள்ளார்.

இந்த பஸ் சேவை யாழ்ப்பாணத்திலிருந்து சங்குப்பிட்டி, முழங்காவில் ஊடாக மன்னாரைச் சென்றடையும்.

இந்த பஸ்சேவை காலை 6 மணியளவில் யாழ். மத்திய பஸ் நிலையத்திலிருந்து மன்னாருக்கு சேவையை ஆரம்பிக்கும். அதேபோன்று மன்னார் பஸ் நிலையத்திலிருந்து பிற்பகல் 12.30 மணியளவில் யாழ்ப்பாணம் நோக்கிப் புறப்படும். இந்தச் சேவைக்கான ஒரு வழிக் கட்டணமாக 177 ரூபா அறவிடப்படும்.

இந்தச் சேவையை ஆரம்பிக்கும்படி பொதுமக்கள் மீண்டும் மீண்டும் கோரிக்கை விடுத்து வந்தனர். ஆனால் கடந்த பல மாதங்களாக போதிய பஸ்கள் இல்லை என்று கூறி இந்தச் சேவை ஆரம்பிக்கப்படவில்லை. இப்போது சேவையை ஆரம்பிப்பதற்கான பஸ்கள் கிடைக்கப் பெற்றுள்ளனவா என்பதை முகாமையாளர் குறிப்பிடவில்லை. (க)

## ஆங்கில ஆசிரியர் தேர்வுகள் நாளை

முள்ளியவளை, மே 3

முல்லைத்தீவு கல்வி வலயத்திலுள்ள பாடசாலைகளில் ஒப்பந்த அடிப்படையில் ஆங்கில ஆசிரியர்களை நியமிக்கும் பொருட்டு இதற்கான விண்ணப்பங்களைச் சமர்ப்பித்தவர்களுக்கான எழுத்துத் தேர்வும், நேர்முகப் பரீட்சையும் நாளைய தினம் வெள்ளிக்கிழமை இடம் பெறவுள்ளன.

முல்லைத்தீவுக் கல்வி வலயத்திலுள்ள பாடசாலைகளில் ஆங்கில ஆசிரியர்கள் போதியளவு இல்லாததால், மாணவர்களின் ஆங்கிலக் கல்வியில் பின்னடைவு காணப்படுகின்றது.

இதனை நிவர்த்தி செய்யும் முகமாக ஒப்பந்த அடிப்படையில் ஆங்கில ஆசிரியர்களை நியமிப்பதற்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டன.

தற்போது இதற்கான விண்ணப்பங்களைச் சமர்ப்பித்தவர்களுக்கான எழுத்துப் பரீட்சையும், நேர்முகத் தேர்வும் நாளைய தினம் வெள்ளிக்கிழமை முற்பகல் 9 மணியளவில் முல்லைத்தீவு வலயக் கல்வி அலுவலகத்தில் இடம்பெறுமென வலயக் கல்விப் பணிப்பாளர் தெரிவித்துள்ளார். (க-433)



மன்னார் மாவட்டப் பொது வைத்தியசாலையில் நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை மன்னார் தள்ளாடி முகாமைச் சேர்ந்த இராணுவத்தினர் சிரமதானப் பணிகளில் ஈடுபடுவதைக் காணமுடிகின்றது. (12)

## ஒரே தினத்தில் 3 போட்டிகள் குழப்பத்தில் கல்விச் சமூகம்

கிளிநொச்சி, மே 3

கிளிநொச்சியில் பாடசாலைகளுக்கிடையே மூன்று மாவட்டமட்டப் போட்டிகள் நாளைய தினம் இடம் பெறவிருப்பதால் மாணவர்களும், ஆசிரியர்களும் என்ன செய்வதென்று புரியாத நிலையில் குழப்பத்தில் ஆழ்ந்திருப்பதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மாவட்ட மட்டத்திலான பாடசாலைகளுக்கிடையிலான விளையாட்டுப் போட்டி தமிழ்த் தினப் போட்டி, சமூக விஞ்ஞானப் போட்டி ஆகிய மூன்று போட்டிகளே கிளிநொச்சியில் வெவ்வேறு இடங்களில் நடைபெறுவதற்கான ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது. இதனால் பாடசாலை மாணவர்களும், ஆசிரியர்களும் பெரும் குழப்பத்தில் ஆழ்ந்துள்ளனர். (க)

## நீரிறைக்கும் இயந்திரம் திருட்டு சந்தேகநபர்களுக்கு மறியல்

கிளிநொச்சி, மே 3

கிளிநொச்சி தருமபுரம் மகாவித்தியாலயக் கிணற்றில் பொருத்தப்பட்டிருந்த நீர்இறைக்கும் இயந்திரத் திருட்டின் இருசந்தேக நபர்களையும் எதிர்வரும் 15 ஆம் திகதி வரை விளக்க மறியலில் வைக்குமாறு கிளிநொச்சி மாவட்டநீதிவான் நீதிமன்ற நீதிவான் பெ.சிவகுமார் உத்தரவிட்டுள்ளார்.

கிளிநொச்சி தருமபுரம் மகாவித்தியாலயக் கிணற்றில் பொருத்தப்பட்டிருந்த நீர்இறைக்கும் இயந்திரம் கடந்த 24 ஆம் திகதி திருடப்பட்டதாகப் பாடசாலையின் பிரதி பதில் அதிபரால் கிளிநொச்சிப் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டிருந்தது. குறித்த முறைப்பாடு தொடர்பான வழக்கை பொலிஸார் கடந்த 27 ஆம் திகதி கிளிநொச்சி மாவட்ட நீதிவான் நீதிமன்றில் தாக்கல் செய்திருந்தனர்.

இந்தத் திருட்டுச் சம்பவம் தொடர்பாக கைது செய்யப்பட்ட இரண்டு சந்தேக நபர்களையும் கடந்த 30 ஆம் திகதி நீதிமன்றில் பொலிஸார் முன்னிலைப் படுத்தினர். இவர்கள் இருவரையும் 15 ஆம் திகதிவரை விளக்க மறியலில் வைக்குமாறு கிளிநொச்சி மாவட்ட நீதிவான் நீதிமன்ற நீதிவான் பெ.சிவகுமார் உத்தரவிட்டுள்ளார். (க-6)

# தொழிலாளர்கள் என்பதனால் ஒடுக்கப்படவில்லை தமிழர்கள் என்பதனாலேயே ஒடுக்கப்படுகின்றோம்

## கிளிநொச்சியில் மனோ கணேசன்

கிளிநொச்சி, மே 3

எமது மக்கள் தொழிலாளர்கள் என்ற காரணத்தினால் ஒடுக்கப்படவில்லை. தமிழர்கள் என்ற காரணத்தினாலேயே சிங்களப் பேரினவாத அரசினால் ஒடுக்கப்படுகின்றனர். இவ்வாறு ஜனநாயக மக்கள் முன்னணியின் தலைவரான மனோ கணேசன் தெரிவித்துள்ளார்.

கிளிநொச்சியில் மே தின நிகழ்வுகள் நேற்றுமுன்தினம் முற்பகல் 9.30 மணியளவில் கரைச்சிப் பிரதேச சபை வளாகத்தில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் கிளிநொச்சி மாவட்ட அமைப்பாளர் அ.வேளமாலிதன் தலைமையில் நடைபெற்றது.

நிகழ்வில் பொதுச்சுடர் ஏற்றிவைக்கப்பட்டதையடுத்துச் சிறப்புரைகளை, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்களான மாவை சேனாதிராசா, சிவஞானம் சிறிதரன், ஜனநாயக மக்கள் முன்னணியின் தலைவர் மனோ கணேசன், குருபரன், கரைச்சிப் பிரதேச சபையின் தலைவர் நா.குகராஜா ஆகியோர் நிகழ்த்தி னர்.

இதில் சிறப்புரையாற்றிய மனோ கணேசன், ''இலங்கைப் பேரினவாத அரசானது அரசியல் கொள்கையிலும் பொருளாதாரக் கொள்கையிலும் தோற்றுவிட்டது.

**இன்று பொருள்களின் விலைவாசி உயர்ந்து செல்கிறது. பொருளாதாரம் வீழ்ந்து வருகின்றது. தொழிலாளர்கள் ஒடுக்கப்படுகின்றார்கள். எங்களைத் தொழிலாளர்கள் என்ற காரணத்தினால் ஒடுக்கவில்லை. தமிழர்கள் என்ற காரணத்தினால்தான் நாம் ஒடுக்கப்படுகின்றோம்**

கிளிநொச்சி மண்ணானது மகிழ்ச்சிக்குரிய மண், மகத்தான மண், வீரமிக்க மண், எழுச்சியையும் வீழ்ச்சியையும் கண்ட மண், எதிர் காலத்தில் விரைவாக மீண்டும் எழுச்சி காணப்போகும் மண் என்பது திடமான உண்மை என்று நான் கூறுகின்றேன்.

உலகம் முழுவதும் புலம் பெயர்ந்து வாழ்ந்து கொண்டிருக்கும் மக்கள் மத்தியிலே ஓர் அடையாளம் உள்ளது. இந்த அடையாளத்தை எவராலும் அழித்து விடமுடியாது.

கிளிநொச்சி தமிழர்களின் இதயம் அல்லது நெஞ்சம் என்பதில் எவருக்கும் மாறுபட்ட கருத்துக்கள் இருக்க முடியாது.

இங்கிருந்துதான் உணர்வுகள் எழுச்சி பெற வேண்டும், இங்கிருந்துதான் கோரிக்கைகள் முன்வைக்கப்பட வேண்டும்.

கிளிநொச்சியில் இருந்துதான் போராட்டங்கள் முன்னெடுக்கப்பட வேண்டும், இங்கிருந்துதான் முடிவுகள் அறிவிக்கப்பட வேண்டும்.

அதே போல கிளிநொச்சியில் இருந்து தான் தமது உரிமைகளை வென்றெடுக்க இஸ்லாமிய சகோதரர்களும் தமிழ்ச் சகோதரர்களும் ஒன்றாக அணி திரள வேண்டும்'' என்று தெரிவித்தார்.

இன்று பொருள்களின் விலைவாசி உயர்ந்து செல்கிறது. பொருளாதாரம் வீழ்ந்து வருகின்றது. தொழிலாளர்கள் ஒடுக்கப்படுகின்றார்கள். எங்களைத் தொழிலாளர்கள் என்ற காரணத்தினால் ஒடுக்கவில்லை. தமிழர்கள் என்ற காரணத்தினால்தான் நாம் ஒடுக்கப்படுகின்றோம் என அவர் மேலும் தெரிவித்துள்ளார். (க-6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாம் அனைவரும் ஒன்றிணையாமல் ஓர் அரசியல் தீர்வை எட்ட முடியாது

## மே தினக் கூட்டத்தில் வினோ எம்.பி.

'ஆயுதப் போராட்ட காலத்தில் இயக்கங்களை முட்டி மோதவிட்டவர்கள் இலங்கை - இந்திய அரசுகள்தான். எனவே நாம் இனியாவது இதயசுத்தியோடு உண்மையாக நேர்மையாக ஒற்றுமையாக இருந்தால் அரசிடம் பேரம் பேசி எதையும் பெறமுடியும்.

அதுவரைக்கும் நாம் அரசியல் தீர்வை எட்டவும் முடியாது எமது மக்களுக்கு நிம்மதியான வாழ்வை ஏற்படுத்தவும் முடியாது' என வன்னி நாடாளுமன்ற உறுப்பினர் வினோ நோகராதலிங்கம் தெரிவித்தார்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வவுனியா கிளையின் ஏற்பாட்டில் தொழிலாளர் தினமான நேற்று முன்தினம் வவுனியா நகர சபை கலாசார மண்டபத்தில் நிகழ்வுகள் இடம்பெற்றன. இதில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது:-

தொழிலாளர் தினம் இன்று இலங்கையில் அரசியலாக்கப்பட்டுள்ளது. வவுனியாவிலும்கூட தொழிலாளர்களின் பிரச்சினைகளை வெளிக்கொணர்வதற்கு தொழிற்சங்கங்கள் அல்லது பாடுபட்டு உழைக்கும் தொழிலாளர்களுக்காகக் குரல் கொடுக்கும் பொது அமைப்பு இல்லாத காரணத்தால் தொழிலாளர் பிரச்சினைகளைத் தொழிலாளர்களே முன்வைத்து கதைக்க முடியாத நிலை காணப்படுகின்றது.

எனவே அவ்வாறான நிலையை நாம் உருவாக்க வேண்டும் அல்லது அரசியல்வாதிகள் தொழிலாளர்களுக்குஅவ்வாறானநிலையை உருவாக்கிக் கொடுக்க வேண்டும். ஆனால் இன்று அரசியல் ரீதியான கருத்துக்களை விவாதிக்க வேண்டிய இடமாக இது உள்ளது.

அதற்குக் காரணம் எங்களுக்குப் பிரச்சினையுள்ளது. தமிழ் மக்களைப் பொறுத்தவரை தொழிலாளர்களாக இருக்கலாம். அரசியல்வாதிகளாக இருக்கலாம் அல்லது சாதாரண மக்களாக இருக்கலாம் எல்லோருக்கும் மிகப் பெரிய பிரச்சினையுள்ளது.

நாம் பெரும் இடப்பெயர்வுகளாலும் போராலும் துன்பங்களையும் வேதனைகளையும் சந்தித்து பிரச்சினைகளுக்கு ஆளாக்கப்பட்டதன் விளைவாக தேவைகள் நிறையவே இருப்பதனாலும் ஒவ்வொரு சந்தர்ப்பங்களையும் நாம் மேடைகளாகப் பயன்படுத்த வேண்டியுள்ளது.

நாம் இன்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பாக ஐக்கியப்பட்டுள்ளோம். ஆனால் அங்கு நாம் எவ்வளவு உண்மையாகவும் நேர்மையாகவும் இணைந்துள்ளோம் என்றால் இது சந்தேகமானதுதான். தந்தை செல்வநாயகம் காலத்திலும் நாம் ஒன்றுபட்டிருக்கவில்லை. அமிர்தலிங்கம் காலத்திலும் ஒன்றுபட்டிருக்கவில்லை.

அதுபோலவே ஆயுதப் போராட்ட காலகட்டத்திலும் எங்களுக்குள் ஒற்றுமை இருக்கவில்லை. அதன் பின்னரும் - இவ்வளவற்றை நாம் சந்தித்த பின்பும்- நாம் சந்திக்கக் கூடாத அனைத்தையும் சந்தித்த பின்னும் இழக்கக் கூடாதவற்றை இழந்த பின்னும்- நாம் ஒற்றுமைப் பட்டுள்ளோமா என்றால் நாம் உண்மையாக நேர்மையாக அந்த நிலைக்கு வரவில்லை என்றே சொல்ல வேண்டும்.

அண்மையில் இந்தியாவில் இருந்து வந்த நாடாளுமன்றக் குழுவை தமிழ்த் தேசியக்கூட்டமைப்பு சந்தித்தது. ஆனால் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பில் நாம் எத்தனைபேர் சந்தித்தோம். அதிலும் இரண்டு குழுவாகத்தான் சந்திக்க முடிந்தது. ஏன் எம்மால் ஒன்றாக சந்திக்க முடியவில்லை. சம்பந்தர் ஐயாவாக இருக்கலாம். செல்வம் அடைக்கலநா[illegible] இருக்கலாம் [illegible] சுரேஸ் பிரேமச்சந்[illegible]க இருக்கலாம் ஏன் ஆனந்தசங்கரி ஐயாவையும் சித்தார்த்தனையும் அழைத்துக்கொண்டு ஒன்றாகச் சென்று இதுதான் தமிழர்களுடைய கூட்டமைப்பு என்று சொல்ல முடியவில்லை.

இதுதான் உண்மை. சங்கரியண்ணன், சித்தார்த்தன் கூட இவ்வாறான சந்தர்ப்பம் வரும்போது கூட்டமைப்பிடம் நாமும் வருகின்றோம் என்று ஏன் கேட்கக் கூடாது? எனவே தான் நான் கேட்கின்றேன் நாம் ஒற்றுமைப்பட்டிருக்கின்றோமா?

இந்திய அரசாக இருந்தாலும் சரி இலங்கை அரசாக இருந்தாலும் சரி நாங்கள் ஒற்றுமைப்படக்கூடாது என்பதில் குறியாக இருக்கின்றன. ஆயுதப் போராட்ட காலத்திலும் இதுதான் நடந்தது. இயக்கங்களை முட்டி மோதவிட்டவர்கள் இலங்கை - இந்திய அரசுகளைச் சேர்ந்தவர்கள்தான்- என்றார். (த-12-400)

## திடீரெனத் தோன்றிய புலிக்கொடி



யாழ்ப்பாணத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற கூட்டு மேதின ஊர்வலத்தில் புலிக்கொடி திடீரெனத் தோன்றி மறைந்தது. ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் அலுவலகத்துக்குள் இருந்து வந்து கூட்டு மேதினப் பேரணியில் இணைந்துகொண்ட கட்சி ஆதரவாளர்கள் சிலர் திடீரெனப் புலிக்கொடி ஒன்றைக் கையில் தாங்கியிருந்தனர். அதனைப் படம் பிடிப்பதில் சுதந்திரக் கட்சியின் மற்றொரு ஆதரவாளர்கள் சிலர் ஈடுபட்டிருந்தனர். (த)

## காணிப் பிரச்சினைக்குத் தீர்வு: சமூக அமைப்புகளுடன் சந்திப்பு

யாழ்ப்பாணம்,மே 3

காணி தொடர்பான சட்டங்கள் மற்றும் பிரச்சினைகளுக்கான தீர்வுகள் தொடர்பிலான, சமூக மட்ட அமைப்புகளின் பிரதிநிதிகளுக்கான கருத்தரங்கு எதிர்வரும் செவ்வாய்க்கிழமை காலை 9.30 மணிக்கு நடைபெறவுள்ளது.

இல.60 அரசடி வீதியில் அமைந்துள்ள 'சொன்ட்' நிறுவன அலுவலகத்தில் நடைபெறும். இப்பயிற்சிக் கருத்தரங்கில் கற்றுக் கொண்ட விடயங்களை கிராம மட்டத்தில் மக்களுக்குப் பயிற்றுவிக்கக் கூடியதாக ஒவ்வொரு பொது அமைப்புக்களில் இருந்தும் இரண்டு பிரதிநிதிகளைக் கலந்து கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளது. (ம-7)

## மரவள்ளி உற்பத்தியில் நட்டம் ஏற்பட்டுள்ளது

யாழ்ப்பாணம்,மே. 3

கோப்பாயில் மரவள்ளிக் கிழங்கு உற்பத்தியில் ஈடுபட்ட விவசாயிகள் அதனை விற்பனை செய்யமுடியாமல் நட்டம் அடைந்துள்ளனர் என்று தெரிவிக்கப்படுகின்றது.

மரவள்ளிக் கிழங்கு விளைச்சல் அதிகரித்துள்ளதால் ஒரு கிலோ 19 ரூபா முதல் 25 ரூபாவரை கொள்வனவு செய்யப்படுவதால் மரவள்ளிக்கிழங்கு உற்பத்தியில் ஈடுபட்டவர்கள் பெரும் நட்டத்தை எதிர் கொண்டுள்ளனர்.

தென் பகுதியில் ஒரு கிலோ மரவள்ளிக்கிழங்கு 75 ரூபாவுக்கு விற்பனை செய்யப்படுகிறது. ஆனால் தம்மிடம் அறாவிலையில் கொள்வனவு செய்வதாக விவசாயிகள் கவலை தெரிவிக்கின்றனர்.

இதனால் மரவள்ளிக் கிழங்கு உற்பத்தியில் ஈடுபட்ட விவசாயிகள் மீண்டும் அந்த உற்பத்தியில் ஈடுபடத் தயங்குகின்றனர்.

விவசாய அமைப்புகள் இந்த விடயத்தில் அக்கறை எடுத்து விலை நிர்ணயம் செய்யுமாயின் இந்தப் பிரச்சினை ஏற்பட வாய்ப்பிருக்காது என விவசாயிகள் நம்பிக்கை தெரிவிக்கின்றனர்.

கமக்கார அமைப்புகள் பேருக்குத்தான் செயற்படுகின்றன. செயலளவில் ஒன்றும் இல்லை என விவசாயிகள் ஆதங்கம் தெரி விக்கின்றனா. (எ)

## ஆலயங்களைக் காக்க இரவு நேரக் காவலர்கள்

யாழ்ப்பாணம்,மே 3

யாழ்.குடாநாட்டில் ஆலயங்களில் இடம்பெற்று வரும் திருடர்களின் கைங்கரியங்களைத் தடுக்கும் நோக்குடன் ஆலயங்களின் நிர்வாகத்தினால் இரவுக் காவலர்களை நியமிக்கும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

கடந்த சில மாதங்களாக திருடர்கள் ஆலயங்களில் தமது கைவரிசையைக் காட்டி வருகின்றனர்.

ஆலய மண்டபக் கதவை உடைத்து உட்செல்லும் திருடர்கள் அங்கிருக்கும் பெறுமதிமிக்க பொருள்களைத் திருடிச் செல்கின்றனர்.

இதனால் ஆலய நிர்வாகம் பெரும் நெருக்கடிகளுக்கு முகம் கொடுத்து வருகின்றது. இந்தத் திருட்டுக்களை தடுக்கும் முகமாக மேற்கண்ட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவுள்ளன என்று கூறப்பட்டது.

சில ஆலயங்களில் அப்பகுதியை சேர்ந்த மக்கள் இரவு வேளைகளில் விழிப்புக் குழுவை அமைத்தும் காவல் பணியில் ஈடுபட்டு வருகின்றனர். (ம-17)



யாழ்.மாவட்ட உதயதாரகை மகளிர் சம்மேளனத்தினர் பருத்தித்துறை கற்கோவளம் பகுதியைச் சேர்ந்த 16 விதவைகளுக்கு வாழ்வாதார உதவிகளை அண்மையில் வழங்கினர். பருத்தித்துறைப் பிரதேச செயலக சமூக சேவைகள் அலுவலர் கணேஷ்ராஜ் பயனாளி ஒருவருக்கு வாழ்வாதார [illegible] குகிறார். அருகில் சம்மே[illegible]

## போராட்டம் நடத்தாமல் எதனையும் பெறமுடியாது

### மன்னார் நகர சபைத் தலைவர்

மே தினத்திற்கு அழைக்கப்பட வேண்டியவர்கள் தொழிலாளர்களே. ஆனால் எமது அழைப்பின் பேரில் பலர் வருகை தந்துள்ள போதும் தொழிலாளர்களின் பங்களிப்பு இங்கு மிகவும் குறைந்த அளவிலேயே காணப்படுகிறது. இன்றைய கால கட்டத்தில் நாம் போராட்டம் நடத்தாமல் எதனையும் பெற்றுக் கொள்ள முடியாது. இவ்வாறு மன்னார் நகர சபையின் தலைவர் எஸ்.ஞானப் பிரகாசம் தெரிவித்தார்.

மே தினத்தை ஒட்டி மன்னார் மாவட்ட பொது அமைப்புக்களின் ஒன்றியம் ஏற்பாடு செய்திருந்த மே தின பொதுக் கூட்டம் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை காலை மன்னார் நகரசபை மண்டபத்தில் இடம்பெற்றது.

இதில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது:-

இங்கு தொழிலாளர்களின் அடிப்படை உரிமைகள் மறுக்கப்படுகின்றன. வடக்கு, கிழக்கைப் பொறுத்தமட்டில் அங்கு விவசாயம், மீன்பிடிக்கான உரிமைகள் பறிக்கப்பட்டுள்ளன. எங்கும் இல்லாத நடைமுறை மன்னாரில் காணப்படுகின்றது. அந்த நடைமுறை மீனவர்களுக்கான பாஸ்.

> நாம் அனைவரும் முதலில் ஒன்று சேர்ந்து அரசின் குறித்த செயற்பாட்டுக்கு எதிராக போராட்டத்தை நடத்த வேண்டும். தனி மனித சுதந்திரம் இன்று இங்கு இல்லை

மீனவர்கள் கடலுக்குச் செல்லும் போது பாஸ் கொண்டு செல்ல வேண்டும். இல்லாது விட்டால் தொழிலுக்குச் செல்ல முடியாது. இந்த நடைமுறை தற்போது மன்னார் மாவட்டத்தில் மட்டுமே உள்ளது.

இந்த நடைமுறைக்கு எதிராகக் கடற்றொழிலாளர்களுடன் இணைந்து ஏனைய தொழிலாளர்களும் ஒன்று சேர்ந்து எதிர்ப்பைத் தெரிவிக்க வேண்டும். இன்றைய கால கட்டத்தில் போராட்டத்தை நடத்தாமல் எதனையும் பெற்றுக்கொள்ள முடியாது.

போர்க் காலத்தில் உள்ள நடைமுறை தற்போதைய காலத்திலும் இருக்கின்றது என்றால் எதற்காக?

தற்போது எரிபொருள்களின் விலை அதிகரித்துள்ளது. இதனால் மன்னாரிலும் கடல் உணவு வகைகளின் விலை சற்று அதிகரித்துள்ளது. ஆனால் அதற்காக மீனவர்களைக் குறை கூறுகிறார்கள்.

பாஸ் நடமுறை, எரிபொருள் விலையேற்றம் என்பன நடைமுறையில் இருந்தால் மீனின் விலையை அதிகரிப்பதில் என்ன தவறு?

நாம் அனைவரும் முதலில் ஒன்று சேர்ந்து அரசின் குறித்த செயற்பாட்டுக்கு எதிராக போராட்டத்தை நடத்த வேண்டும். தனி மனித சுதந்திரம் இன்று இங்கு இல்லை- என்றார். (த-12)

## புத்தாண்டு சேமிப்பு ஒரு கோடி ரூபா

தென்மராட்சி, மே 3

யாழ்.மாவட்ட சமுர்த்தியாளர்களின் சேமிப்பை ஊக்குவிக்கும் முகமாக கடந்த ஏப்ரல் 14ஆம் திகதி தொடக்கம் 21ஆம் திகதி வரை நடத்தப்பட்ட புத்தாண்டு சேமிப்பு வாரத்தில் தென்மராட்சி பிரதேச சமுர்த்தி மகா சங்கத்தினர் ஒரு கோடி ரூபாவுக்கு மேல் சேமிப்பாகப் பெற்று முதலிடம் பெற்றுள்ளனர்.

சமுர்த்தி வங்கிகளில் கைதடி வங்கி இந்த சேமிப்பு வாரத்தில் 58 லட்சத்து 8 ஆயிரத்து 913 ரூபாவை சேமிப்பாகப் பெற்று மாவட்டத்தில் முதலிடம் பெற்றுள்ளது.

தென்மராட்சி சமுர்த்தி மகா சங்கத்துக்குட்பட்ட சாவகச்சேரி சமுர்த்தி வங்கி 33 லட்சத்து 55 ஆயிரத்து 590 ரூபாவும் கொடிகாமம் வங்கி 24 லட்சத்து 32 ஆயிரத்து 633 ரூபாவும் வரணி, வரணி வங்கி 20 லட்சத்து 69 ஆயிரத்து 406 ரூபாவுமாக மொத்தம் ஒரு கோடியே 36 லட்சத்து 66 ஆயிரத்து 542 ரூபாவை புத்தாண்டு சேமிப்பாகப் பெற்றுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது. (ம-9)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உத்தரப்பிரதேசத்தில் சிலைகளுக்கு இடமில்லை



லக்னோ, மே.3

உத்தரப் பிரதேசத்தில், இனி சிலைகள் மற்றும் நினைவிடங்கள் அமைக்கப்பட மாட்டாது. அதற்குப் பதிலாக, தொழிலாளர் நலன், ஏழை மாணவ, மாணவியரின் கல்வி ஆகியவற்றுக்கே முக்கியத்துவம் கொடுத்து, நிதி ஒதுக்கப்படும் என்று உத்தரப் பிரதேச முதல்வர் அகிலேஷ் யாதவ் தெரிவித்தார். தொழிலாளர்களுக்கு அரசு சார்பில் வீடு கட்டித் தர ஏற்பாடுகள் செய்யப்படும் என்று அவர் மேலும் குறிப்பிட்டார்.

லக்னோவில் நடைபெற்ற மே தின விழாவில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

நாடு சுதந்திரமடைந்து பல ஆண்டுகளாகியிருந்தாலும், தொழிலாளர் வர்க்கத்தின் நிலையில் எந்தவிதமான முன்னேற்றமும் ஏற்படவில்லை. பெரும்பாலான தொழிலாளர்களுக்கு பணிப் பாதுகாப்பும் இல்லை. உத்தரப்பிரதேசத்தில், இனி சிலைகள் மற்றும் நினைவிடங்கள் அமைக்கப்பட மாட்டாது. அதற்குப் பதிலாக, தொழிலாளர் நலன், ஏழை மாணவ, மாணவியரின் கல்வி ஆகிய வற்றுக்கே முக்கியத்துவம் கொடுத்து, நிதி ஒதுக்கப்படும்- என்றார்.

# போலி என்கொண்டர் வழக்குகளை விசாரணை செய்யப் போவது யார்?

டில்லி, மே 3

காஷ்மீரில் போலி என்கவுன்டரில் ஈடுபட்ட இராணுவ அதிகாரிகள் மீது இராணுவ நீதிமன்றத்தில் விசாரணை நடத்துவதா? அல்லது வழக்கமான குற்றவியல் நீதிமன்றத்தில் அவர்கள் மீது விசாரணை நடத்தலாமா? என்பது குறித்து இராணுவ அதிகாரிகள்தான் முடிவு செய்ய வேண்டும் என்று உச்ச நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

காஷ்மீரில் கடந்த 2000 ஆம் ஆண்டு 36 அப்பாவிகளை தீவிரவாதிகள் கொன்றனர். இதற்குப் பதிலடியாக இராணுவத்தினர் நடத்திய என் கவுன்டரில் 7 தீவிரவாதிகள் கொல்லப்பட்டனர். ஆனால், கொல்லப்பட்ட தீவிரவாதிகள் குடும்பத்தினர் அளித்த முறைப்பாட்டின் பேரில் விசாரணை நடத்திய சி.பி.ஐ., போலி என்கவுன்டரில் அப்பாவிகள் கொல்லப்பட்டதாகவும் சம்பந்தப்பட்ட இராணுவத்தினர் மீது நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் வலியுறுத்தியது. ஆனால், இராணுவ அமைச்சகம் இதற்கு மறுத்தது.

இதுதொடர்பான வழக்கு உச்ச நீதிமன்றத்துக்கு சென்றது. இராணுவ அதிகாரிகள் தரப்பில் முன்னிலையான சொலிசிட்டர் ஜெனரல்


குற்றம் சாட்டப்பட்ட இராணுவத்தினர் மீது இராணுவ நீதிமன்றம் மூலம் விசாரணை நடத்துவதா? அல்லது வழக்கமான குற்றவியல் நீதிமன்றத்தில் அவர்கள் மீது விசாரணை நடத்தலாமா? என்பதை இரா ணுவ அதிகாரிகள் முடிவு செய்ய வேண்டும்.

பி.பி.மல்கோத்ரா, ''இராணுவத்தினர் போலி என்கவுன்டரில் ஈடுபடவில்லை. என்கவுன்டர் விவகாரத்தில் சம்பந்தப்பட்ட இராணுவத்தினரை விசாரிக்க முன் அனுமதி பெற வேண்டும். சிறப்பு ஆயுத படை சட்டம் அளித்துள்ள விதிவிலக்கு காரணமாக என்கவுன்டரில் ஈடுபட்ட இராணுவத்தினரை விசாரிக்க முடியாது'' - என்றார்.

எனினும், வழக்கில் குற்றம் சாட்டப்பட்ட இராணுவத்தினருக்கு இந்தச்சட்ட பாதுகாப்பு பொருந்தாது என்றும் அவர்கள் மீது நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று சி.பி.ஐ. தரப்பில் தெரிவிக்கப்பட்டது. இந்த வழக்கின் தீர்ப்பு கடந்த மாதம் 23 ஆம் திகதி ஒத்திவைக்கப்பட்டது.

இந்த வழக்கில் நீதிபதிகள் பி.எஸ்.சவுகான், சுவதந்தர்குமார் ஆகியோர் கொண்ட குழு நேற்று முன்தினம் அளித்த தீர்ப்பில், குற்றம் சாட்டப்பட்ட இராணுவத்தினர் மீது இராணுவ நீதிமன்றம் மூலம் விசாரணை நடத்துவதா? அல்லது வழக்கமான குற்றவியல் நீதிமன்றத்தில் அவர்கள் மீது விசாரணை நடத்தலாமா? என்பதை இராணுவ அதிகாரிகள் முடிவு செய்ய வேண்டும். இராணுவ நீதிமன்றத்தில் விசாரணை நடத்த விருப்பமில்லை என்றால் குற்றவியல் நீதிமன்றத்தில் சம்பந்தப்பட்ட இராணுவத்தினர் மீது விசாரணை நடத்த மத்திய அரசிடம் சி.பி.ஐ. அனுமதி கோரலாம். இதன் மீது மத்திய அரசு 3 மாதங்களுக்குள் பரிசீலித்து முடிவு செய்ய வேண்டும் என்று தெரிவித்தார். (வ)

# ஆலயத் தேர் கவிழ்ந்தது 6 பேர் உடல் நசுங்கிச் சாவு



திருவண்ணாமலை, மே.3

ஆரணி கயிலாசநாதர் கோயில் தேர்த்திருவிழாவின்போது நேற்றுமுன்தினம் மாலை திடீரென அச்சு முறிந்து பயங்கர சத்தத்துடன் தேர் கீழே சாய்ந்தது. இதில் 5 பேர் உடல் நசுங்கி பரிதாபமாக உயிரிழந்தனர். பூசகர் உட்பட 5 பேர் படுகாயம் அடைந்தனர். இந்த சம்பவத்தால் பக்தர்கள் அதிர்ச்சியடைந்துள்ளனர்.

திருவண்ணாமலை மாவட்டம் ஆரணி கோட்டையில் உள்ளது கயிலாசநாதர் கோயில். இது இருநூறு ஆண்டுகளுக்கு முந்தைய புராதன கோயில். இங்கு ஆண்டுதோறும் சித்திரை பிரம்மோற்சவம் 9 நாள்கள் நடைபெறும். இந்த ஆண்டுக்கான பிரம்மோற்சவம் கடந்த 24 ஆம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகியது.

விழாவின் முக்கிய நிகழ்ச்சியான தேரோட்டம் நேற்றுமுன்தினம் காலை 6 மணியளவில் ஆரம்பமாகியது. 75 அடி உயர தேரில் உற்சவ மூர்த்திகள் அறம் வளர் நாயகி சமேத கயிலாசநாதர் மேளதாளம் முழங்க வீதி உலா புறப்பட்டனர். கோட்டை, பழைய பஸ் நிலையம், வடக்கு மாட வீதி, பெரியக் கடை வீதி, மண்டி வீதி, காந்தி வீதி, மார்க்கெட் வீதி வழியாகச் சென்று மாலை 6 மணியளவில் பழைய பஸ் நிலையம் மணிக்கூண்டு அருகே கோயிலுக்குத் திரும்பிக் கொண்டிருந்தது.

இந்தநிலையில் எதிர்பாராமல் தேர் சடசடவென பயங்கர சத்தத்துடன் அச்சு முறிந்து கீழே சாய்ந்தது. இதில் தேரில் இருந்த பூசகர்கள் மற்றும் தேரோட் டம் காண வந்த பக்தர்கள் உட்பட 9 பேர் தேரின் அடியில் சிக்கினர். இவர் களில் 6 பேர் உடல் நசுங்கி பரிதாபமாக உயிரிழந்தனர். (வ)

# மதுரை ஆதீன இளைய வாரிசாக நித்தியானந்தா

### தமிழகம் எங்கும் அதிர்ச்சி; கடும் எதிர்ப்பு



நாகப்பட்டனம்,மே3

நித்தியானந்தாவுக்குக் கொடுக்கப்பட்ட பதவியை மதுரை ஆதீனம் இன்னும் 10 நாள்களுக்குள் ரத்து செய்ய வேண்டும். இல்லாவிட்டால் சட்டப்படியான நடவடிக்கைகளை ஆரம்பிப்போம் என்று 13 மடாதிபதிகள் மதுரை ஆதீனத்துக்கு எச்சரிக்கை விடுத்துள்ளனர்.

நித்தியானந்தாவை மதுரை ஆதீனத்தின் இளைய ஆதீனமாக அண்மையில் யாருக்கும் தெரியப்படுத்தாமல் அறிவித்தார் மதுரை ஆதீனம். இது பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது. இந்து அமைப்புகள், கட்சிகள், பொதுமக்களிடையே இது பெரும் அதிருப்தி அலைகளையும், எதிர்ப்புகளையும் ஏற்படுத்தியுள்ளது. மேலும் மடாதிபதிகளிடமும் இது அதிர்ச்சி அலைகளை ஏற்படுத்தியுள்ளது.

இந்த நிலையில், தமிழகத்தில் உள்ள 13 சைவ மடங்களின் அதிபதிகள் கூடி மயிலாடுதுறையில் உள்ள தர்மபுரம் ஆதீனம் கலைக் கல்லூரியில் அவசர ஆலோசனைக் கூட்டத்தை நேற்றுமுன்தினம் மாலை நடத்தினர்.

இந்தக் கூட்டத்திற்கு தர்மபுரம் ஆதீனம், குரு மகா சன்னிதானம் ஸ்ரீ சண்முக தேசிக பரமாச்சாரிய சுவாமிகள் தலைமை தாங்கினார். குன்றக்குடி ஆதீனம், திருவண்ணாமலை ஆதீனம், திருவாவடுதுறை ஆதீனம், சூரியனார் கோயில் ஆதீனம், திருப்பனந்தாள் ஆதீனம், செங்கோல் ஆதீனம், துழாவூர் ஆதீனம், வேலக் குறிச்சி ஆதீனம், காமாட்சி புரி ஆதீனம், ஊரான் அடிகள், சிதம்பரம் மௌன மட சுவாமிகள் உள்ளிட்டோர் இதில் கலந்து கொண்டனர்.

இந்தக் கூட்டத்தில் விவாதிக்கப்பட்டது குறித்து ஊரான் அடிகள் தெரிவித்ததாவது:-

இன்னும் 10 நாள்களுக்குள் இந்த நியமனத்தை மதுரை ஆதீனம் ரத்து செய்ய வேண்டும். இல்லாவிட்டால் ஆதீனத்தை கையகப்படுத்த வேண்டும் என்று தமிழக அரசை கேட்டுக் கொள்வோம். மேலும் சட்டப்படியான நடவடிக் கைகளையும் மேற்கொள்வோம்.

நித்தியானந்தாவின் நியமனம் என்பது, சைவ மடங்களின் மரபுகள், உரிமைகள், விதிகளுக்குப் புறம்பானது என்பது தெள்ளத் தெளிவான ஒன்று. எனவே இதை மதுரை ஆதீனம் வாபஸ் பெற்றேயாக வேண்டும் - என்றார்.

## ராஜீவ் கொலையாளிகளின் வழக்கு உச்ச நீதிமன்றுக்கு

சென்னை,மே3

இந்தியாவின் முன்னாள் பிரதமர் ராஜீவ் காந்தி படுகொலை செய்யப்பட்ட வழக்கில் தூக்குத்தண்டனை விதிக்கப்பட்ட முருகன், பேரறிவாளன், சாந்தன் ஆகியோர் தாக்கல் செய்த கருணை மனுக்கள் தமிழகத்தில் இருந்து உச்ச நீதிமன்றத்துக்கு மாற்றப்பட் டுள்ளன.

கடந்த 1991ஆம் ஆண்டு முன்னாள் பிரதமர் ராஜிவ்காந்தி தமிழ்நாட்டின் ஸ்ரீபெரும்புதூரில் வைத்து விடுதலைப் புலிகள் அமைப்பினரால் படுகொலை செய்யப்பட்டார்.


இந்தவழக்கில் முருகன், பேரறிவாளன், சாந்தன் ஆகியோர் குற்றவாளிகளாக நிரூபிக் கப்பட்டு அவர்களுக்கு தூக்குத் தண்டனை விதிக்கப்பட்டது.

பின்பு அவர்கள் தண்டனையைக் குறைக்க கருணை மனுக்கள் எழுதி சென்னை உயர் நீதிமன்றத்தில் தாக்கல் செய்தனர்.

இந்தநிலையில் இந்தமனுக்கள் சென்னை உயர் நீதிமன்றத்திலிருந்து உச்சநீதிமன்றத் துக்கு மாற்றப்பட்டுள்ளது. இதற்கு முன்பு இவர் களின் கருணை மனுக்களை உச்சநீதிமன்றம் நிராகரித்திருந்தது குறிப்பிடத்தக்கது.

தங்களின் கருணை மனுக்கள் மீது முடிவெடுக்க இந்திய ஜனாதிபதி 11 ஆண்டுகள் எடுத்துக் கொண்டதால் தங்களுக்கு விதிக்கப் பட்ட தண்டனையை நிறுத்தி வைக்க வேண் டும் என்று 3 பேரும் முன்னதாக கோரிக்கை விடுத்திருந்தனர். (வ)

## ஒபாமாவின் புகைப்படத்தை பயன்படுத்தி செல்போன் இணைப்பு பெற்ற வாலிபர்



அமெரிக்க ஜனாதிபதி பராக் ஒபாமாவின் புகைப்படத்தைப் பயன்படுத்தி, ஆந்திராவைச் சேர்ந்த நபர் ஒருவர் கைபேசி இணைப்பை (Cell phone Connection) வாங்கியது பெரும் பரபரப்பை ஏற்படுத்தி உள்ளது.

எந்தளவுக்கு இந்தியத் தொலைத் தொடர்பு நிறுவனங்கள் மெத்தனமாகச் செயற்படுகின்றன என்பதை இந்த ஒரு சம்பவம் எடுத்துக்காட்டியுள்ளது.

ஆந்திர மாநிலம் நல்கொண்டாவைச் சேர்ந்தவர் எம்.பிரசாத் (வயது 21). இவர் கைபேசி இணைப்பு வாங்க ஏர்டெல் நிறுவனத்திடம் விண்ணப்பித்தார். அப்போது ஒபாமாவின் புகைப்படத்தைக் கொடுத்துள்ளார். அவரது விண்ணப்பத்தை ஏற்று ஏர்டெல்நிறுவனமும் எண் ஒன்றை ஒதுக்கீடு செய்துள்ளது.

பிரசாத் கொடுத்த ஆவணத்தை முறையாகக் கூட சரி பார்க்கவில்லை. ஒபாமாவின் முகம் கூடவா ஏர்டெல் ஊழியர்களுக்குத் தெரியாமல் போய் விட்டது என்று அனைவரையும் அதிரவைத்துள்ளது இந்தச் சம்பவம்.

இதுகுறித்து நல்கொண்டா எஸ்.பி.நவீன்குலாத்திக்கு முறைப்பாடு போனது. இதையடுத்து அவர் பொலிஸ் மேலதிகாரிவரை விடயத்தைக் கொண்டு சென்றார். அவர் இதுகுறித்து டிராய் அமைப்பிடம் முறைப்பாடு தெரிவிக்கவுள்ளார்.

தற்போது இந்த இணைப்பை பொலிஸ் அதிகாரிகள் துண்டித்துச் செயற்படவிடாமல் தடுத்து வைத்துள்ளனர்.

இவ்வாறு ஒபாமாவின் புகைப்படத்தைப் பயன்படுத்தி கைபேசி இணைப்புப் பெற்ற சம்பவம் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது. (வ)

# இலங்கை தமிழர்களின் மாறுவாழ்வுதான் முக்கியம்

### ஜி.கே.வாசன் தெரிவிப்பு

இலங்கைத் தமிழர் பிரச்சினையை பொறுத்தவரை மத்திய அரசின் நிலைப்பாடு தெளிவாக உள்ளது. இலங்கை தமிழர்களின் மறுவாழ்வையும், அவர்களது வாழ்வாதாரத்தையும்தான் நாம் கவனமாக பார்த்து வருகிறோம். அதனால்தான் ஐ.நா. மன்றத்தில் இலங்கை தமிழர்களுக்கு ஆதரவாக அமெரிக்கா கொண்டு வந்த தீர்மானத்தை இந்தியா ஆதரித்தது என்று மத்திய அமைச்சர் ஜி.கே. வாசன் தெரிவித்தார்.



திருச்சியில் நடந்த ஐ.என்.டி.யூ.சி மாநில மாநாட்டில் கலந்து கொண்ட மத்திய அமைச்சர் ஜி.கே.வாசன் செய்தியாளர்களுக்கு பேட்டி அளித்தார்.

பேட்டியன்போது இலங்கைத் தமிழர் பிரச்சினைக்கு 'தமிழ் ஈழம்' ஒன்றே தீர்வு என்று தி.மு.க. தலைவர் கருணாநிதி கூறி இருக்கிறார். மேலும் 'டெசோடு அமைப்பை கருணாநிதி மீண்டும் ஆரம்பித்திருப்பதால் தி.மு.க-காங்கிரஸ் உறவில் விரிசல் ஏற்படுமா? என்று செய்தியாளர் கள் கேட்டகேள்விக்கே அவர் மேற்கண்டவாறு பதிலளித்தார்.

அவர் தொடர்ந்து பதிலளிக்கையில் மேலும் தெரிவித்ததாவது:-

இந்திய நாடாளுமன்ற எதிர்க்கட்சித் தலைவர் சுஷ்மா சுவராஜ் தலைமையில் நாடாளுமன்ற உறுப்பினர்கள் குழுவை இலங்கைக்கு அனுப்பியது. அந்த குழுவினர் இலங்கை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவைச் சந்தித்து தமிழர்க ளுக்கான மறுவாழ்வுகள் தொடர்பான திட்டங்களைக் கொடுத்து விட்டு வந்து இருக்கிறார்கள் - என்றார் அவர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# உலங்கு வானூர்த்தி விபத்து

## கொலம்பியாவில் 13 இராணுவத்தினர் சாவு

பகோடா, மே 3

கொலம்பிய விமானப் படைக்குச் சொந்தமான உலங்குவானூர்த்தி விபத்துக்குள்ளானதில் அதில் பயணம் செய்த 13 பேர் உயிரிழந்தனர்.

கரிபிய கடற்பகுதியில் இந்த விபத்து நிகழ்ந்தது. உலங்குவானூர்த்தி தரையிறங்கும்போது தீப்பிடித்தது. இதில் பயணம் செய்த இராணுவத்தினர் மற்றும் பொலிஸார் உயிரிழந்தனர் என்று விமானப் படை இயக்குநர் ஜோர்ஜ் பெர்ணான்டஸ் தெரிவித்தார். பெல் 212 ரக உலங்கு வானூர்த்தி கடந்த திங்கட்கிழமை மாலை 4.30 மணிக்கு விபத்துக்குள்ளானதாகக் கொலம்பிய விமானப்படை இணையதளத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. விபத்து குறித்து விசாரணைக்கு உத்தரவிடப்பட்டுள்ளதாகவும் அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.



கரிபிய கடற்பகுதியில் இந்த விபத்து நிகழ்ந்தது. உலங்குவானூர்த்தி தரையிறங்கும்போது தீப்பிடித்தது.

கடந்த வாரம் தொடக்கம் கரிபியன் கடற்பிராந்தியத்தில் கொலம்பிய இராணுவத்தினர் பயிற்சியில் ஈடுபட்டு வருகின்றனர்.

கடற்பகுதியில் நிலவும் பாதகமான காலநிலை மாற்றத்தால் இந்த விபத்து நிகழ்ந்திருக்கலாம் எனக் கொலம்பிய இராணுவத்துறைப் பேச்சாளர் ஒருவர் தெரிவித்திருக்கிறார்.

ஆயினும் விசாரணைகள் இன்னும் முடிவடையவில்லை என தெரிவிக்கப்படுகின்றது.

## ஆஸ்திரேலியாவில் இந்தியக் குடும்பம் கொலை



மெல்போர்ன் , மே 3

ஆஸ்திரேலியாவில் வசித்த இளம் இந்தியத் தம்பதியினர் 2 குழந்தைகளுடன் மர்மமான முறையில் நேற்றுமுன்தினம் இறந்து கிடந்தனர். கிலென் வேவெர்லே நகரில் இந்தியாவைச் சேர்ந்த நிலேஷ் சர்மா மற்றும் பிரிதிகா தம்பதி, திவேஸ், திவ்யா என்ற 2 குழந்தைகளுடன் வசித்தனர். இந்த நிலையில், இவர்கள் 4 பேரும் நேற்றுமுன்தினம் வீட்டில் மர்மமான முறையில் இறந்து கிடந்த னர்.

இது குறித்து தகவல் அறிந்து வந்த பொலிஸார் தீவிர சோதனையில் ஈடுபட்டனர். ஆனால், இவர்கள் இறந்ததற்கான எந்தவொரு தடயமும் கிடைக்கவில்லை. இதைத் தொடர்ந்து இவர்கள் கொலை செய்யப்பட்டார்களா அல்லது தற்கொலை செய்து கொண்டார்களா என்ற கோணத்தில் பொலிஸார் தீவிர விசாரணை நடத்தி வருகின்றனர்.

# நேட்டோ படையினருக்கு சாலைவரி

## பாகிஸ்தான் யோசிக்கிறது

இஸ்லாமாபாத், மே 3

ஆப்கானிஸ்தானுக்குப் பொருள்களை ஏற்றிச்செல்லும் நேட்டோ படையினரின் வாகனங்களுக்கு தலா 50 ஆயிரம் ரூபாய் வரி விதிக்க பாகிஸ்தான் திட்டமிட்டுள்ளது.

ஆப்கானிஸ்தானில் அமெரிக்கா தலைமையில் நேட்டோ படையினர் பாதுகாப்பில் ஈடுபட்டுள்ளனர். இவர்களுக்குத் தேவையான பொருள்கள் கண்டெய்னர் லொறிகள் மூலம் பாகிஸ்தான் வழியாகக் கொண்டு செல்லப்படுகிறது. கடந்த ஆண்டு நவம்பர் மாதம் நேட்டோ படைகள், தவறுதலாக வான்வழித் தாக்குதல் நடத்தியதில், 24 பாகிஸ்தானியப் படையினர் கொல்லப்பட்டனர். இதைத் தொடர்ந்து, ஆப்கானிஸ்தானுக்குப் பொருள்களை கொண்டு செல்லும் தரை வழியை பாகிஸ்தான் மூடிவிட்டது.

இது குறித்து, தேசிய நெடுஞ்சாலை ஆணைய தலைவர் முகமது அலி கர்தேசி குறிப்படுகையில், ''நேட்டோ வாகனங்கள் கடந்த 10 ஆண்டுகளாகப் பாகிஸ்தான் நெடுஞ்சாலைகளைப் பயன்படுத்தியதில் 100 பில்லியன் டொலர் அளவுக்கு சாலைகள் சேதமடைந்துள்ளன. இந்தச் சாலைகளை செப்பனிட 136 கோடி ரூபாய் செலவாகும். எனவே, இந்தச் செலவை ஈடுகட்டும் வகையில், நெடுஞ்சாலையைப் பயன்படுத்தும் ஒவ்வொரு நேட்டோ வாகனத்துக்கும் 50 ஆயிரம் ரூபாய் வரி விதிக்க வேண்டும், என தகவல் தொடர்பு அமைச்சகம் பரிந்துரை செய்துள்ளது. இந்தப் பரிந்துரை பாதுகாப்பு மற்றும் வெளியுறவு அமைச்சகத்தின் ஒப்புதலுக்கு அனுப்பப்பட்டுள்ளது''-என்றார்.

## லண்டனில் வெள்ளம்

லண்டன்,மே 3

பிரித்தானியாவில் தொடர்ந்து கன மழை பெய்து வருகிறது. இதனால் லண்டனின் தென்மேற்குப் பகுதி, வடகிழக்குப் பகுதி மற்றும் கிழக்குப் பகுதிகளில் வெள்ளம் சூழ்ந்திருக்கிறது. மழையுடன் பலத்த சூறைக்காற்றும் வீசியது. இதனால் மின்சாரக் கம்பங்கள் சாய்ந்து விழுந்து விட்டன.


வேல்ஸ், வில்ட்ஷைர், ஒக்ஸ்போர்ட் ஷைர், சோமர்செட் பகுதிகளில் ஆயிரக்கணக்கான வீடுகள் மின்சாரமின்றி இருளில் மூழ்கின. பல இடங்களில் மணிக்கு 50 கிலோ மீற்றரில் இருந்து 60 கிலோ மீற்றர் வேகத்தில் சூறைக்காற்று வீசியது.

இதில் மரங்கள் வேரோடு சாய்ந்து விழுந்து விட்டன. சூறைக் காற்றினால் கடலோரத்தில் நிறுத்தி வைத்திருந்த படகுகளும் பாதிக்கப்பட்டன.

பொதுமக்கள் வெள்ள அபாயம் குறித்து எச்சரிக்கையாக இருக்க வேண்டும் என்று வானிலை இலாகா எச்சரிக்கை விடுத்துள்ளது. பல்வேறு நகரங்களில் உள்ள ஆறுகளிலும் வெள்ளம் ஏற்பட்டுள்ளது.

செம்ஸ்போர்டு, எஸ்ஸெக்ஸ் பகுதிகளில் ஆற்றோரத்து மக்கள் பாதுகாப்பான இடத்திற்குச் செல்லும்படி எச்சரிக்கப்பட்டுள்ளனர். ஆற்று ஓரத்தில் இருக்கும் வீடுகளை வெள்ளம் சூழும் நிலை ஏற்பட்டுள்ளது.

# கடவுள் பெண் கைது



அமெரிக்காவில் பெண் சிறைச்சாலை அதிகாரி ஒருவரைப் பின் தொடர்ந்து தொல்லை கொடுத்த குற்றச்சாட்டில் 33 வயதான பெண்ணொருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

சந்தேகநபரான இந்தப் பெண், தனது நெற்றியில் கடவுள் என பச்சைக்குத்திக் கொண்டிருந்தமையால் இலகுவாக இனம்காண முடிந்ததாகப் பொலிஸார் தெரிவித்துள் ளனர்.

ஜெமி கொலோவே எனும் இந்தப் பெண், மேற்படி சிறைச்சாலை அதிகாரியின் வீட்டிற்குத் தொலைபேசி அழைப்புகளை விடுத்ததுடன் தபாலில் பொதிகளையும் அனுப்பினார் என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

அமெரிக்காவில், முகத்திலும் நெற்றியிலும் பச்சைக் குத்திக்கொண்டு குற்றச் செயல்களில் ஈடுபடுவதாக கூறப்படும் சந்தேகநபர்களின் எண்ணிக்கை அண்மைக் காலமாக அதிகரித்துள்ளது.

## சேகுவேராவின் நினைவுகளோடு மே தினம்



கியூபத் தலைநகர் ஹவானாவில் மே தினம் உணர்வுபூர்வமாக அனுஷ்டிக்கப்பட்டது. சோசலிசத்தின் முன்னோடியாக விளங்கும் சேகுவேராவின் படங்களைத் தாங்கிய பேரணிகளும் ஹவானா தெருக்களில் நடைபெற்றன.

# அங்கேயும் இரும்பு வியாபாரம்

வார்சோ, மே 3

செக் குடியரசு நாட்டின் கர்லோவிவெய்ரி மாகாணத்தில் ஸ்லாவ்கோவ் நகரில் ஆற்றின் குறுக்கே புகையிரதப் பாதையின் பாலம் பயன்படுத்தப்படாமல் பல ஆண்டுகளாக இருந்துள்ளது.

101 ஆண்டுகள் ( 1901-) பழமை வாய்ந்த இந்த இரும்பு பாலத்தில் 200 மீற்றர் புகையிரதத் தண்டவாளமும் உள்ளது. இதனை சில விஷமிகள் , பாரந்தூக்கி மூலம் பெயர்த்து திருடிச் சென்றுள்ளனர். பட்டப் பகலில் இவர்கள் திருடிக் கொண்டிருந்ததை பார்த்த பொலிஸார் விசாரித்த போது புகையிரதப் பாதை நிர்வாகத்திடம் ஒப்புதல் பெற்றுத் தான் இதனை எடுத்துச் செல்லவதாகப் போலி ஒப்பந்த ஆவணம் ஒன்றை காட்டியுள்ளனர் என்று அந்தப் நாட்டு பத்திரிகையில் செய்தி வெளியிடப்பட்டுள்ளது.

திருட்டுப் போன இரும்பு பாலத்தின் எடை 10 தொன் எனவும், இதன் மதிப்பு 6 ஆயிரம் மில்லியன் டொலர் என மதிப்படப்பட்டுள்ளது.

## ரோம்னியின் வங்கிக் கணக்குகள் வெளிச்சத்துக்கு வந்தன

அமெரிக்க அதிபர் தேர்தலில், குடியரசுக் கட்சியின் சார்பாக அதிபர் வேட்பாளராவதற்கு அதிக வாய்ப்புள்ளவராகக் கருதப்படும் மிட் ரோம்னியின் வெளிநாட்டு வங்கி கணக்குகளை அதிபர் ஒபாமாவின் பிரசாரக் குழுவினர் நேற்றுமுன்தினம் வெளியிட்டனர். மேலும் ரோம்னி குறைந்த அளவே வரி செலுத்துவதாகவும் அவர்கள் குற்றஞ்சாட்டினர்.

அயர்லாந்து முதல் ஆஸ்திரேலியா வரை ரோம்னிக்கு வங்கி கணக்குகள் உள்ளதாக அந்தக் குழுவினர் வெளியிட்டுள்ள தகவல் தெரிவிக்கிறது.

''தாம் செலுத்த வேண்டிய வரியைத் தவிர்க்க அவர் இந்த வங்கிக் கணக்குகளைப் பயன்படுத்துகிறாரா என்று எங்களுக்குத் தெரியாது. ஆனால் 2010இல் ரோம்னி செலுத்திய வரி 13.9 சதவீதம் குறைந்துள்ளது.

நடுத்தர அமெரிக்கர்களை விடவும் ரோம்னி குறைவான வரியையே செலுத்துகிறார்'' என்று அந்தக் குழுவினர் தெரிவித்தனர். ரோம்னி அதிபரானால் பணக்காரர்களுக்கான வரியைக் குறைப்பார் என்றும் அவர்கள் கூறியுள்ளனர்.

# ரூபர்ட் முர்டோக் தகுதியற்றவர்

லண்டன்,மே 3

சர்வதேச ஊடக நிறுவனத்தை நிர்வகிக்க, ரூபர்ட் முர்டோக் தகுதியில்லாதவர் என, பிரிட்டன் நாடாளுமன்ற உறுப்பினர்கள் தெரிவித்துள்ள னர்.

தொலைபேசி ஒட்டுக் கேட்பு விவகாரத்தில் சிக்கிய, 168 ஆண்டு கால பாரம்பரியமிக்க 'நியூஸ் ஒப் த வேர்ல்டு' பத்திரிகை சமீபத்தில் மூடப்பட்டது. தொலைபேசி ஒட்டுக் கேட்பு விவகாரம் தொடர்பாக, நாடாளுமன்ற விசாரணைக் குழு முன், பத்தி ரிகை அதிபர் ரூபர்ட் முர் டோக்கும், அவரின் மகன் ஜேம்சும் நிறுத்தப் பட்டார்கள். நடந்த சம்பவத்துக்கு இவர்கள் மன்னிப்பு கேட்டனர். முர்டோக்கின் மகன் ஜேம்ஸ், சர்வதேச 'பி ஸ்கை பி' என்ற நிறுவனத்தை நிர்வகித்து வந்தார். சமீபத்தில் இவர், இதன் தலைவர் பதவியிலிருந்து விலகினார். இந்த நிலையில், தொலைபேசி ஒட்டுக் கேட்பு விவகாரத்தை விசாரித்த நாடாளுமன்றக் குழு, தனது அறிக்கையை இறுதி செய்துள்ளது. ''நாடாளு மன்றக் குழு முன் முர்டோக், தவறானக் கருத்துகளைத் தந்துள்ளார். இதன் மூலம் அவர், நடாளு மன்றத்தை ஏமாற்றியுள்ளார். எனவே, அவர் சர்வதேச ஊடக நிறுவனத்தை நடத்த சற்றும் தகுதியில்லாதவர்'' என, 125 பக்க அறிக்கையில், நாடாளு



மன்றக் குழு தெரிவித்துள்ளது. இதன் மூலம் முர்டோக் நிறுவனங்களுக்கு வழங்கப்பட்டுள்ள உரிமம் ரத்து செய்யப்படுமா? என்ற கேள்வி எழுந்துள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஏவுகணைத் தாக்குதல் தொடரும்

## பாகிஸ்தான் கருத்துக்கு அமெரிக்கா பதிலடி

வோஷிங்டன்,மே3

பாகிஸ்தானுக்குள்ஆளில்லா விமானக் குண்டு வீச்சை உடனே நிறுத்த வேண்டும் என்று அமெரிக்காவைப் பாகிஸ்தான் எச்சரித்தது. ஆனால், தாக்குதல் தொடரும் என்று அமெரிக்கா நேற்று பதிலடி கொடுத்துள்ளது.

பாகிஸ்தானில் ஆப்கான் எல்லையோர மலைப் பகுதிகள் அல்குவைதா மற்றும் தலிபான் தீவிரவாதிகளின் கூடாரமாக இருக்கிறது. எனவே, தீவிரவாதிகளை அழிக்க ஆப்கான் படைதளத்தில் இருந்து ஆளில்லா விமானங்களை அமெரிக்கா அனுப்பி குண்டு வீசி வருகிறது.

சமீபத்தில் அப்படி நடந்த குண்டுத்தாக்குதலில் தீவிரவாதிகளுக்குப் பதிலாகப் பாகிஸ்தான் படையினர் 24 பேர் கொல்லப்பட்டனர். அதனால் ஆத்திரமடைந்த பாகிஸ்தான், இனி அனுமதியின்றி தமது நாட்டு எல்லைக்குள் அமெரிக்கப் படைகள் தாக்குதல் நடத்தக் கூடாது என்று எச்சரித்தது.



மக்களின் உணர்வுகளை அமெரிக்கா மதிக்கத் தவறினால் அதனுடன் உறவை மறுபரிசீலனை செய்வோம்.

இதுபற்றி நேற்று முன்தினம் பாகிஸ்தான் பிரதமர் கிலானி அளித்த பேட்டியில், மக்களின் உணர்வுகளை அமெரிக்கா மதிக்கத் தவறினால் அதனுடனான உறவை மறுபரிசீலனை செய்வோம். ஆளில்லா விமான தாக்குதலை இனியும் பொறுக்க முடியாது என்று கூறினார்.

இந்த நிலையில், பின்லேடன் கொல்லப்பட்ட முதலாம் ஆண்டு நாளை முன்னிட்டு வோஷிங்டனில் ஒபாமா அரசின் தீவிரவாத எதிர்ப்பு ஆலோசகர் ஜோன் பிரென்னன் கூறுகையில், ''தீவிரவாதிகளை ஒழிப்பதில் எந்த மாற்றமும் இல்லை. அல்குவைதா, தலிபான் தீவிரவாதிகளை அழிக்க பாகிஸ்தானில் தாக்குதல் நடத்துவது சட்டரீதியானது. நியாயமானது. அது தொடரும் ''- என்றார்.

இதற்கிடையில் நேற்று ஒசாமா பின்லேடன் கொல்லப்பட்ட ஒருவருட பூர்த்தியைஅமெரிக்கமக்கள்கொண்டாடினர். அதில் கருத் துரைத்த அமெரிக்க அதிபர் பராக் ஒபாமா பாகிஸ்தான் மற்றும் ஆப்கானிஸ்தான் போன்ற நாடுகளில் பதுங்கியிருக்கும் தீவிரவாதிகளை அழிப்பதில் ஆளில்லா விமானங்கள் மிக முக்கிய பங்காற்றுவதாகக் குறிப்பிட்டார்.

## மீண்டெழுந்தது வர்த்தக மையம்


நியூயோர்க்,மே 3

ஒசாமா பின்லேடனால் 10 ஆண்டுகளுக்கு முன் தரைமட்டமாக்கப்பட்ட நியூயோர்க் உலக வர்த்தக மைய கட்டடம் மீண்டும் கட்டி முடிக்கப்பட்டுள்ளது.

புர்ஜ் துபாய்க்கு அடுத்ததாக உலக உயர்ந்த கட்டடமான அதன் உயரம் 541 மீற்றர். செப்ரெம்பர் 11, 2001 இல் வெடிகுண்டுகளை நிரப்பிய விமானங்கள் மூலம் நியூயோர்க் உலக வர்த்தக மைய இரட்டை கட்டடங்களைப் பின்லேட னின் தீவிரவாதிகள் மோதி தகர்த்தனர்.

3,000 பேருக்கு மேல் கொல்லப்பட்ட அந்தப் பயங்கரம் நடந்து 10 ஆண்டு தேடலுக்கு பிறகு கடந்த ஆண்டு மே 2ஆம் திகதி பாகிஸ்தானில் பின்லேடனை அமெரிக்கப் படையினர் சுட்டுக் கொன்றனர்.

தரைமட்டமான உலக வர்த்தக மையக் கட்டட இடத்தில் மீண்டும் பிரமாண்ட கட்டடம் கட்டப்பட்டு வந்தது. அதன் உச்சியில் 124 மீற்றர் உயர தூண் அமைக்கும் பணி சென்றவாரம் முடிவுற்றது. இதையடுத்து, கட்டடத்தின் உயரம் 541 மீற்றராக அதிகரித்தது. இதன்மூலம், டுபாயில் உள்ள 828 மீற்றர் உயர புர்ஜ் துபாய் கட்டடத்துக்கு அடுத்தபடியாக உலகின் 2ஆவது உயர்ந்த கட்டடமாக உலக வர்த்தக மையக் கட்டடம் பெயர் பெற்றுள்ளது. தாய்வானில் உள்ளதைப்பே கட்டடம் 508 மீற்றருடன் அடுத்த இடம்பிடித்தது.



## சொனி நிறுவனம் 10 ஆயிரம் பேரை பணி நீக்கியது

பெரும் நட்டத்தைச் சமாளிக்கத் தடுமாறி வருகின்ற ஜப்பானிய சொனி மின்னணு நிறுவனம், தனது ஊழியர் களில் சுமார் பத்தாயிரம் பேரை பணி நீக்கம் செய்யவுள்ளதாக தெரிவித்துள்ளது.

அடுத்த 12 மாதங்களில் உலகில் பல பாகங் களில் உள்ள தமது பணியிடங்களில் இந்தப் பணி நீக்கம் மேற்கொள்ளப்படும் என நிறுவனம் அறிவித்துள்ளது.இந்த வருடத்துக்கான நட்டத்தின் மதிப்பீட்டை செவ்வாயன்று, இரண்டு மடங்காக அதாவது 640 கோடி டொலர்களாக அதிகரித்து. அறிவித்திருக்கிறது சொனி நிறுவனம்.

அண்மைக் காலமாக சரிந்து வரும் பொருளாதார நெருக்கடிகளினால் யாகூ மற்றும் மைக்ரோசொப்ற் போன்ற நிறுவனங்களும் அதிகளவான ஊழியர்களைப் பணிநீக்கம் செய்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

## ஈராக்கின் துணை அதிபர் மீது குற்றச்சாட்டு

ஈராக்கில் சதாம் உசேன் ஆட்சி முடிவுக்கு வந்த உடன் அமெரிக்காவின் துணையுடன் அங்கு ஜனநாயக ஆட்சி நடைமுறைப்படுத்தப்பட்டது.

ஈராக்கின் துணை அதிபராக இருப்பவர் சன்னி பிரிவைச் சேர்ந்த தாரிக் அல் ஹாஷ்மி. பாக்தாத்தைச் சேர்ந்த ஆறு நீதிபதிகளை ஹாஷ்மியும் அவரது பாது காவலர்களும் கொன்றுவிட்டனர் என்று, நீதித்துறை உயர் கவுன்சில் அதிகாரி அப்துல் சத்தார் குற்றஞ் சாட்டியுள்ளார்.

''இவர்கள் மீது, 150 வழக்குகள் உள்ளன. இன்னும் இந்த வழக்குகளின் எண்ணிக்கை அதிகரிக்கக் கூடும்'' என, அவர் தெரிவித் துள்ளார்.

ஆறு நீதிபதிகளைக் கொன்றது தொடர்பான வழக்கு விசாரணை, வரும் 3ஆம் திகதி தொடங்குகிறது.

இதற்கிடையே துணை அதிபர் ஹாஷ்மி, கத்தார், சவூதி அரேபியா பயணம் மேற்கொண்டு விட்டு தற்போது, துருக்கியில் தங்கியுள்ளார். நாடு திரும்பினால் விசாரணை எதிர்கொள்ள நேரிடும் என்பதால், இவர் நாடு திரும்ப மாட்டார் என எதிர்ப்பார்க்கப்படுகிறது.

அரசியல் உள் நோக்கத்துடன் தன் மீது இந்தக் குற்றச் சாட்டுகள் சுமத்தப்பட் டுள்ளதாக ஹாஷ்மி தெரிவித்துள்ளார்.


முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



புவிமலர்
11.06.1927

விண்மலர்
14.05.2011

திருமதி மங்கையர்க்கரசி நமசிவாயம்
(5ஆம் வட்டாரம், புங்குடுதீவு)
திதி: பூர்வபக்க துவாதசி (03.05.2012)

மண்ணில் வந்துதித்த மங்கையர் திலகம்
குடும்பமே கோயிலாக கணவனே கடவுளாக
சொந்தங்களே பெரும் சொத்தாக
இல்லறத்தை இனிய நல்லறமாக
அன்பை அள்ளியிறைத்த அரசியவர்

மகளாய், மனைவியாய், அன்னையாய்
மாமியாய், அப்பம்மாவாய், அம்மம்மாவாய்
எடுத்த பரிமாணங்கள் எதிலும்
இல்லறத்தின் இலக்கணம் பிசகாது
ஆற்றிய அன்புடன் கூடிய கடமைகள்
இதயத்திலெல்லாம் இமயமாக்கியது உங்களை
அன்றே அறிந்து வைத்தார்கள் போலும்
''மங்கையர்க்கரசி'' எனும் திருநாமத்தை

சான்றோர் என்றும் சாவதில்லை
அவர்தம் எச்சங்களில் நாளும்
அவர் நாமம் நிறைந்திருக்கும்
ஆண்டொன்று கழிந்தால் என்ன...
எத்தனை திங்கள் கடந்தாலும்
உங்கள் நினைவுகள் எம்முடன் வாழ்ந்து கொண்டிருக்கும்....

43/1,சம்பியன் லேன்,
கொக்குவில் கிழக்கு,கொக்குவில்.

மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.


## மியான்மரில் சூகி–பான் சந்திப்பு

மியான்மரில் 3 நாள் சுற்றுப் பயணம் மேற்கொண்ட ஐ.நா. பொது செயலாளர் மூன், நேற்றுமுன்தினம் அந்த நாட்டு தேசிய ஜனநாயகக் கட்சித் தலைவரும், அமைதிக் கான நோபல் பரிசு பெற்றவருமான சூகியைச் சந்தித்தார். இடைத் தேர்தலில் வெற்றி பெற்றதற்கு வாழ்த்து தெரிவித்தார்.

மியான் மரில் ஜனநாயகம் தழைத் தோங்கவும், மனித உரிமைகள் நிலைநாட்டவும் ஐ.நா. உதவி செய்யும். மேலும், நியூயோர்க்கில் அமைந்துள்ள ஐ.நா. தலைமையகத்துக்கு வர வேண்டும் என்று சூகிக்கு அழைப்பு விடுத்தார். 3வது முறையாக மியான்மர் சென்ற மூன், அந்த நாட்டு அதிபர் யு தெயின் செயின் மற்றும் சபா நாயகரையும் சந்தித்து பேச்சு நடத்தினார்.

மியன்மாரில் ஜனநாயகம் மலர்ந்துள்ளதைத் தொடர்ந்து அந்த நாட்டுக்கு முதன் முதலாக ஐ.நா.செயலாளர் நாயகம் பயணம் செய்கின்றார். ஏற்கனவே பல ஐரோப்பியநாடுகள்மியன்மார் மீதான பொருளாதாரத் தடைகளை நீக்க ஆலோசித்துவரும்நிலையில் இவரின் பயணம் முக்கியத்துவம் வாய்ந்ததாகக் கருதப்படுகின்றது.


கோழிக்குஞ்சு விற்பனை

தடுப்பு மருந்து போடப்பட்ட 'A'தரமான பிறிமா புறொயிலர் குஞ்சுகள், பேட்டுக் குஞ்சுகள் மற்றும் சிவப்பு சேவல் குஞ்சுகள் ஒவ்வொரு வெள்ளிக்கிழமைகளிலும் பெற்றுக்கொள்ளலாம். முன்கூட்டியே பதிவு செய்யவும்.

நல்லூர் பாம் சென்ரர், # 19, முருகேசர் ஒழுங்கை, நல்லூர், யாழ்ப்பாணம். தொ.பே.0212226944

நல்லூர் பாம் சென்ரர் கனகபுரம் வீதி, கிளிநொச்சி. தொ.பே. 0776225944

சுட்டி பாம் சென்ரர், வட்டுக்கோட்டை. தொ.பே. 0778996085

ஏல விற்பனை

வடமாகாண சுகாதாரஅமைச்சின் பாவனையிலிருந்து விலக்கப்பட்ட பொருள்கள் (09.05.2012) புதன்கிழமை மு.ப. 10.00 மணியளவில் எமது அலுவலகத்தில் ஏலத்தில் விற்கப்படும். ஏலவிற்பனைப் பொருள்கள் (கணினிகள், வாகன உதிரிப்பாகங்கள், றோணியோமெசின், தளபாடங்கள்) தொடர்பான விவரப்பட்டியலை சுகாதார கிராமம், பண்ணை, யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள சுகாதார அமைச்சின் விளம்பரப்பலகையில் பார்வையிடலாம்.

இ. இரவீந்திரன், செயலாளர்,
சுகாதாரஅமைச்சு (வடமாகாணம்)

THE HALO TRUST

Vacancy

Storeman (Kilinochchi)

The HALO Trust is the world's largest humanitarian demining organisation, with 8,000 staff working in 10 countries. HALO has been operating in Sri Lanka since 2002 and employs over 1000 people.

HALO is seeking an experienced Storeman to support its demining operations in Kilinochchi District. The position will be based in Kilinochchi.

Responsibilities will include:

- Conducting regular stock checks of all stores and ensuring that store-keeping and procurement procedures are observed
- Receiving, recording, storing and issuing of supplies
- Maintaining records of all stores received and issued out
- Ensuring the timely placement of stock orders

Requirements:

- A minimum of 2 years' experience in a logistics role
- High standard of spoken English
- Proficiency in Microsoft Word, Excel, Access and Outlook

Interested candidates should submit their CV, including details of referees, to recruitment@halosrilanka.org by 10th May. Only shortlisted candidates will be contacted.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கவலைகளுக்கு விடை கொடுங்கள்

(9)

ஒன்றுமில்லாததற்கெல்லாம் குறை கூறி, சண்டை பிடிக்கிறவர்கள் இருக்கும்போது, ஒன்றுமில்லாததற்குக் கவலைப்படுபவர்களும் இருப்பார்கள்தானே.

*அழுகிற குழந்தை*
*நோய்வாய்ப்பட்ட பெற்றோர்*
*அதிகாரம் பண்ணுகிற மேலதிகாரி*
*நச்சரிக்கிற மனைவி*
*விமர்சிக்கிற அண்டை அயலார் -*

என்று நம்மைக் கவலைக்குள்ளாக்க பலரும் காத்திருக்கிறார்கள்.

நாள் முழுக்க அதிகம் கவலைப்படுவதற்கு விடயங்கள் இருக்கின்றன. ஆனால் அவற்றில் தொண்ணூறு சதவீதம் முக்கியத்துவமற்றவைகள் தாம். நேற்று எதற்கெல்லாம் கவலைப்பட்டோம் என்பதை இன்று எண்ணிப் பார்த்தால், நமது முட்டாள்தனம் தெரிய வரும். நாம் கவலைப்பட்டது சுத்த முட்டாள்தனம் என்பதும் புரியும்.

அதிகம் பேருடைய வாழ்வில் அற்ப விடயங்கள் அவர்களுடைய மகிழ்ச்சியைக் கெடுத்திருக்கின்றன.

*சாம்பாரில் உப்பு இல்லை*
*சட்டைப் பித்தான் தைக்கவில்லை*
*குறட்டையால் தூக்கம் போச்சு...*

இப்படியான காரணங்களுக்காகத்தான் பெரிய யுத்தமே நடக்கிறது பல வீடுகளில். கணநேர கோபத்தில் ஒருவரையொருவர் வெட்டிச்சாய்த்து விட்டுச் சிறைக்குச் செல்கிறார்கள். பின்பு ஆயுள் முழுக்க சிறையில் இருந்தபடி தங்கள் முட்டாள் தனத்தை எண்ணிக் கவலைப்படுகிறார்கள். தவறான ஊகங்களின் விளைவாக விவாகரத்து வரை போகிறார்கள். அலங்கோலப்பட்ட வாழ்க்கையைச் சரி செய்ய முடியாமல், கவலைகளில் தங்களைத் தீய்த்துக் கொள்கிறார்கள்.

அற்ப விடயத்துக்கெல்லாம் ஆவேசப்படுகிறவர்கள், ஆராய்ந்து பார்க்காமல் பெரிய தவறுகளைச் செய்து விடுகிறார்கள். கோபத்தை வெல்ல வேண்டும்; இல்லையேல் தீராத கவலைகளைச் சுமக்க நேரிடும்.

***கவலைகளைச் சுமப்பவருக்கு***
***வாழ்க்கையே ஒரு சுமைதான்***

விரும்பத்தகாத நிகழ்வுகளை உங்களால் மறக்க முடியும். மிகப் பெரிய தவறு செய்தவரையும் நீங்கள் மன்னிக்க முடியும். எவருடனும் உங்களால் பொருந்திக் கொள்ள முடியும். எல்லோரையும் நீங்கள் நேசிக்க முடியும். இவையெல்லாம் முடிந்தால் கவலையில்லாமல் இருக்க முடியும்.

### கவலைக்கு இடம் கொடுத்தால்...

பைபிள் சொல்கிறது நல்ல மரங்கள் நச்சுக்கனிகளைத் தருவதில்லை என்று.

உங்களுடைய எண்ணம் நல்லதாயிருந்தால் நீங்கள் பேசுவதும், செய்வதும் நன்மையளிப்பதாகவே இருக்கும்.

நல்லவற்றில் மகிழ்ச்சி உண்டு. தீய எண்ணம் உள்ளவர்களின் பேச்சும் செயலும் தீய தன்மையையே கொண்டிருக்கும். தீயது கவலையை உண்டுபண்ணும்.

***பூக்கள் மலர வெளிச்சம் தேவை***
***மனம் மலர நம்பிக்கை தேவை***
***வெளிச்சத்தை உள்ளே வரவிடாதவர்கள்***
***இருட்டில் அவதிப்பட வேண்டியதுதான்***

**கவலை உங்கள் காலுக்குத் தளை, நீங்கள் விரும்பினாலும் அது உங்களை வளர்ச்சிப் பாதையில் கால் வைக்க விடாது. நீங்கள் ஓரடி முன் வைக்க முயன்றால் அது ஈரடி பின்னிழுக்கும். காரணம் கவலையில் உங்கள் ஆர்வமும் ஆற்றலும் உறிஞ்சப்பட்டுவிடுகிறது. கவலை உங்கள் மனதுக்குத் தடை. அது உங்களுக்குள் இனந்தெரியாத அச்சத்தைத் தோற்றுவித்து துணிவைத் துண்டித்து விடுகிறது.**

**வியாபாரியும், ஒட்டகமும்**

**கவலைக்கு இடம்கொடுப்பது பகைவனுக்கு இடம் கொடுத்த மாதிரி. அழிவுக்கு வேறு வினையே வேண்டியதில்லை. இயல்பிலேயே இரக்கம் கொண்ட வியாபாரி ஒருவன், ஒரு சமயம் தனது சரக்குகளுடன் பாலைவனத்தின் வழியே பயணம் செய்தான். வழியில் இளைப்பாறுவதற்காகக் கூடாரம் அமைத்துத் தங்கினான்.**

கூடாரத்துக்கு வெளியே நின்றிருந்த அவனுடைய ஒட்டகம், "எசமானே, வெயிலின் கொடுமையை என்னால் தாங்க முடியவில்லை. கருணை கூர்ந்து என்னையும் கொஞ்சம் நிழலில் இருக்க விடுங்கள்" என்று வேண்டிக் கேட்டது. வியாபாரி ஒரு நிமிடம் யோசித்தான். "சரி உன்னுடைய கழுத்துப் பகுதி வரை உள்ளே நுழைத்துக் கொள்" என்றான்.

ஒட்டகமும், மிகவும் அடக்கமாகத் தன்னுடைய தலையைக் கூடாரத்தின் உள்ளே நுழைத்தது. வியாபாரி கண்ணயர்ந்தான். ஒட்டகம் மெல்ல, தன் சரிபாதி உடம்பை உள்ளே நுழைத்துக் கொண்டது.

பாவம் கடுமையான வெயில் என்று தனக்குள் சொல்லிக் கொண்ட வியாபாரி தன்னுடைய சௌகரியத்தைக் கருதாமல் ஒட்டகத்துக்கு இடமளித்தான். கொஞ்ச நேரத்துக்கெல்லாம் ஒட்டகம் அவனது முகத்தை உரஞ்சியது. அவன் கண்விழித்தான். " ஏ ஒட்டகமே நீ நடந்து கொள்ளும் முறை சரியில்லை' என்றான்.

" எது சரி, எது தவறு என்று நீர் எனக்குக் கற்பிக்க வேண்டியதில்லை. என்னுடைய செயல் உமக்குப் பிடிக்காவிட்டால் நீர் வெளியே சென்று விடலாம். நானாவது கொஞ்சம் சௌகரியமாக இருந்து கொள்வேன்.' என்றது ஒட்டகம்.

ஒட்டகத்தின் அத்துமீறலால் கூடாரம் பிய்ந்து போயிற்று. வியாபாரியின் சரக்குகளிலும் சிறிது நாசமாயிற்று.

கவலைகளை நீங்கள் உள்ளே அனுமதித்தால் அந்த வியாபாரிக்கு நேர்ந்த கதிதான் உங்களுக்கும்.

**சி.எஸ்.தேவநாதன்** *(தொடரும்)*

# குமாரசாமிக் குருக்களின் பணி ஆய்வு செய்யப்பட வேண்டும்

## முன்னாள் கலைத்துறை பீடாதிபதி தெரிவிப்பு

அச்சுவேலி, மே 3

வேத, ஆகம புலமையும் தமிழ்-சமஸ்கிருத மொழியறிவும் வாய்க்கப் பெற்ற அச்சுவேலி சிவஸ்ரீ ச.குமாரசுவாமி குருக்களின் பணிகள் பல்கலைக்கழக மட்டத்தில் ஆய்வு செய்யப்பட வேண்டும்.

அவரது நினைவுப் பேருரையை யாழ். பல்கலைக்கழகத்தில் ஆண்டுதோறும் நிகழ்த்துவதற்கு ஏற்பாடு செய்யப்பட வேண்டும் என யாழ். பல்கலைக்கழக முன்னாள் கலைத் துறைப் பீடாதிபதியும், தமிழ்த் துறை பேராசிரியருமான எஸ்.சிவலிங்கராசா தெரிவித்தார்.

சிவஸ்ரீ ச.குமாரசுவாமி குருக்களின் 125 ஆவது பிறந்தநாள் நிகழ்வும் அவரால் எழுதி வெளியிடப்பட்ட நான்கு நூல்களின் மீள்பதிப்பு வெளியீட்டு விழாவும் வாழ்நாள் பேராசிரியர் ப.கோபாலகிருஷ்ண ஐயர் தலைமையில் அச்சுவேலி சரஸ்வதி வித்தியாசாலையில் அண்மையில் நடைபெற்றது. இந்த நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே பேராசிரியர் சிவலிங்கராசா இவ்வாறு தெரிவித்தார்.

அவர் அங்கு தெரிவித்ததாவது:-

சமஸ்கிருத மொழியிலும், தமிழ் மொழியிலும் சிறந்த புலமையும் வேதம் ஆகமத்தில் தேர்ச்சியும் பெற்ற குமாரசுவாமிக் குருக்களின் பணிகள் சர்வதேச ரீதியில் நின்று நிலைக்கத்தக்கன. அவரது பணிகள் தமிழ் மொழி வளர்ச்சிக்கும் சைவசமய வளர்ச்சிக்கும் உறுதுணையாக உள்ளன. அவரின் பணிகள் எதிர்காலச் சந்ததிக்கு உரிய முறையில் எடுத்துச் சொல்லப் படவேண்டும்.

20 இற்கு மேற்பட்ட நூல்களை எழுதி வெளியிட்டதோடு 6 நூல்களை சமஸ்கிருத மொழியில் எழுதி வெளியிட்டுள்ளார். அவர் எழுதி வெளியிட்டுள்ள நூல்கள் சர்வதேச ரீதியில் பயன்பாட்டில் உள்ளன.

இந்து சமயம் தொடர்பான அடிப்படை உண்மையை தர்க்க ரீதியில் வெளிப்படுத்தி ஆலயக் கிரியைகள் ஆலய அமைப்பு ரீதியிலான அடிப்படை உண்மைகளை புலப்படுத்தி இந்து மதத்தின் அடிப்படையை தெளிவுபடுத்துவனவாக அமைந்துள்ளன.

குமாரசுவாமி குருக்கள் புலமை மற்றும் பணிகள் பல்கலைக்கழக மட்டத்தில் ஆய்வு செய்யப்பட வேண்டும். இந்த விடயத்தில் யாழ். பல்கலைக்கழக இந்து நாகரிகத் துறை கவனம் செலுத்த வேண்டும். ஆண்டுதோறும் குருக்களின் நினைவுப் பேருரை பல்கலைக்கழகத்தில் நடைபெறுவதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட வேண்டும்.

இலங்கையில் றோமன் கத்தோலிக்கம், கிறிஸ்தவ சமயம் பரப்பப்பட்ட காலப்பகுதியில் கிடைத்த சலுகைகள், வசதி வாய்ப்புக்களை கருத்தில் கொண்டு பலர் சமயம் மாறியதுண்டு.

ஆனால் எந்தப் பிராமணரும் சமயம் மாறவில்லை. தூய இந்துக்களாக வாழ்ந்தார்கள். பல்வேறு நெருக்கடிகளைச் சந்தித்தார்கள். அந்த வகையிலும் அவர்களின் இறப்பு மதிப்பீடு செய்யப்பட வேண்டும்- என்றார்.

குருக்களின் திருவுருவப்படம் மற்றும் நூல்கள் உலவிக்குளம் பிள்ளையார் ஆலயத்தில் இருந்து ஊர்வலமாக எடுத்து வரப்பட்டு விழா மண்டபத்தில் வைக்கப்பட்டு நிகழ்வுகள் நடைபெற்றன.

மீள்பதிப்பு நூல்களை மூத்த பிரஜை த.இராசவடிவேல், நொதேண் சென்றல் மருத்துவமனையின் ஸ்தாபகர் எஸ்.பி.சாமியிடம் வழங்கினார்.

யாழ்.பல்கலைக்கழக இந்து நாகரிகத்துறை தலைவர் எம்.வேதநாதன், கொழும்பு மாநகர சபை உறுப்பினர் எஸ்.பாஸ்கரா மற்றும் பல்கலைக்கழக விரிவுரையாளர்கள், அந்தணர்கள் சிறப்புரையாற்றினர். (எ-11)

# பக்திப் பாடல்களை ஒலிக்கச் செய்வதால் பிள்ளைகளிடம் சமயப்பற்றை வளர்க்க முடியும்

## யாழ். அரச அதிபர் தெரிவிப்பு

**இன்று பிள்ளைகளிடத்தில் ஒழுக்க விழுமியப் பண்புகள் சீர் குலைந்துள்ளன. பெரியவர்களை மதிக்கின்ற தன்மைகள் குறைந்து வருகின்றன. அதற்கு அவர்கள் பார்க்கின்ற சினிமாப் படங்களும் கேட்கின்ற சினிமாக் குத்துப் பாடல்களும் பிரதான பங்கை வகிக்கின்றன.**

சுன்னாகம், மே 3

பக்திப் பாடல்களைக் காலை வேளையில் வீடுகளில் ஒலிக்கச் செய்வதன் மூலம் பிள்ளைகளிடத்தில் சமயப் பற்றையும், ஒழுக்க விழுமியங்களைப் பேணும் மனப்பாங்கையும் வளர்க்க முடியும். அத்துடன் வீட்டிலும் புனிதமான சூழ்நிலை நிலவும் என யாழ்.அரச அதிபர் திருமதி இமெல்டா சுகுமார் தெரிவித்தார்.

மாவை வேலாயுதன் இசை இறுவட்டு வெளியீட்டு விழா அண்மையில் மாவிட்டபுரம் கந்தசாமி ஆலய முன்றலில் மதவாச்சி முஸ்லிம் மகா வித்தியாலய ஆசிரியர் இ.கஜேந்திரன் தலைமையில் நடைபெற்றது. இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றும்போதே அரச அதிபர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

இன்று பிள்ளைகளிடத்தில் ஒழுக்க விழுமியப் பண்புகள் சீர் குலைந்துள்ளன. பெரியவர்களை மதிக்கின்ற தன்மைகள் குறைந்து வருகின்றன. அதற்கு அவர்கள் பார்க்கின்ற சினிமாப் படங்களும் கேட்கின்ற சினிமாக் குத்துப் பாடல்களும் பிரதான பங்கை வகிக்கின்றன. குடும்பத் தலைவியராக விளங்கும் பெண்கள் தமது பிள்ளைகளுக்குப் பக்திப் பாடல்களைக் கேட்க வைக்க வேண்டும்.

ஆலயங்களுக்குப் பிள்ளைகள் செல்வது குறைந்து விட்டது. அது ஊக்குவிக்கப்பட வேண்டும். நாங்கள் தான் எமது கலாசார விழுமியங்களைப் பாதுகாக்க வேண்டும். மற்றவர்கள் செய்வார்கள் என நினைக்காமல் ஒவ்வொருவரும் முன்வந்து எமது பண்பாட்டைப் பேணிப் பாதுகாக்க வேண்டும். கலைகளை அழியாது பாதுகாக்க வேண்டும். அதற்கு உந்து சக்தியாக இத்தகைய வெளியீடுகள் அமையும் - என்றார்.

இந்த நிகழ்வில் வலி.வடக்கு பிரதேச சபைத் தலைவர் சோ.சுகிர்தன், வலி.வடக்கு பிரதேச செயலக உதவித் திட்டப் பணிப்பாளர் எஸ்.சிவகுமார், வலி.வடக்குப் பிரதேச செயலர் திருமதி. தக்சாயினி செல்வகுமார் ஆகியோரும் உரையாற்றினர். இசை இறுவட்டு வெளியீட்டுரையை முன்னாள் பேராசிரியர் கலாநிதி சி.சிவலிங்கராஜா நிகழ்த்தினார். (எ-38)



அரச ஓய்வூதியர் நம்பிக்கை நிதியப் பருத்தித்துறைப் பிரதேச சங்கத்தின் ஆண்டுவிழாவில் சங்கத் தலைவர் இளைப்பாறிய நீதிபதி பா.சுப்பிரமணியம், இளைப்பாறிய நூலகர் எ.என்.திருச்செல்வம் ஆகியோர் மங்கள விளக்கேற்றுகின்றனர். உதவி பிரதேச செயலர் திருமதி உஷா சுபாஸ்கர் உரையாற்றுகிறார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன் தொடர்புகளுக்கு

**தலைமையகம்:**
361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி:021-222 9933, 222 9944, 5679933, 5679944
விளம்பரம்:021-5671111
விநியோகம்: 021-5677222
**தொலைநகல்**
செய்தி: 021-5678844,
விளம்பரம்: 021-2229731
**மின் அஞ்சல்**
செய்தி : news@uthayan.com
கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

**வன்னிப் பணிமனை:**
ஏ-9 வீதி, கரடிப்போக்கு, கிளிநொச்சி (புனித திரேசா வீதி, முன்பாக)
தொலைபேசி: 021 228 0065
தொலைநகல்: 021 228 0066
**நெல்லியடிக் கிளை:**
பிரதான வீதி, நெல்லியடி (HNB அருகே)
தொலைபேசி : 021-2262789, 021 226 2395
**சாவகச்சேரிக் கிளை:**
நவீன சந்தை மேல்மாடி, சாவகச்சேரி
தொலைபேசி: 021 227 0323

விளம்பர முகவர்கள்: 'சதா பொன்ஸ்' –மானு சந்தி, அல்வாய் : 021226 3206, 'நெல்லியடி மொடேன் ஸ்ரோர்ஸ்' – பஸ் நிலையம், நெல்லியடி : 021 490 1519, 'மீசாலை கஜானன்' – கண்டி வீதி, மீசாலை தெற்கு : 021 227 0399, 'மன்னார் சிவசாந்தி' – தாழ்வுபாடு வீதி, மன்னார் : 0752824478, 'கொடிகாமம் அருள்நாயகி' – பஸ் நிலையம், கொடிகாமம் : 0774937585, 'மல்லாவி புவனேஸ்வரி புத்தகசாலை' – மத்திய சந்தையடி, மல்லாவி : 0778175116, 'கோபி எலைக்சிற்றி' – முள்ளைத்தீவு நகர் : 0779598917, 'அன்பரசன்' – சிவன் கோயிலடி, ஒட்டுசுட்டான் : 0775035571, 'சுஹா ரவல்ஸ்' – 98, பிரதான வீதி, மன்னார் : 023 222 3311

## கருத்துச் சுதந்திரத்தை முதலில் மீட்போம்

இன்று ஊடக சுதந்திர தினம். 1991ஆம் ஆண்டு ஐக்கிய நாடுகளின் கல்வி, அறிவியல் மற்றும் பண்பாட்டு நிறுவனம் [யுனெஸ்கோ] முன்மொழிந்த யோசனையை 1993ஆம் ஆண்டு ஐ.நா. பொதுச் சபை ஏற்றுக்கொண்டதன் அடிப்படையில் ஒவ்வொரு ஆண்டும் மே மாதம் 3ஆம் திகதியை ஐ.நா. ஊடக சுதந்திர தினமாகப் பிரகடனப்படுத்தியது.

மனித உரிமைகள் தொடர்பான ஐ.நாவின் 19ஆவது பிரகடனத்தில் வலியுறுத்தப்பட்டுள்ள கருத்து வெளிப்பாட்டுச் சுதந்திரத்தின் கீழ் ஊடகங்களின் சுதந்திரமும் அடிப்படைச் சுதந்திரங்களில் ஒன்று என்ற விழிப்புணர்வை ஏற்படுத்தும் நோக்கத்துடனேயே மே 3ஆம் நாள் ஊடக சுதந்திர தினமாக அறிவிக்கப்பட்டது.

''கருத்துச் சுதந்திரம் எமது விலைமதிக்க முடியாத உரிமை. ஏனைய எல்லா உரிமைகளுக்கும் அதுவே அடிநாதமாக இருப்பதுடன் மனிதனின் மதிப்புக்கான அடித்தளத்தையும் அதுவே கொடுக்கிறது. அந்தச் சுதந்திரத்தைப் பாதுகாக்கவும் பேணவும் கட்டுப்பாடுகளற்ற, பன்மைத்துவம் வாய்ந்த, சுதந்திரமான ஊடகங்கள் அவசியம்'' என்று ஐ.நா. பொதுச் செயலாளரும் யுனெஸ்கோ பணிப்பாளரும் கூட்டாக விடுத்துள்ள செய்தியில் தெரிவித்திருக்கிறார்கள்.

வலுவான, தாக்கமுள்ள ஒரு சமூகத்துக்கு சுதந்திரம் மிக அவசியமானது என்றும் அவர்கள் வலியுறுத்தி உள்ளனர்.

கடந்த வருடத்தில் மட்டும் உலகெங்கும் 62 ஊடகவியலாளர்கள் தமது பணி நிமித்தம் கொல்லப்பட்டனர். இணையத் தளங்களில் ஊடகங்கள் பரவ ஆரம்பித்த பின்னர், இணைய ஊடகவியலாளர்கள் பலரும் வலையுலாவிகள் பலரும்கூடத் தமது பணிகளுக்காகத் தாக்கப்படுவது அதிகரித்துள்ளது என்று கூறும் ஐ.நா, பாரம்பரிய ஊடகவியலாளர்கள் போன்றே இவர்களும் பாதுகாக்கப்பட வேண்டும் என்றும் வலியுறுத்தி உள்ளது.

ஊடக சுதந்திரத்துக்கான சண்டையை முன்னோக்கி நகர்த்துவதற்கான வாய்ப்பாக இந்த நாளைப் பயன்படுத்தி, ஐ.நாவுடன் அனைவரையும் ஒன்றிணையுமாறு வலியுறுத்தும் ஐ.நா. பொதுச் செயலாளரும் யுனெஸ்கோ பணிப்பாளரும், சர்வதேச மட்டத்தில் ஏற்றுக்கொள்ளப்பட்ட நெறிமுறைகளின் அடிப்படையில் அந்தப் பணியை ஆற்றுமாறு ஊடகவியலாளர்களுக்கு அழைப்பு விடுக்கவும் மறக்கவில்லை.

எல்லைகளற்ற ஊடகவியலாளர்கள் அமைப்பின் கணிப்புப்படி ஊடக சுதந்திரத்தை மதிக்கும் நாடுகளின் பட்டியலில் இலங்கைக்கு கடந்த ஆண்டு 163ஆவது இடமே வழங்கப்பட்டது. 179 நாடுகளைக் கொண்டது அந்தப் பட்டியல்.

இலங்கையில் கருத்துச் சுதந்திரத்தின் நிலையையும் கருத்துக்களைச் சகிக்க முடியாத ஆட்சியாளர்களை நாம் கொண்டிருக்கும் அவலத்தையும் இது குறிக்கிறது. அதிலும் குறிப்பாக சிறுபான்மை மக்களின் உரிமைகளை ஒடுக்க நினைக்கும் மஹிந்த ராஜபக்ஷ தலைமையிலான ஆட்சி, ஊடகங்களை ஒடுக்குவதன் மூலமே அதனைச் சாதிக்க முடியும் என்று கருதுகிறது.

அரசின் இந்தப் போக்கால் கடந்த பல வருடங்களாகவே இலங்கையில் ஊடக சுதந்திரம் பெரும் நெருக்கடிக்குள் தள்ளப்பட்டுள்ளது. அதிலும் தமிழ் ஊடகங்களில் நிலையே மிகவும் பரிதாபகரமானது. அந்த நிலைமையை மாற்றியமைக்க பாடுபடுவோம் என இன்றைய தினத்தில் அனைவரும் இணைந்து உறுதி எடுத்துக்கொள்ள வேண்டும். ஏனெனில் சிறுபான்மை மக்களின் உரிமையை மீட்டெடுக்க வேண்டுமாயின் எமது கருத்துச் சுதந்திரத்தை நாம் முதலில் மீட்டாக வேண்டும்.

# தொடாதே! நீயும் தெய்வமாகலாம்....

■ செந்தூரி

உடலின் உதிர்பொருள்களில் ஒன்றான 'நகத்தை' ஆரோக்கிய குறிகாட்டியாகக் கருதுகின்றது மருத்துவ ஆராய்ச்சி உலகம்.

மேலதிகத்தை அகற்றுவதால் பல வகையான சுகாதாரச் சிக்கல்களுக்குத் தீர்வைத் தருகின்ற இந்த விரல்களின் கிரீடங்கள், சுற்றோட்டத்திற்கு உட்படாத செலுலோயிட் சேர்வைகள்.

உடலின் ஏனைய அக உதிரிப்பாகங்களில் ஏற்படுகின்ற இயங்கு நிலை நெருக்குவாரங்களை, புற உடலில் வெளிக்காட்டுகின்ற தானியங்கி ஸ்கான் திரைகளாக நகங்கள் கணிக்கப்படுகின்றன. திடீரென நகங்கள் மேல் இத்துணை கரிசனை காட்டிப் பேசுவதற்கான, பெருங்காரணம் அண்மை நாள்களில் கம்பீரமாக அதிகரித்துள்ள போதையூட்டும் பொருள்களாலான குற்றச்செயல்களை இந்த வாரத்துக்கான பேசுபொருளாகக் கொள்வதே!

நிறவடிவ மாற்றங்கள் மூலம் ஆழ் உடலின் பிரச்சினைகளைக் குறிகாட்டும் நகங்களைப் போலவே, கொடூர உடன் மனமாற்றங்களின் மூலம் ஆழ் சமூகப் பிறழ்வுகளைக் குறிகாட்டும் மது நாடிய வன்செயல்களின் வகை தொகையின்றிய பெருக்கம், வேகமாக கட்டுப்படுத்தும் தேவை நாடிய பண்பாடு கொல்லி, சேர்ந்தாரைக் கொல்லும் சினம் அறுதுயர் ஆற்றும் அழுக்காறு, அற்பங்களால் சொப்பனங்கொண்டாடும் அவா, துறந்தோடும் துய்க்க மறுக்கும் காமம் என்பனவும் சமூகத்தின் நோய்களைக் காட்டி நிற்கும் குறிகாட்டிகளாகின்றன.

இத்தகைய எண்ணற்ற தீய விளைவுகளை, மனத் தாழ்வுகளின் மிகை எழுச்சிகளை, கட்டுப்படுத்தும் கருவிகளாக திருக்குறளையோ, மூதுரையையோ, திருமந்திரத்தையோ, புதிய வேதாகமத்தையோ எடுத்தாளும் நிலையை எம் சமூகம் கரை கடந்து பல தசாப்தங்கள் கடந்தாயிற்று!

ஐந்தாம் வகுப்புக் குழந்தைகளின் கட்டுரைகளின் ஆரம்ப வசனம் ஆகிய 'இன்றைய தொலைத்தொடர்பு யுகத்திலே', மேற்கூறிய நல்நூல்களை மலிவுப் பதிப்பில், அந்தியேட்டி நினைவு அன்பளிப்புகளாக மட்டுமே பரிமாறிக் கொள்ளும் இழிவினை எண்ணி இந்த வசனத்தை வாசித்து முடிக்கும் போது, உங்களாலும் குமுறிக் கொந்தளிக்க முடிந்தால், நீங்களும் தமிழ்ப் பண்பாடு விரும்பியே!

கடந்துபோன வாரத்தின் ''கணொலிகளும் இணைக்கப்பட்டுள்ளன'' எனும் வகைக்குரிய கவர் ஸ்டோரிகள் சிலவற்றின் தாக்கம், நாம் கடக்கப்போகின்ற பாதையின் கரடு முரட்டைப் பயத்துடன் எதிர்வு கூறுகின்றன. புதுவருட தினத்தன்று கம்பி வேலியில் தொங்கி, ஆவி அடங்கிய ஈருருளி இளைஞர்கள், மது போதையில் தினமும் இரவுகளில் தாயுடன், அசிங்க ஆண்மையால் மோதும் தந்தையின் கொடுமை தாங்காது தீக்குளித்த மாணவி, மணிரத்னம் படத்தின் முதல் காட்சி விரிவின் சாயலில் மதியத்து மழைப் பொழுதில் வீதியில் அடித்துக்கொல்லப்பட்ட சைக்கிள் பயணி, மரண முயற்சி என்கின்ற பொதுப் பண்பின் இந்த மூன்று நிகழ்வுகளை மட்டுமல்லாது, சமவாரத்தில் நிகழ்ந்த சகலகுற்றச்செயல்களும் கட்டம் கட்டப்பட்ட, கறுப்புப்பெட்டி செய்திகளாகவோ, ''யாழ்ப்பாணத்தில்இருந்து கிடைத்த பிந்திய'' வானொலி துணுக்காகவோ, ''காணொலிகள் விரைவில் வகைக்குரிய இணையத்து பரபரப்பாகவோ'', மட்டும் அடங்கிப் போவதில் அடுத்த நாள் பதிப்பில், நிகழ்ச்சிகளின், தரவேற்றங்களில் கவனம் செலுத்தச் சென்றுவிடும் எம் சமூகத்துக்கு இருக்க வேண்டிய ''பொறுப்பு'' நிச்சயம் பெரிதில்லையா?

காபெட் வீதிகளின் அறிமுகம்'', ''அதிகரித்துள்ள மோட்டார் வாகன பாவனை'', ''மது, மாமிச கேளிக்கைகளாக மாறியுள்ள பண்டிகைகள்'' போன்ற 'உதயதாரகை' பத்திரிகை காலத்து தலைப்புகளால் பெருமூச் செறிகின்ற பெரியவர்கள், சமூக ஆர்வலர்கள், ஊடகர்கள் யாவருமே, தன் மகன் மதுபானம் அருந்தத் தொடங்கிய முதல் நாளை, கண்டுபிடிக்கத் தவறிய தந்தையர்களை விரல் நீட்டிக் குற்றம் சொல்லும் நுண்ணிய தனி மனித திருத்தங்களை கையில் எடுக்கத் தவறுவது ஏன்?.

> "மதுவருந்தும் இளைஞர்களுக்கான ''இன்ஸ்ப்ரேசன்'' ஆக நிச்சயம் அவர்களின் மூத்தவர்களோ, முன்னவர்களோ, உறவினர்களோ, ஏன் தந்தையோ தான் இருந்திருக்க முடியும்.

யாழ். இந்துக் கல்லூரியில் அணு விஞ்ஞானி, அப்துல் கலாம் சொல்லச் சொல்ல, பாடசாலை மாணவி ஒருத்தியால் அட்சரம் பிசகாமல் திருப்பிச் சொல்லிய அந்த ஆங்கில வாக்கியத் தொடர் வேகமாக மறந்து போனது! ''தனி மனித உள்ளத்தின் மனவிழிப்பானது, குடும்பம், சமூகம் , நாடு என விரிந்து உலக அமைதிக்குக் காரணமாகின்றது.'' என ஐரோப்பிய நாடாளுமன்றில் சொன்ன அதே வார்த்தைகள், குமாரசுவாமி மண்டபத்தின் தூண்களோடு மட்டும் நின்று போயின. ''மது உற்பத்தியை'', ''மது விற்பனையை'' இன்றைக்கும் யாழ்ப்பாணத்தின் அடித் தட்டுக் குடும்பங்களின் வாழ்வாதாரங்களாவும், ''கூட்டுறவுச் சங்கங்களின் ஊடான வருமான வழியாகவும் வைத்திருக்கும் மாகாணப் பொருளாதாரக் கொள்கையை கொண்டிருக்கும் நமக்கான நாம், யாழ்ப்பாணத்தின் மது விற்பனையில் அதிகரித்துள்ள புள்ளி விவரங்களை, விஜயகாந்தின் விரல் கணக்காகத் தூக்கி ஆட்டுவது அழகிய முரண் இல்லையா?

அற்கஹோலின் அளவினால் தீர்மானிக்கப்படும் 'மூழி' யில் தொடங்கும் பாதிப்புகள், ஈரலை காய்ச்சி வரட்டும் வரை 'விஸ்கி', 'பிராண்டி' ஒயின் 'பெக்'அளவிலும், பனை, தென்னையின் பூவடி நீராயின் 'பிளா' அளவிலும் கெடுதலின் விகிதம் சமமானது தானே!

இன்றைய தவறணைகளுக்குள், மாபிள் பதித்து, கண்ணாடி மேசைகள் வைத்து, கிளாஸில் பரிமாறும் அளவுக்கு வளர்ந்திருக்கின்றோமாயின், கூட்டுறவு அமைப்புகளின் லாப விகிதம் அதிகரித்துள்ளதை எண்ணி புளகாங்கிதப்பட்டுக்கொள்வதா? பகலில் உழைத்தது முழுவதையும் அந்தியில் '' உள்ளிறக்கி'' சூடு தணிக்கும் "மனித மாடு" களின் அறியாமையை நோக்கிப் பொருமிக்கொள்வதா?

வருமான வழிகள் என்கின்ற பசுத் தோலில் எம்முள் அனுமதிக்கப்பட்டுள்ள இந்தவகை உயிர் கொல்லும் வியாபாரங்களைக் கேள்வி கேட்க முடியாமல், 'திணைக்கள அமைப்புடன் பேணி வருகின்ற அதே சமூகம், ' மூடி' யிட்ட போத்தல்களுக்குப் போர்க்கொடி தூக்குவதது 'சமூக போலித்தனத்தின்' கொடூர முகங்களில் ஒன்றே தவிர வேறில்லை.

வலி.மேற்கின், வடமராட்சியின் பெரும்பாலான பாகங்களில் பணப்பயிரான 'புகையிலை'யை இன்னமும் ஊக்குவிக்கும் நாம், ''ஜோன் பிளேயரின்'' (கோல்ட் லீவ்) தங்க இலைகளை பாடசாலைகளின் மறைவிடங்களில் வைத்து இருமலுடன் அனுபவிக்கத் தொடங்கும் 9ஆம் வகுப்பு 'பொடியனை' ஏன் குறைகாண வேண்டும்?.

அந்த வெள்ளை உருளைக்குள் நிரப்பப்பட்டிருப்பது, தேவலோகத்தில் இருந்து விழுந்த கற்பக தருவின் இலைத் துகள்களா என்ன? இங்கு விளைந்து, மூத்த பிரஜையின் மூன்றெழுத்துக்களுடன் விற்கப்படுமாயின் "பணம்", பிரித்தானியாவில் விளைந்து, கப்பலில் வந்தால் ''விஷமா'' ?

கொஞ்சம் குழந்தைத் தனம் மிகுந்திருக்கும் இத்தகைய முகிழ் வினாக்களுக்கு, சிறுபிள்ளை வேளாண்மைப் பழங்கதை பேசி, மூச்சுக் காட்ட விடாமல் செய்பவர்கள், சமூக வாரியாக இன்னமும் சுருட்டு சுற்றுபவர்களாகவும், பீடி உருட்டுபவர்களாகவும், கள்ளிறக்குபவர்களாகவும், வடிசாராய தொழிலாளர்களாகவும் தொடர்ந்து வருபவர்களின், வாழ்வாதாரத்தை மேற்படி வீரிய வினாக்களுக்கான தற்காலிக கவசங்களாக மார்பில் ஏந்தி அந்த ஆடுகள், பாவம் என அழுவது தொடர்கின்றது.

கேளிக்கை இளைஞர்களுக்கு பாடம் புகட்டுவதாகப் போலித்தனமான குருட்டு வாதத்தை முன்வைத்து, வீதி விபத்துக்களில் காயம் பட்டவர்களை முதலுதவிக்குள்ளாக்காமல், மறிக்க மறிக்க நிற்காமல்போன வாகனங்களை வீடியோவாக எடுத்து, ''அந்நியன் யாழ்ப்பாணத்தில் இருந்தால்'' என்று கற்பனைக் கட்டுரை புனைபவனை, "அட சீ! நீயெல்லாம்....'' என காறித்துப்ப முடியவில்லையே எம்மால்? என்ன செய்ய! அம்மையே, நோகும் அவசர உலகம், எய்தவர்களை எதிர்த்துக் கேட்கும் நெஞ்சுரத்தை, எப்போதோ விற்று விட்டதே!

மதுபான ஏக முகவர்களாகவும், வெளிநாட்டு சரக்குகளின் ஏக விநியோகத்தர்களாகவும், சர்வதேச புகைப்பொருள்களின் முகவர்களாகவும் எமது பரிபூரண ஆசியுடன் எம்முன்னே உலாவுபவர்களின் பணம் சமூக அந்தஸ்து அரசியல் வலிமை வியாபார அடையாளம் இவை எல்லாம், சமானியர்களின் சாவோடு மலைக்கு, மடுவையல்லவா ஒக்கும்!

கும்பாபிஷேக மலரிலும், மதுக்கடை விளம்பரத்தை கலர் பிரிண்ட் போடும் தர்மகர்த்தாக்கள், '' தேவருலகிலும் கூட, ' சோமபானம்' என்ற பெயரில் சாராயம் இருந்ததுதானே தம்பி!'' என்றதுவாக, சமாளிப்புச் சிரிப்பைப் பட்டுச்சால்வைக்குள் புதைத்து கதா கலாட்சேபம் தெளிப்பது நெளிய வைக்கிறது.

மதுவருந்தும் இளைஞர்களுக்கான இன்ஸ்ப்ரேசன் ஆக நிச்சயம் அவர்களின் மூத்தவர்களோ, முன்னவர்களோ, உறவினர்களோ, ஏன் தந்தையோதான் இருந்திருக்க முடியும். இலகுவில் உபதேசங்களுக்கு மடிந்து விடாத இன்றைய இளையோர்கள் மீது முதற்கல்லை வீசும் தகுதியான 'சுவிசேஷகன்' அடிமட்ட மது உற்பத்தி அமைப்புகளிடம் நீதி கேட்டுப் போராடும் போராளிகளாக ஏன் இருக்கக் கூடாது?

சமூக யதுதிக்குள் அவிப் பொருள்களாக ஆகுதியாக்கப்படுகின்ற உழைக்கும் வர்க்கத்தை, சுரண்டுவதன் மூலம் தமக்கான பொருளாதார நலன்களை பேண் நிலை மட்டத்தில் தக்க வைத்துக்கொள்ளும் யாவரும், நடந்த, நடக்கப் போகின்ற, எல்லா மதுவின் விளைவான சாவுகளின் கொலைக் குற்றவாளிகளே!

கள் மதுவல்ல, உணவே! என்று கபட வசனம் பேசும் சாமானிய சமாசத்துத் தலைவனோ, கப்பல்களில் உட்கார்ந்து பல்தேசிய வணிகங்களை டொலர்களில் முடிக்கின்ற கறுப்புக் கோட்டுக் காரணனோ, நெற்றிக் கண்ணைத் திறப்பினும் குற்றம் குற்றமே!!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஊடக சுதந்திரம்

காமது- சதர்சன்




ஜனநாயகத்தின் பலமான சக்தியாக, கருத்துச் சுதந்திரம் இருப்பதாகச் சொல்லப்படுகின்றது. ஆனால் கருத்துச் சுதந்திரம் ஆட்சியிலிருப்பவர்களை கண்டபடி கேள்விகள் கேட்பதால் அதனை அவர்கள் ஒருபோதும் அனுமதிப்பதில்லை. தமது கழுகுக் கண்களை சுதந்திர கருத்துச் சொல்லிகள் மீது ஆழப்பதித்து வைத்திருக்கின்றனர். கட்டுமீறிக் கதைப்பவர்களையும், எழுதுபவர்களையும் கடத்திக் காணாமலாக்கிவிடுகின்றனர். இந்தப் பணியைச் செய்வதற்காகப் படைபிரிவையொத்த அமைப்பையே ஜனநாயக போர்வைக்குள் இருக்கும் அரசுகள் இயக்கி வருகின்றமைதான் இந்த நூற்றாண்டின் மிகமோசமான அவலமாகக் கணிக்கப்படுகின்றது. ஜனநாயக முலாமுக்குள் இருந்தபடி அந்தப் பணியைத் திறம்பட ஆற்றிவரும் நாடுகளாக சவூதி அரேபியா, உகண்டா, பாகிஸ்தான், வெனிசூலா, சிரியா, யேமன், இலங்கை போன்றவற்றை மேலோட்டமான உதாரணங்களுக்காகக் குறிப்பிடலாம்.

வடக்குத் தெற்கென அரசியல் ரீதியாக நான்கு தசாப்தங்களுக்கு முன்னரே பிரிந்துவிட்ட இலங்கையில், 1970 ஆம் ஆண்டு தொடக்கம் இந்த அமைப்பு செயற்படுத்தப்பட்டு வந்திருக்கின்றது. மாறி மாறி அரசு கட்டிலில் ஏறும் கட்சிகள் தமக்கு எதிராகக் குரலெழுப்பும் ஊடகவியலாளர்களை சரியாகக் கவனித்தே வந்திருக்கின்றன. அதற்கென்று தனி வரலாறே உண்டு.

உண்மையில் வடக்கின் ஊடகப் பணியாளர்கள் இதனால் மோசமாகப் பாதிப்படைந்து வருகின்றனர். இப்போதும் இங்கு ஊடகப்பணி செய்வதென்பது உயிரைக் கையில் பிடித்துக் கொண்டு பணிபுரிவதற்குச் சமமானதாகும். ஒவ்வொரு எழுத்தையும் எழுதும் போதும் அவர்கள் மரண வலியை அனுபவிக்கின்றனர்.

இராணுவப் புலனாய்வாளர்களின் தீவிர கண்காணிப்புக்குள் இருந்தபடியே பணியாற்ற வேண்டிய கட்டாயத்துக்குள் தள்ளப்பட்டிருக்கின்றனர். இதனால் சிக்கலான உளவியல் பாதிப்புக்களை வடக்கின் ஊடகவியலாளர்கள் அனுபவிக்கின்றனர். பலர் ஊடகத்துறையிலிருந்து விலகியிருக்கும் மனநிலையோடு புலம் பெயர்ந்து செல்லவும் தலைப்படுகின்றனர். இவ்வளவு அடக்கு முறைகளுக்கு மத்தியிலும் இந்தமுறையும் ஊடக சுதந்திர தினத்தை அவர்கள் அனுஷ்டிக்கின்றனர் என்பதே நம்பிக்கை தரும் சக்தி.

## வடக்கின் ஊடக அடக்குமுறை வரலாறு

தென்னிலங்கையில் ஊடகவியலாளர்களுக்கு எதிராக ஆடிய வெறியாட்டத்தை விட மோசமான கொலைவெறியாட்டத்தை தமிழர் வாழும் நிலப்பரப்பிலும் அதிகாரம் நிகழ்த்தியது. இங்கு இருந்து பணியாற்றிய ஊடகவியலாளர்கள் அரசிடமிருந்தும் இப்பிராந்தியத்தில் ஆதிக்கம்பெற்ற இயக்கங்களிடமிருந்தும் நெருக்குவாரங்களை எதிர்கொண்டனர்.

முதன் முதலாக 1981 ஆம் ஆண்டு ஈழநாடு எரிப்புடன் கருத்துச் சுதந்திரத்துக்கு எதிரான இந்தக் கலவரம் ஆரம்பமானது. 1987 இல் யாழ்ப்பாணத் திலிருந்து வெளியாகிய ஒரேயொரு ஆங்கிலப் பத்திரிகையான 'சற்றர்டேரிவியூ' நிறுவனம் மீது இலங்கை விமானப்படை குண்டுவீசி அழித்தது. அக்காலத்தில்தான் யாழ்ப்பாணத்தில் சண்முகலிங்கம் என்ற பத்திரிகையாளர் காணாமல் போகின்றார்.

இவர்தான் வடக்கில் காணாமல் போன முதல் பத்திரிகையாளர் என்பது குறிப்பிடத்தக்கது. 1987 இல் இந்திய இராணுவம் முரசொலி, ஈழநாடு போன்ற பத்திரிகை அலுவலகங்களைக் குண்டு வீசி அழித்தது. 2000ஆம் ஆண்டளவில் உதயன் பத்திரிகையின் நிருபர், பிபிசி, சிங்கள மாற்றுப்பத்திரிகையான 'ராவய' ஆகியவற்றின் செய்தியாளரும் வட இலங்கைப் பத்திரிகையாளர் சங்கத்தின் செயலாளராகவும் இருந்த நிமலராஜன் இராணுவ காவலரண் ஒன்றுக்கு அண்மையில் இருந்த தமது வீட்டில் வைத்துக் கொடூரமான முறையில் சுட்டுக் கொல்லப்பட்டார். இந்தக் கொலை யாழ்ப்பாண ஊடகவியலாளர்களை மிரட்டும் ஒரு செயலாகவே கருதப்பட்டது.

வடக்கிலே தாண்டவக்கூத்தாடிய கொலை வெறி கிழக்கையும் விட்டுவைக்கவில்லை. 2004ஆம் ஆண்டு மே 31ஆம் திகதி வீரகேசரி பத்திரிகையாளரும், கிழக்கு மாகாண செய்தியாளருமான அப்பாத்துரை நடேசன் மட்டக்களப்பில் வைத்துச் சுடப்பட்டார்.

இந்தச் சூடு ஆறும் முன்பே 'சுடர்ஒளி' பத்திரிகையின் ஊடகவியலாளர் சுப்பரமணியம் சுகிர்தராஜன், திருகோணமலையில் சுட்டுப் படுகொலை செய்யப்பட்ட ஐந்து மாணவர்களின் சடலங்களைப் புகைப்படம் எடுத்தமைக்காக சுட்டுக் கொல்லப்பட்டார்.

2006ஆம் ஆண்டுகளில் தொடர்ச்சியான மிரட்டல்களுக்குள்ளாகி வந்த யாழ்ப்பாணத்தின் உதயன் பத்திரிகை, அதிகார தரப்பின் உச்சக்கட்ட வெறியாட்டத்திற்குள்ளானது. சர்வதேச ஊடக சுதந்திர தினத்திற்கு முதல் நாள் இரவு உதயன் அலுவலகத்திற்குள் நுழைந்த துப்பாக்கிதாரிகள் பணியிலிருந்த ஊடகப் பணியாளர்களைச் சுட்டுக் கொன்றதுடன் குறித்த பத்திரிகை மீண்டெழ முடியாத அளவுக்கு சொத்தழிவையும் ஏற்படுத்தினர். அத்தோடு தொடர்ந்தும் பல்வேறு வழிகளிலிலும் உதயன் பத்திரிகைக்கெதிரான அச்சுறுத்தலை விடுத்து வந்தனர்.

சரிநிகர் இதழின் கவிதை ஆசிரியர் சந்திரபோஸ் சுதாகர் 2007 ஆம் ஆண்டு வவுனியாவில் உள்ள தனது வீட்டுப் படுக்கையில் வைத்துச் சுடப்பட்டார். சக்தி தொலைக்காட்சியின் ஊடகவியலாளரான பரநிருபசிங்கம் தேவகுமார் 2008 இல் சுடப்பட்டார். இதே காலப்பகுதியில் ரவிவர்மன் என்ற செய்தியாளரும் கொல்லப்பட்டார்.

இவர்களை விட கே.எஸ்.ராஜா, அற்புதராஜா, நடராசா ஆகியோரின் கொலைகள் தொடர்பாக அரசுடன் சேர்ந்தியங்கும் ஈ.பி.டி.பி மீது ஊடகங்கள் குற்றஞ்சாட்டின.

வானொலிக் கலைஞராக இருந்த கணேசபிள்ளை, அன்ரனி யேசுதாஸ், ரேலங்கி செல்வராஜா, பாலநடராஜ ஐயர் ஆகியோரது கொலை தொடர்பில் விடுதலைப்புலிகள் மீதும் குற்றம் சாட்டப்படுகின்றது.

2011 ஆம் ஆண்டு உதயன் பத்திரிகை மீது மீண்டும் தமது அராஜகத்தை தண்டிக்கப்படாத குற்றவாளிகள் கட்டவிழ்த்தனர். இலங்கையின் முக்கிய ஊடகவியலாளர்களில் ஒருவரும் உதயன் பத்திரிகையின் செய்தி ஆசிரியருமான குகநாதன் மிலேச்சத்தனமான தாக்குதலுக்குள்ளானார்.

இறுதிவரை போரோடு நின்று ஊடகப் பணி செய்த ஒரு தொகுதி ஊடகவியலாளர்களும் படுகொலைசெய்யப்பட்டிருக்கின்றனர். அதில் பலர் போராளிகளாக இருந்தபடியே பணி செய்ததால் ஊடகத்துறை சார்ந்தவர்களால் சரியான கணிப்பைப் பெறத் தவறிவிட்டனர். ஆயினும் அவர்களின் பணி இலங்கையின் ஊடக வரலாற்றில் குறிப்பிடத் தக்கதொன்றாகும்.

2007 ஆம் ஆண்டு புலிகளின் குரல் மீது நடத்தப்பட்ட தாக்குதலில் கொல்லப்பட்ட இசைவிழி செம்பியன், மற்றும் எரிமலை, முள்ளிவாய்க்காலில் எறிகணை வீச்சினால் படுகொலையான சத்தியமூர்த்தி, இப்போதும் போர்க் குற்ற ஆதாரமாக இருக்கும் இசைப்பிரியா போன்றவர்களும், தி.தவபாலன் போன்ற காணாமல் போன ஊடகவியலாளர்களும் இந்த இடத்தில் குறிப்பிடப்படவேண்டியவர்கள்.

## தெற்கில் சூறையாடப்பட்ட ஊடகங்களின் வரலாறு

**1971** ஆம் ஆண்டு இலங்கை அரசுக்கு எதிரான போராட்டத்தில் தோல்வி அடைந்த மக்கள் விடுதலை முன்னணியினர் மீண்டும் ஒரு போராட்டத்தை 1987 - 1989 காலகட்டத்தில் அரசுக்கெதிராக மேற்கொண்டார்கள் என்ற குற்றச்சாட்டில் இருபதாயிரத்துக்கும் மேற்பட்ட சிங்கள இளைஞர்களை அப்போதைய அரசு கொன்று குவித்தது.

இந்த விடயம் குறித்துக் கேள்வி எழுப்பிய ஊடகவியலாளர்களும், ஊடகங்களும் பெரும் அச்சுறுத்தலுக்கும், மிரட்டல்களுக்கும் ஆளாகின.

1990ஆம் ஆண்டில் பல துறைகளில் தேர்ச்சி பெற்ற பத்திரிகையாளரான றிச்சாட் டி சொய்சா சுட்டுக்கொல்லப்பட்டார். இவர்தான் இலங்கையில் சுட்டுக் கொல்லப்பட்ட முதல் ஊடகவியலாளர். அதே காலப்பகுதியில் கொழும்பிலிருந்து தமிழர்களின் உரிமை சார்ந்த விடயங்களை பிரசுரித்து வந்த சரிநிகர் இதழின் ஆரம்ப கால ஆசிரியரும் செய்தியாசிரியருமான குகமூர்த்தி காணாமல் போனார். 'அத்த' என்ற பத்திரிகையின் கேலிச்சித்திர ஓவியர் யூனுஸ் கத்திக்குத்துக்கு இலக்கானார். சுனந்த தேசப்பிரியவை ஆசிரியராகக் கொண்டு, மாற்றுப் பத்திரிகையின் தொடக்கமாக வெளிவந்த யுக்திய பத்திரிகை அலுவலகம் தீக்கிரையாக்கப்பட்டது. சந்திரிகாவின் ஆட்சிக் காலத்தில் 'சண்டே ரைம்ஸ்' பத்திரிகை அவரால் முன்னெடுக்கப்பட்டு வந்த ஜெயசிக்குறு இராணுவ நடவடிக்கைகளை விமர்சித்து எழுதியதால் அச்சுறுத்தலுக்குள்ளானது. அந்தப் பத்திரிகையின் பத்தி எழுத்தாளர் இக்பால் அத்தாஸின் வீட்டுக்கு மரணப் பூச்செண்டு அனுப்பப்பட்டது. இவரின் ஆட்சிக்கால முடிவில் ரோகணகுமார என்ற ஊடகவியலாளர் இனந்தெரியாதவர்களால் கொலைசெய்யப்பட்டார்.

2005 ஆம் ஆண்டுக்குப் பின்னர் தெற்கின் ஊடகத்துறை அரசினதும் அதன் அமைச்சர்களினதும் நேரடித் தாக்குதல்களுக்குள்ளானது. இதன் முதல் இலக்காக தராக்கி தேர்ந்தெடுக்கப்பட்டார். ''தராக்கி'' என்று செல்லமாக அழைக்கப்படும் 'தமிழ் நெற்' ஆசிரியாரான தர்மரட்ணம் சிவராம் 2005ஆம் ஆண்டு ஏப்ரல் 28ஆம் திகதி இரவு கொழும்பில் வைத்து கடத்தப்பட்டு அன்றைய தினமே எமது நாட்டின் சட்டத்தையும் ஒழுங்கையும் நிலைநாட்டும் பாராளுமன்றத்தின் பின்புறமாக பிணமாக வீசப்பட்டிருந்தார். இதே காலப்பகுதியில் சம்பத் லக்மல் என்ற சிங்கள ஊடகவியலாளரும் கொல்லப்பட்டார். அத்தோடு சூரியன் எவ்.எம். என்ற தமிழ் வானொலியின் செய்தி ஆசிரியராகப் பணியாற்றிய நடராஜா குருபரன் கடத்தப்பட்டார்.

இந்தக் காலப்பகுதியில் வடக்கின் மீது போர் வன்முறைகள் என்றுமில்லாத வகையில் கட்டவிழ்த்து விடப்பட்டதால் அதனை விமர்சித்த பல ஊடகவியலாளர்களும் ஊடக நிறுவனங்களும் துப்பாக்கி முனையில் மௌனிக்கச் செய்யப்பட்டன. 'சண்டே ஸ்ராண்ட்' மற்றும் 'மௌபிம' போன்ற பத்திரிகைகள் இவ்வாறான தாக்குதல்களுக்குள்ளாகின. மௌபிமவின் ஊடகவியலாளரான பரமேஸ்வரி கைது செய்யப்பட்டார். நாமல் பெரேரா, கெய்த் நாயர் போன்றோர் இனந்தெரியாதோரின் தாக்குதலுக்குள்ளாகினர்.

2007 இல் 'சண்டே லீடரின்' ஆசிரியர் லசந்த விக்கிரமதுங்க கொல்லப்பட்டார். இதே காலப் பகுதியில் கொழும்பில் வைத்து பிரகீத் எக்னெலிய கொட என்ற கருத்தோவியர் கடத்தப்பட்டு இன்று வரை தேடப்பட்டு வரும் ஒரு ஊடகவியலாளராக இருக்கின்றார். 2008 ஆம் ஆண்டு வன்னிப் போர் உச்சம் பெற்றிருந்த காலத்தில் கொழும்பைத் தளமாகக் கொண்டியங்கிய 'சுடர்ஒளி' பத்திரிகையின் ஆசிரியர் இனந்தெரியாதவர்களால் கடத்தப்பட்டார். தொடர்ந்தும் குண்டுத் தாக்குதல்களுக்கு அந்தப் பத்திரிகை காரியாலயம் உள்ளானது. அப்போது நாட்டில் ஏற்பட்ட நெருக்குவாரங்களால் பல ஊடகவியலாளர்கள் நாட்டை விட்டு வெளியேறினர். இக்பால் அத்தாஸ், விக்ரர் ஐவன் போன்றோர் இதில் குறிப்பிடத்தக்கவர்கள்.

2008ஆம் ஆண்டு 'அவுட் றீச்' இணையத்தள இயக்குநர் ஜசீதரன் மற்றும் அவரது மனைவி, மற்றும் சரிநிகரின் முன்னாள் ஆசிரியர் திஸநாயகம் போன்றோர் கைது செய்யப்பட்டனர்.

இதே காலப்பகுதியில் மேர்வின் சில்வா உள்ளிட்ட அரசின் அடியாள்கள் அரச தொலைக்காட்சி நிலையத்துக்குள் புகுந்து ஊடகவியலாளர்களைத் தாக்கியிருந்தனர்.

2009, 2010ஆம் ஆண்டு காலப் பகுதியில் தீவிரமான கண்காணிப்பில் தெற்கின் ஊடகங்கள் வைக்கப்பட்டிருந்தன. இதன் விளைவாக லங்கா ஈ நியூஸ் உள்ளிட்ட பல இணையதளங்களும், அரசை விமர்சிக்கும் பத்திரிகைகளும் தடைசெய்யப்பட்டன. ✦

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழ்க்கையின் வெற்றி

ஒரு வயதான பாட்டியும் தாத்தாவும் ஒரு பூங்காவில் உட்கார்ந்திருந்து பேசிக் கொண்டிருந்தார்கள். அவர்களுக்கு திருமணம் ஆகி 53 வருடங்கள் முடிந்துவிட்டன. பிள்ளைகளும் படித்துப் பெரிய பெரிய வேலையில் இருக்கிறார்கள். பேரன் பேர்த்திகளும் நல்லநிலையில் இருக்கிறார்கள். இந்தத் தாத்தாவும் பாட்டியும் சிரித்துப் பேசிக்கொண்டிருப்பதை ஒரு பெரியவர் பார்த்தார். அவருக்கு ஆச்சரியமாக இருந்தது.

இந்த வயதிலும் இவ்வளவு அன்னியோன்னியமாக இவர்கள் பேசிக் கொண்டிருக்கிறாங்களே என்று நினைத்தார். நேரில் போய் விசாரித்துப் பார்க்கலாம் என்று அருகில் சென்று "உங்கள் மண வாழ்க்கையின் வெற்றியின் இரகசியம் என்ன?" என்று கேட்டார். இதைக் கேட்டதும் அந்தத் தாத்தா சிரித்துக் கொண்டே பாட்டியைப் பார்த்துவிட்டுக் கூறினார், "நான் இந்த அம்மாவை கல்யாணம் செய்ததற்கும் எங்களுடைய இல்வாழ்கை இவ்வளவு நாளாகப் பலம் குறையாமல் மகிழ்ச்சியாக இருப்பதற்கும் காரணம் ஒன்றுதான். அது என்ன என்றால், எங்களுக்கிடையில் பொதுவாக அதிக நிறைகுறைகள் இருப்பதுதான்" என்றார்.

அவர் சொல்வது சரிதான் என்பது போன்று அந்தப் பாட்டியும் அவரை நிமிர்ந்து பார்த்தார். அந்தப் பெரியவர் அந்தப் பாட்டியைப் பார்த்து "உங்களுடைய நீண்டகால மண வாழ்க்கைக்குக் கிடைத்த வெற்றி எதனால் என்று கூறமுடியுமா?" என்று கேட்டார். அவர்களும் சிரித்துக் கொண்டே "சிலபேரை நாம் குறிப்பிட்ட பண்புகளுக்காக நேசிக்கின்றோம். வேறு சிலரை நாம் அந்தப் பண்புகள் இல்லாத குறைகளுக்காகவே விரும்பிப் பழகுகிறோம்" என்று கூறிக்கொண்டு தலையைக் குனிந்துவிட்டார்.

அவர் அப்படிக் கூறியதைக் கேட்ட இவருக்குப் புதியதோர் ஞானம் பிறந்தது. உணர்வு உண்டாகியது. இதுதான் மனம் நிறைந்த மணவாழ்க்கை என்கிறார் சுவாமி சின் மயர்னந்தர்.

பண்புகளை எப்படி நேசிக்க முடியுமோ அதைப்போன்று பண்புகள் இல்லாத குறைகளையும் நேசிக்க முடியும். மனம்தான் காரணம்.

ஒரு மேலைத்தேயத் தம்பதி அவர்களும் தாத்தா பாட்டிதான்.

அவர்கள் இரண்டு பேரும் ஒரு பூங்காவிலே உட்கார்ந்து சிரித்துப் பேசிக்கிட்டிருந்தாங்கள்.

அதை ஒருத்தர் பார்த்தார். அவருக்கு ஆச்சரியம், இவ்வளவு காலம் ஆகியும் இந்த வயதிலேயும் இவ்வளவு அன்பாகப் பேசிக்கிட்டிருக்கிறாங்களே-

கிட்ட நெருங்கிப் போய்க்கேட்டார்.

"ஏன் தாத்தா- உங்களுக்குக் கல்யாணம் ஆகி எவ்வளவு வருஷம் ஆச்சு! என்றார்.

"55வருடங்கள் ஆச்சு!" என்றார் அவர்.

"இன்னமும் இவ்வளவு சந்தோஷமா இருக்கிறீங்களே அதற்கு என்ன காரணம்?" என்றார்.

"அதற்கு என்ன காரணம் எனில் இதுவரைக்கும் எங்களுக்குள்ளே சண்டையே வந்ததில்லே" என்றார்

"அது எப்படி? என்று கேட்டார் ஆச்சரியமா.

அந்த தாத்தா சொல்ல ஆரம்பித்தார்.

"எங்களுக்குக் கல்யாணம் ஆன புதிதில் நானும் என் மனைவியும் ஒருகுதிரை மேலே ஏறி ஒருகாட்டு வழியாகப் போய்க்கொண்டிருந்தோம். கொஞ்சத் தூரம் போனதும் அந்தக் குதிரை முரண்டு பிடிக்க ஆரம்பித்தது. நான் உடனே கீழே இறங்கி அந்தக் குதிரையைப் பார்த்து "இது உனக்கு முதல் தடவை!" அப்படி மிரட்டலாகச் சொல்லிவிட்டு ஏறி உட்கார்ந்தேன். கொஞ்சதூரம் குதிரை நல்லபடியாக நடந்துபோனது. மறுபடியும் இடக்கு பண்ண ஆரம்பித்தது.

நான் கீழே இறங்கினேன். கையிலே இருந்த சாட்டையாலே ஓங்கி ஒரு அடி கொடுத்து. "இது உனக்கு இரண்டாவது தடவை" என்று சொல்லிவிட்டு ஏறி உட்கார்ந்தேன்.

மறுபடியும் குதிரை கொஞ்சத்தூரம் நல்லவிதமாக நடந்து போய்விட்டது.

அந்தச் சமயம் குதிரை கொஞ்சதூரம் நல்லவிதமாக நடந்து போய் பின்னரும் முரண்டு பிடிக்க ஆரம்பித்தது.

அந்தச் சமயம் ஓர் ஆற்றுப் பாலத்தை கடந்து போய்க் கொண்டிருந்தோம். உடனே நான் கீழே இறங்கினேன் மனைவியையும் கீழே இறங்கச் சொன்னேன் பின்னர்

அந்தக் குதிரையைப் பிடித்து ஆற்றிலே தள்ளிவிட்டு'இது உனக்கு கடைசித் தடவை. என்று சொன்னேன்.

அதைப் பார்த்ததும் என் மனைவி பதறிப் போய். "ஐயோ பாவம் என்ன இப்படிச் சொல்கிறீர்களே உங்களுக்கு மனதில் கொஞ்சம் கூட இரக்கமே இல்லையா? என்றார்.நான் மெதுவா திரும்பி "இது உனக்கு முதல் தடவை? என்றேன். அவ்வளவு தான் அன்றிலிருந்து இன்று வரைக்கும் ஒருநாள் கூட எங்களுக்குள்ளே சண்டையே வந்ததில்லை."

என்றார் அந்த தாத்தா.



**தென்கச்சி கோ.சுவாமிநாதன்**

# முன்பள்ளிக் கல்விக்கு முக்கியத்துவமளிக்கும் ஞானசம்பந்தர் சனசமூக நிலையம்

சுமார் 40 ஆண்டுகளுக்கு மேலாக ஆண்டாண்டு காலமாகப் புதுப் புது அம்சங்களை உள்வாங்கியவாறு வளர்ந்து வரும் ஞானசம்பந்தர் கலை மன்ற முன்பள்ளி தொடர்ந்து வளர்ச்சி கண்டு வருகிறது. எனினும் கடந்த சில ஆண்டுகளாகப் பெற்றோர்களின் விருப்பத்துக்கேற்ப பிள்ளைகளைச் சேர்த்துக் கொள்ள முடியாத நிலை இருந்து வருகிறது. பிள்ளைகளைச் சேர்த்துக் கொள்ள போதிய இட வசதிகளும் இல்லாமல் உள்ளன.



கலை மன்ற முன்பள்ளிச் சிறார்களுக்கு கணினிப் பயிற்சி அளிக்கப்படுகிறது

போர் முடிவுக்கு வந்ததைத் தொடர்ந்து படிப்படியாக இயல்பு நிலை மெல்ல மெல்லத் திரும்பி வந்ததைத் தொடர்ந்து கலை மன்றச் சுற்றாடலில் இருந்து மட்டுமல்லாமல், மன்றத்தின் நாற்புறமும் உள்ள ஏனைய கிராமங்கள், இடங்களிலிருந்தும் பிள்ளைகளை கலை மன்ற முன்பள்ளியில் சேர்த்துக் கொள்ள பெற்றோர்கள் போட்டிபோட்டு வருகின்றனர். பெற்றோர்களின் விருப்பத்தைப் பூர்த்தி செய்யவும், எதிர்காலப் பிரஜைகளான சிறார்களுக்குச் சைவத்தமிழ், பண்பாடு, கலாசார விழுமியங்களை சிறுவயதுமுதலே அவர்களின் மனங்களில் நிலை பெறச்செய்யவும் விருப்புக் கொண்டுள்ள கலை மன்றம் முன்பள்ளிக்கு இயன்றளவு சிறார்களை வருடந்தோறும் அனுமதிக்கத் தொடங்கியது. எனினும் பெரும் எண்ணிக்கையில் சிறார்களை அனுமதிக்க போதிய இடவசதி இல்லையே எனக் கவலையடைந்துள்ளது. இதன் காரணமாக நிலைமைக்கேற்ப முன்பள்ளிக்குச் சிறார்களை அனுமதிப்பது கட்டுப்படுத்தப்பட்டுள்ளது.

கடந்த 1970 ஆம் ஆண்டு சுமார் 20 சிறார்களுடன் மன்றத்தினால் ஒரே ஒரு ஆசிரியருடன் ஆரம்பமான முன்பள்ளி மெல்ல மெல்ல வளர்ச்சியடைந்து 2007 ஆம் ஆண்டு முன்பள்ளிச்சிறார்களின் எண்ணிக்கை 40 ஆக அதிகரித்தது. சிறார்களின் எண்ணிக்கைக்கு அமைவாக அதாவது 20 முன்பள்ளிச் சிறார்களுக்கு ஒரு ஆசிரியர் என்ற அடிப்படையில் மேலும் ஒரு ஆசிரியை நியமிக்கப்பட்டார். இவ்வாறாக வளர்ச்சியை நோக்கிச் சென்று கொண்டிருந்த கலைமன்ற முன்பள்ளியில் 2008 ஆம் ஆண்டு 60 சிறார்கள் அனுமதிக்கப்பட்டார்கள். 2009 ஆம் ஆண்டு 90 சிறார்களும், 2010 ஆம் ஆண்டு 100 சிறார்களும், 2011 ஆம் ஆண்டு 112 சிறார்களும் இவ்வாண்டு (2012) 118 சிறார்களும் முன்பள்ளிக்கு அனுமதிக்கப்பட்டார்கள். தற்போது 118 சிறார்களுக்கு 5 ஆசிரியைகள் நியமிக்கப்பட்டு கற்பித்து வருகின்றார்கள்.

**ஞானசம்பந்தர் கலை மன்றம் முன்பள்ளியை ஆரம்பித்து 42 ஆண்டுகள் கடந்த நிலையில் கடந்த 20 வருடங்களாக முன்பள்ளிச் சிறார்களிடையே விளையாட்டுப் போட்டியை நடத்தி சிறார்களின் உடல் நல ஆரோக்கியத்தைப் பேணிவருகின்றது.**

முன்பள்ளி நிர்வாகத்தை வடமாகாண கல்வி அமைச்சு பொறுப்பேற்று நடத்தும் திட்டத்தின் கீழ் கடந்த வருடம் (2011) 5 ஆசிரியர்களுடன் கலை மன்ற முன்பள்ளியைப் பொறுப்பேற்ற வடமாகாண கல்வி அமைச்சு 3 ஆசிரியைகளுக்கான கொடுப்பனவை வழங்கி வருவதோடு, பாடவிதானத்தை வழங்கியுள்ளதோடு, அதன் நிர்வாகச் செயற்பாடுகளை வடமராட்சி வலய முன்பள்ளி உதவிக்கல்விப் பணிப்பாளர் சி.தில்லைநாதன் அடிக்கடி கண்காணித்து வருகின்றார். மூன்று ஆசிரியைகளுக்கே கல்வித்திணைக்களம் மாதாந்தக் கொடுப்பனவுகளை வழங்கி வருகின்ற நிலையில் எஞ்சிய இரண்டு ஆசிரியைகளுக்கான கொடுப்பனவுகளைப் பெற்றோர்களிடமிருந்து கலை மன்றம் பெற்றுக் கொள்ளும் வசதிக் கட்டணத்திலிருந்து வழங்கி வருகின்றது.

அந்த 40 ஆண்டு காலமாக கலை மன்ற முன்பள்ளிக்குத் தேவையான அடிப்படை வசதிகள் சிலவற்றை பொது நிறுவனங்களும், சிலவற்றைக் கலை மன்றமும் தனது நிதியிலிருந்து பெற்றுக் கொடுத்துள்ளன. 2000 ஆம் ஆண்டு காலப் பகுதியில் அரச சார்பற்ற நிறுவனம் ஒன்றின் உதவியுடன் பருத்தித்துறை நகரசபை இந்த முன்பள்ளிக்கான ஒரு தொகுதி தளபாடங்களை வழங்கியுள்ளது. கடந்த வருடம் முதல் பருத்தித்துறை பிரதேச செயலகம் வடமராட்சி வடக்கு கால்நடை வளர்ப்போர் கூட்டுறவுச் சங்கத்தின் ஊடாகச் சிறார்களுக்கு ஊட்டச்சத்தை ஏற்படுத்துமுகமாகப் பசுப்பாலை சிறார்களுக்கு வழங்கியுள்ளது.

**■ கர்ணன்**

ஞானசம்பந்தர் கலை மன்றம் முன்பள்ளியை ஆரம்பித்து 42 ஆண்டுகள் கடந்த நிலையில் கடந்த 20 வருடங்களாக முன்பள்ளிச் சிறார்களிடையே விளையாட்டுப் போட்டியை நடத்தி சிறார்களின் உடல்நல ஆரோக்கியத்தைப் பேணிவருகின்றது. இந்த விளையாட்டுப் போட்டிகளுக்கு அறிஞர்கள், சமூகசேவையாளர்கள் விருந்தினர்களாக அழைக்கப்பட்டுக் கௌரவிக்கப்பட்டு வருகின்றார்கள். இந்த முன்பள்ளியில் கற்கும் சிறார்களுக்கு கலைத் துறையில் ஆர்வமும், நாட்டமும் ஏற்படக் கூடிய விதத்தில் அவர்களைக் கொண்டே நாடகங்கள், நடனங்களுக்கு ஏற்பாடு செய்யப்பட்டு கலை விழாக்களின் போது மேடை ஏற்றப்படுவதும் உண்டு.

வடமராட்சிப் பிரதேசத்தில் எந்த முன்பள்ளிகளிலும் இல்லாதவாறு கலை மன்ற முன்பள்ளிச் சிறார்களிடையே பாண்ட் வாத்தியக் குழு ஒன்று உருவாக்கப்பட்டுள்ளது. இந்தக் குழுவுக்குத் தேவையான பாண்ட் வாத்தியக் கருவிகளை ஞானசம்பந்தர் கலை மன்றமே பெற்றுக் கொடுத்துள்ளது. கலை மன்ற நிகழ்வுகள் மாத்திரமன்றி அதன் சுற்றாடல்களில் இடம்பெறும் பொது நிகழ்வுகளில் கலந்து கொள்ளவரும் பிரமுகர்களை அழைத்துச் செல்ல கலைமன்ற முன்பள்ளிச் சிறார்களின் பாண்ட் வாத்தியக் குழுவையே விரும்பி அழைத்துச் செல்வார்கள்.

நெல்லியடியிலுள்ள ESOFT கணினி நிறுவனம் ஞானசம்பந்தர் மன்ற முன்பள்ளி மாணவர்களுக்கு கடந்த வருடம் (2011) முதல் கணினிப் பயிற்சிகளை வழங்கி வருகின்றது. இந்த முன்பள்ளியில் கற்கும் சிறார்களில் தெரிவு செய்யப்பட்ட 50 சிறார்களுக்கே இந்தப் பயிற்சி தொடர்ந்து நடைபெற்று வருகின்றது. முன்பள்ளிச் சிறார்களுக்கான கணினிப் பயிற்சிநெறி, பாண்ட் வாத்திய இசைக் குழு ஆகியவற்றை வடமராட்சிப் பிரதேசத்தில் முதன்முதலில் ஆரம்பித்தது கலை மன்ற முன்பள்ளியே ஆகும்.

ஞானசம்பந்தர் கலை மன்றம் சனசமூக நிலையம், நூல் நிலையம் முன்பள்ளி, பிரத்தியேக கல்வி வகுப்புகள் முதலிய சேவையை சமூகத்துக்கு வழங்கி வருகின்ற போதிலும் மன்றத்தின் முக்கிய நோக்கம் நுண்கலைகளை வளர்ப்பதே. நுண்கலைகளை மாணவர்களிடையே கற்பிப்பதன் மூலம் அவர்களிடம் இறைபக்தியும், வாழ்க்கையில் ஒழுக்கமும், கட்டுக்கோப்பும் ஏற்படும் என்பதை மன்றம் தெளிவாகப் புரிந்து கொண்டிருந்தது. (தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தொழிலாளர்கள் சுரண்டப்படுவதை தொடர்ந்தும் அனுமதிக்க முடியாது

## மத்திய மாகாண சபை உறுப்பினர் தெரிவிப்பு

நுவரெலியா,மே 3

தொழிலாளர்கள் சுரண்டப்படுவதை தொடர்ந்தும் அனுமதிக்க முடியாது என்று மத்திய மாகாண சபை உறுப்பினர் முரளி ரகுநாதன் தெரிவித்தார்.

ஜனநாயக தொழிலாளர் காங்கிரஸின் மே தினக் கூட்டம் நேற்றுமுன்தினம் மஸ்கெலியாவில் நடைபெற்றது. இந்த நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

காலாகாலமாக வரலாற்று ரீதியாக நாம் சுரண்டல்களை எதிர்கொண்டுவரும் தொழிலாளர் வர்க்கமாக இனியும் வாழமுடியாது என்ற இக்கட்டான சூழ்நிலையில் நாம் மே தினத்தைக் கொண்டாடுகின்றோம்.

மலையகத்தில் தோட்டங்கள் தோறும் எம்மை அர்ப்பணித்து உழைக்கின்றோம். அந்த வருமானம் நாட்டின் வெளிநாட்டு வருமானத்தில் பெருந்தொகையாகவுள்ளது. இவ்வாறாக நாட்டுக்கு நாம் வருமானத்தைக் ஈட்டிக்கொடுத்த போதும் எமது மக்களின் சாதாரண வாழ்க்கைத் தரத்திற்கு எந்தவித திட்டத்தினையும் காலத்திற்குக் காலம் ஆட்சிக்கு வந்த அரசுகள் வழங்கவில்லை.

எமது வாக்கினைப் பெற்றவர்கள் காலத்துக்குக் காலம் அரசுடன் ஒட்டிக்கொண்டு வாழ்க்கையினையும் வசதி வாய்ப்புக்களையும் அதிகரித்துக் கொண்டனர். எமது மக்களுக்கு என்று நியாயமாக எதனையும் அவர்கள் பெற்றுக்கொடுக்கவில்லை.

இவ்வாறான அவலத்தின் வெளிப்பாடே இன்று நாம் தோட்டங்களில் எதிர்கொள்ளும் பிரச்சினைகள் ஆகும். நாம் இன்று நூற்றுக் கணக்கான ஆண்டுகளுக்கு முன்பாக அமைக்கப்பட்ட லயன் வீடுகளிலே தான் வசிக்கின்றோம். எமது பிள்ளைகள் கொழும்பில் உள்ள வர்த்தக நிலையங்களில் வேலைக்குச் செல்கின்றனர்.

பிள்ளைகள் கவனமாகப் படித்தாலும் அவர்களுக்கு உரிய முறையில் கல்வியைத் தொடர்வதற்கு வசதி வாய்ப்புக்கள் நாட்டின் பிற பாகங்களில் இருப்பவர்களுக்குக் கிடைப்பது போன்று எமக்குக் கிடைப்பதில்லை. இதனால் எமது குழந்தைகள் கல்வியில் பின்தள்ளப்பட்டுள்ளனர். எமது மலையக மக்களது பிரச்சினைகளையும் தேசிய அரசியல் நீரோட்டத்தில் இணைத்து அதற்கேற்ற ஒரு தீர்வை முன்வைக்க வேண்டும் - என்றார். (ச)

# போரால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிதியுதவி

எருவில்,மே 3

லண்டன் அகிலன் பவுன்டேசன் நிறுவனத்தினால் மட்டக்களப்பு மாவட்டத்தில் போரால் பாதிக்கப்பட்ட மக்களின் வாழ்வாதாரத் திட்டத்துக்கு நிதியுதவிகள் நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை வழங்கப்பட்டன.

ஆரையம்பதியில் லண்டன் பவுன்டேசன் நிறுவனத்தின் மட்டக்களப்பு மாவட்ட இணைப்பாளர் மகேந்திரன் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில், பிரதம விருந்தினராக கிழக்கு மாகாண சபை உறுப்பினர் பூ.பிரசாந்தன், லண்டன் அகிலன் பவுன்டேசன் ஸ்தாபகர் கோபாலகிருஸ்ணன் ஆகியோர் கலந்துகொண்டனர்.

வறுமைக் கோட்டுக்குக் கீழ் வாழும் 15 குடும்பங்களின் தலைமை அங்கத்தவர்கள் தெரிவுசெய்யப்பட்டு ஒவ்வொரு குடும்பத்திற்கும் தலா 25,000 ரூபா வீதம் நிதியுதவிகள் வழங்கப்பட்டன.

சிறுகைத்தொழில்கள் மேற்கொள்வதன் மூலம் தமது குடும்பத்தினை பொருளாதார ரீதியில் கொண்டு செல்ல உறுதுணையாக அமையும் என்று லண்டன் பவுன்டேசன் நிறுவனத்தின் மட்டக்களப்பு மாவட்ட இணைப்பாளர் மகேந்திரன் தெரிவித்தார். (ச)

# மே தினத்தில் திரள்வதைப் போல் தேர்தலிலும் இணையுங்கள்

## திகாம்பரம் எம்.பி. கோருகிறார்

நுவரெலியா,மே 3

தோட்டத் தொழிலாளர்கள் வர்க்க உணர்வுடன் மே தினத்தில் கலந்துகொண்டு தலைவர்களை மகிழ்விப்பது போல தேர்தல் காலத்திலும் தமது ஒற்றுமையை வெளிப்படுத்தி தமது பிரதிநிதிகளைத் தெரிவு செய்ய வேண்டும் என்று தொழிலாளர் தேசிய சங்கத்தின் தலைவர் பி.திகாம்பரம் கோரிக்கை விடுத்துள்ளார்.

நுவரெலியாவில் இடம்பெற்ற தொழிலாளர் தேசிய சங்கத்தின் மே தின விழாவில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இந்த நிகழ்வில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

தொழிலாளர் வர்க்கத்துக்குத் துரோகம் செய்ய முற்படுபவர்களுக்கெதிராக அச்சமின்றி குரல் கொடுத்துப் போராட வேண்டும்.

தோட்டத் தொழிலாளர்களின் சம்பள உயர்வு தொடர்பாகச் செய்து கொள்ளப்படும் கூட்டு ஒப்பந்தத்தின்போது நிறுவனங்களுக்காக சாதகமாக செயற்படுகின்றவர்களால் தொழிலாளர்கள் கஷ்டத்துக்கு ஆளாகி வருகின்றனர்.

இத்தகைய அநீதிகளுக்கெதிராக நாடாளுமன்றத்தில் குரல் கொடுத்து வருகின்றேன். தொழிலாளர்களுக்கு உண்மையான சேவையாற்ற வந்துள்ள எனக்கு அச்சுறுத்தல்களும், இடையூறுகளும் ஏற்படுத்தப்பட்டு வருகின்றன. இவற்றையெல்லாம் கண்டு நான் பயந்துவிடப்போவதில்லை. எத்தகைய தீய சக்திகள் வந்தாலும் எதிர்த்து நின்று தொடர்ந்தும் செயற்படத் தயாராகவுள்ளேன்.- என்றார். (ச)

### கழிவு தேயிலை ஏற்றி வந்த லொறிகள் சிக்கின

நுவரெலியா, மே 3

ஆறாயிரம் கிலோ அடங்கிய கழிவு தேயிலையை ஏற்றிவந்த 2 லொறிகள் கண்டி, உடுநுவர வெலம்பொட பிரதேசத்தில் விசேட அதிரடிப் படையினரால் கைப்பற்றப்பட்டுள்ளன.

இரத்தினபுரி பிரதேசத்திலிருந்து இந்தக் கழிவு தேயிலையை கொண்டு வரப்பட்டதாக கருதப்படும் 2 லொறிகளும் தவுலகலை பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளதாக விசேட அதிரடிப் படையினர் தெரிவித்தனர். (ச)



ஏறாவூர், மீராகேணி பகுதியில் புதிதாக அமைக்கப்பட்ட தாய் சேய் சிகிச்சை நிலைய திறப்பு விழாவில் ஸ்ரீ லங்கா முஸ்லீம் காங்கிரஸின் தவிசாளர் பஷீர் சேகுதாவூத், கிழக்கு மாகாண சுகாதார அமைச்சர் எம்.எஸ்.சுபைர், ஏறாவூர் நகர சபை முதல்வர் அலிஸாகிர் மௌலானா, மட்டக்களப்பு மாவட்ட பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் எஸ்.சதுர்முகம் ஆகியோர் மலர்மாலை அணிவித்து வரவேற்கப்பட்டனர்.

### வாகன விபத்தில் பெண்கள் சாவு

கண்டி, மே 3

குருநாகல் - கண்டி வீதியில் நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை காலை இடம்பெற்ற வாகன விபத்தில் பெண்கள் இருவர் மரணமடைந்துள்ளனர்.

வீதியால் நடந்து சென்று கொண்டிருந்த இந்தப் பெண்கள் மீது எதிரே வந்த வான் மோதியுள்ளது.

இந்த விபத்துச் சம்பவம் தொடர்பில் பொலிஸார் விசாரணை மேற்கொண்டு வருகின்றனர்.

இதேவேளை, குறித்த வானை தாக்குவதற்கு பொது மக்கள் முயற்சித்தபோது, பொலிஸார் அதனைத் தடுத்துநிறுத்தினர். (ச)

# அம்பாறை இளைஞர் சேவை அதிகாரிகளுக்கு இடமாற்றம்

சம்மாந்துறை, மே 3

ஒரே பிரதேசத்தில் ஐந்து வருடங்களுக்கு மேல் கடமையாற்றிய இளைஞர் சேவை அதிகாரிகள் தேசிய இளைஞர் சேவைகள் மன்ற அம்பாறை மாவட்ட உதவிப் பணிப்பாளரினால் இடமாற்றம் செய்யப்பட்டுள்ளனர்.

பிரதேச ரீதியாக இளைஞர் அபிவிருத்தி நடவடிக்கைகளை மேற்கொள்ளும் பொருட்டு பிரதேச செயலகப் பிரிவுகளுக்கு நியமிக்கப்பட்டுள்ள இளைஞர் சேவை அதிகாரிகள் எதிர்காலத்தில் தமது கடமைகளை எவ்வித இடையூறுகளுமின்றி சிறப்பாக மேற்கொள்ளும் வகையில் இந்த இடமாற்றத் திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது என்று மாவட்ட உதவிப் பணிப்பாளர் கே.எம்.திஸாநாயக்க தெரிவித்தார். (ச)

# சம்மாந்துறை நெற்களஞ்சியத்தை மீள இயக்க நடவடிக்கை தேவை

## விவசாயிகள் வலியுறுத்து

எருவில்,மே 3

சம்மாந்துறை நெல் களஞ்சியம் நெல்லைக் கொள்வனவு செய்யாமையால் விவசாயிகள் பெரும் சிரமங்களை எதிர்நோக்கினர். இதுதொடர்பில் சம்மாந்துறை பிரதேச செயலகத்துக்கு அறிவிக்கப்பட்ட இந்த விடயத்தைக் கவனத்திற்கொண்டு நெல் களஞ்சியத்தை மீண்டும் இயங்க வைக்க நடவடிக்கை எடுக்குமாறு விவசாயிகள் சம்பந்தப்பட்ட அதிகாரிகளைக் கோரியுள்ளனர்.

இந்த நெல் களஞ்சியம் குறிப்பிட்டதொரு நிர்ணய விலையில் நெல்லைக் கொள்வனவு செய்துவந்தது. எனினும் கடந்த வாரம் முதல் திடீரென நிறுத்தப்பட்டது. இதனால் அறுவடை செய்த நெல் மூடைகளை விற்க முடியாத நிலையில் விவசாயிகள் திண்டாடுகின்றனர்.

சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி தனியார் வியாபாரிகள் குறைந்த விலையில் நெல்லைக் கொள்வனவு செய்ய முனைகின்றனர் என்றும் கூறப்படுகின்றது.(ச-31)

### புதையல் தோண்டியோர் கைது

கலேவெல, மே 3

கலேவெல பகுதியில் உள்ள புராதன விகாரை ஒன்றில் புதையல் தோண்டும் முயற்சியில் ஈடுபட்டிருந்த 8 சந்தேகநபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இந்த நபர்கள் நேற்று முன்தினம் இரவு 8.50 மணிக்கு கைது செய்யப்பட்டதாக கலேவெல பொலிஸார் தெரிவித்தனர்.

சந்தேகநபர்கள் தம்புள்ள நீதிவான் நீதிமன்றில் முன்னிலைப்படுத்தப்படவுள்ளனர். (ச)

# தம்புள்ள பள்ளி மீதான தாக்குதலுக்கு கல்முனை மாநகரம் கடும் கண்டனம்

அம்பாறை, மே 3

தம்புள்ளவில் பள்ளிவாசல் மீது மேற்கொள்ளப்பட்ட தாக்குதல் சம்பவத்தைக் கண்டித்துக் கல்முனை மாநகரசபையில் கண்டனத் தீர்மானம் ஒன்று நிறைவேற்றப்பட்டுள்ளது.

கல்முனை மாநகர சபையின் மாதாந்தக் கூட்டம் மாநகர முதல்வர் மீரா சாகிப் தலைமையில் மாநகரசபை சபா மண்டபத்தில் நடைபெற்றது.

தீர்மானம் தொடர்பான பிரேரணையைக் கூட்டத்தில் முன்மொழிந்து முஸ்லிம் காங்கிரஸ் உறுப்பினர் ஏ.ஆர்.அமீர் உரையாற்றுகையில்,

''தம்புள்ள ஹைரியா பள்ளிவாசல் மீது தாக்குதல் நடத்திய பௌத்த பிக்குமார் நடந்துகொண்ட விதம் அநாகரிகமான செயலாகும்.

இந்த நாட்டில் சகல இன மக்களும் வாழும் பூர்வீக உரிமை கொண்டவர்கள்.

அதேபோல் அவரவர்கள் தமது மத விழுமியங்களை அமைத்துக் கொள்ளவும் பேணவும் முழு உரிமையுமிருக்கிறது.

ஆனால் பௌத்த புனித [illegible] தம்புள்ள பள்ளிவாசல் மீது அரங்கேற்றப்பட்ட இனவெறித் தாக்குதல் வன்மையான கண்டனத்துக்குரியதாகும்.

அடக்குமுறை கொண்டு இன சுத்திகரிப்பு நோக்கில் பௌத்த மத இனத்துறவிகள் எனப்படும் தேரர்கள் முன்னின்று நடத்திய இந்தத் தாக்குதல் மிலேச்சத்தனமான ஈனச்செயலாகும்.

எமது முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் இந்த விடயத்தில் விட்டுக்கொடுப்புக்கே இடமில்லை எனக் காட்டமான எதிர்ப்பை வெளிக்காட்டியுள்ளதுடன், சர்வதேசத்துக்கும் [illegible]படுத்தி [illegible] அதேவேளை, அரசுக்கு நாம் வழங்கும் உந்து சக்தியை இந்தகைய சம்வங்கள் தொடர்பில் இரத்துச் செய்யவும் தயார் நிலையில் உள்ளோம்.

தம்புள்ள பள்ளிவாசல் அதேஇடத்திலேயே தங்கு தடையின்றி இயங்கவேண்டும் என்பதே அனைவரதும் முடிவாகும். இந்த வகையில் முக்கியத்துவம் மிக்க நமது கல்முனை மாநகரசபை தம்புள்ள தாக்குதல் சம்பவத்தைக் கண்டிக்கும் தீர்மானத்தை ஏகமனதாக எடுக்க வேண்டும்-என்றார்.

இந்த நிகழ்வில் தமிழரசுக் கட்சி உறுப்பினர் அ.அமிர்தலிங்கம் தெரிவித்ததாவது:-

மதங்கள் தோன்றியது மனிதர்களுக்காகவே. அதற்காக மதம் என்ற போர்வையில் மதம் பிடித்து ஊழிக் கூத்து ஆடக்கூடாது.

பௌத்தமதம் மட்டும் தான் இந்த நாட்டில் உள்ள மதம் அல்ல. அது மட்டும் தான் புனிதமான மதமுமல்ல. ஏனைய மதங்களையும் ஏனைய மத வழிபாட்டுத் தலங்களையும் மதிக்க பௌத்த தேரர்களுக்கு அறிவூட்ட வேண்டிய துர்ப் பாக்கிய நிலை நாட்டிலுள்ளது.

தம்புள்ள பள்ளிவாசல் தாக்குதல் சம்பவம் வன்மையாகக் கண்டிக்கத்தக்கது. - என்றார்.

(ச-30)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?

தருவது வித்தியா

**மேடம்:** தெய்வ சிந்தனைகள் அதிகமாக இருக்கும். பொறுப்புகள் அதிகரிக்கும். பணிகளை விரைவாக முடிக்க வேண்டிய நிர்ப்பந்தங்கள் ஏற்படும். எந்த ஒரு விடயத்திலும், வார்த்தைகளை அளவோடு வைத்துக் கொள்ளுங்கள். அது எல்லா விவகாரங்களையும், பாதிப்பில்லாமல் கொண்டு செல்லும்.

**இடபம்:** தொழில் தொடர்பான நடவடிக்கைகளைத் தீவிரப்படுத்துவீர்கள். சில நபர்களின் விமர்சனங்கள் தங்களை அதிகம் யோசிக்க வைக்கலாம். அதனைக் கருத்தில் கொள்ளாமல், பணிகளில் மட்டும் கவனம் செலுத்துங்கள். உடல் நிலையில் கவனம் தேவைப்படும். இருப்பினும், குழப்பங்களுக்குத் தீர்வு கிடைக்கும்.

**மிதுனம்:** எதிர்பாராத தொந்தரவுகள் ஏற்பட்டு விலகும். பணிகளில் முழுக்கவனம் செலுத்தியபோதும், தவறுகள் தவிர்க்க முடியாததாக இருக்கும். எதிர்பார்த்த பணவரவுகள் வரும். சகோதர வகையில், சிறு சிறு சச்சரவுகள் ஏற்பட்டு விலகும். தொழிலில் புதிய தொடர்புகள் ஏற்படும்.

**கடகம்:** எதிர்பார்க்கும் தகவல்கள் சற்று தாமதமாகும். புதிய நபர் ஒருவரின் அறிமுகம் கிடைக்கும். பணி நிமித்தமாக, அலைச்சல் அதிகமாக இருக்கும். குழந்தைகளால் செலவுகள் கூடும். கடன் குறையும். தொழிலில் புதிய ஒப்பந்தங்களால் லாபம் கூடும். பயணங்களைத் திட்டமிட்டுக் மேற்கொள்ளுதல் நல்லது.

**சிங்கம்:** சில நேரம் குழப்பமாகவும், சில நேரம் தெளிவாகவும் செயற்படுவீர்கள். அதற்குச் சரியாகத் திட்டமிடாதது கூட, ஒரு காரணமாக இருக்கும். வரவுகள் சந்தோஷம் தந்தபோதும், செலவுகள் சிந்திக்க வைக்கும். குடும்பத்தில் கோப தாபங்களைத் தவிர்த்துக் கொள்ளுங்கள். அலுவலகப் பணிகளில் அஜாக்கிரதை வேண்டாம்.

**கன்னி:** சில காரணங்களால் மன அமைதி குறையும். தொழில் மற்றும் வியாபாரத்தில் சீரற்ற போக்கு நிலவும். பண வரவு தாமதப்படும். கடன்களில் கூடுதல் கவனம் இருக்கட்டும். பிறருக்காக மேற்கொள்ளும் பணிகளில் கவனம் வேண்டும்

## நாளை

சித்திரை 22 வெள்ளிக்கிழமை 04.05.2012
திதி: திரயோதசி.பி 02.36வரை
நட்சத்திரம்: அத்தம் மு.ப. 09.40 வரை
சுபநேரம்:5.56- 07.25 வரை
ராகு காலம்: 10.26- 11.56 வரை

**துலாம்:** நேற்றைய குழப்பங்களுக்குத் தீர்வு காண்பீர்கள். நட்பு மற்றும் உறவு வகையில், ஆறுதலான வார்த்தைகள் கிடைக்கப் பெறுவீர்கள். பணநிலையில் நெருக்கடிகளைச் சாதுரியமாகச் சமாளிப்பீர்கள். குழந்தைகளின் மனநிலையைக் கருத்தில் கொண்டு செயற்படுங்கள். தொழிலால் லாபம் கூடும்.

**விருச்சிகம்:** மன நிலையில் நிலவும் மாற்றமான சிந்தனை அமைதியை ஏற்படுத்தும். நண்பர் ஒருவரின் பிரச்சினைக்காகத் தலையிட்டு, தன் கைப்பணத்தைச் செலவு செய்ய வேண்டியிருக்கும். தொழிலில், ஏற்ற இறக்கமான போக்கு காணப்படும். வாகனச் செலவுகள் ஏற்படும்.

**தனுசு:** புதிய முயற்சி ஒன்றுக்காக சற்று கூடுதலான அலைச்சல் இருக்கும். நீங்கள் சந்திக்க நினைத்த நண்பர் ஒருவர், எதிர்பாராத வண்ணம் தங்களை சந்திப்பார். தகுந்த நேரத்தில் இல்லறத்துணையின் யோசனைகள் பயன் உள்ளதாக இருக்கும். பெற்றோருக்காக மருத்துவச் செலவு ஏற்படும்.

**மகரம்:** செல்வாக்குக் கூடும். நட்புகளின் உதவிகள் மிகுந்த பயன் தரும். புதிய வேலை வாய்ப்புக்கான முயற்சிகள் வெற்றி தரும். அலுவலகப் பணிகளில் சற்று முன்யோசனையுடன் செயற்படுதல், தவறுகளைத் தவிர்க்க உதவும். சகோதர வகையில் ஏற்பட்ட சச்சரவுகளுக்குத் தீர்வு ஏற்படும்.

**கும்பம்:** எண்ணங்கள் வெற்றி பெறும், பணியில் தடங்கல்கள், தாமதங்கள் ஏற்பட்ட போதும், விடா முயற்சியோடு செய்து முடிப்பீர்கள். சொத்து சம்பந்தப்பட்ட வகையில் ஆதாயம் கூடும். உறவினர் ஒருவருக்காகப் பணியை மேற்கொண்டு, அதனால் அலைச்சலையும், செலவுகளையும் சந்திக்க வேண்டியிருக்கும்.

**மீனம்:** பயம், குழப்பம் ஏற்பட்டு விலகும். சில சூழ்நிலைகளைச் சரிப்படுத்தி அமைத்துக்கொண்ட போதும் வெற்றிகள் தாமதப்படும். அரச சம்பந்தப்பட்ட பணி ஒன்றுக்காக அலைவீர்கள், பயன்கிடைக்காது. குடும்ப நலனில் அக்கறை அதிகரிக்கும். புதிய அறிமுகங்கள் ஓரளவுக்கு பயன் தரும்.

# சுடோக்கு

## எண் விளையாட்டு

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 7 | | 2 | 9 | | 5 | 3 | | 1 |
| | | 9 | | | 3 | 5 | 2 | |
| | 3 | | | 8 | | 9 | 7 | |
| 9 | | | 3 | | | | | 5 |
| | | 6 | | | | 1 | | |
| 1 | | | | | 4 | | | 3 |
| | 9 | 7 | | 1 | | | 3 | |
| | 5 | 3 | 4 | | | 6 | | |
| 6 | | 4 | 8 | | 9 | 7 | | 2 |

## சுடோக்கின் நேற்றைய விடை

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 7 | 4 | 5 | 2 | 6 | 9 | 3 | 8 | 1 |
| 2 | 9 | 8 | 1 | 3 | 4 | 5 | 6 | 7 |
| 3 | 6 | 1 | 5 | 7 | 8 | 9 | 2 | 4 |
| 1 | 2 | 9 | 6 | 4 | 5 | 8 | 7 | 3 |
| 6 | 7 | 4 | 3 | 8 | 1 | 2 | 9 | 5 |
| 8 | 5 | 3 | 9 | 2 | 7 | 1 | 4 | 6 |
| 9 | 3 | 7 | 8 | 1 | 6 | 4 | 5 | 2 |
| 4 | 8 | 2 | 7 | 5 | 3 | 6 | 1 | 9 |
| 5 | 1 | 6 | 4 | 9 | 2 | 7 | 3 | 8 |

சுடோக்கு ஒரு எண் விளையாட்டு. தர்க்க ரீதியான ஒழுங்குபடுத்தல்தான் இதன் அடிப்படை. 1–9 வரையான எண்களை ஒழுங்குபடுத்தி ஒரே கோலத்தை ஏற்படுத்த வேண்டும். இந்தப் பெட்டி 9 நிரல்களையும் 9 நிரைகளையும் கொண்டது. 3X3ஆக உள்ளேயும் 3 நிரல்களையும் 3 நிரைகளையும் கொண்டிருக்கிறது. (உள்ளே இருப்பவற்றை பெட்டிகள், கட்டங்கள், பகுதிகள், உபசதுரங்கள் என்றும் அழைக்கிறார்கள்). இந்த ஒவ்வொரு நிரையிலும் நிரலிலும் 1–9 வரையான எண்கள், இரண்டு தடவைகள் (மீண்டும் மீண்டும்) வராமல் நிரப்பப்பட வேண்டும். அவ்வாறு நிரப்பப்படுகையில் உள்பெட்டிகளுக்குள்ளும் அவ்வாறே 1–9 இலக்கங்கள் இரட்டைப் படாமல் வரவேண்டும். சில கட்டங்கள் ஏற்கனவே நிரப்பப்பட்டிருக்கும் தர்க்க ரீதியில் ஏனையவற்றை நிரப்ப வேண்டியதே வேலை. சுடோக்கு என்பது ஜப்பானியச் சொல். அதன் பொருள் 'தனி எண்' என்பதாகும். 1986 இல் ஜப்பானிய நிறுவனமான 'நிகோலி' இதனை அறிமுகப்படுத்தி வெற்றிகரமாகப் பரவலாக்கியது. 2005இல் இது உலக அளவில் பிரபல்யமானது.


செருத்தனைப்பதி அருள் மிகு ஸ்ரீ மகாமாரி அம்மன் திருக்கோயில்,
புளியங்கூடல், ஊர்காவற்றுறை
சப்தள ராஜகோபுர சக்தபுனராவர்த்தன
சுவர்ணபந்தன, அஸ்ட பந்தன பிரதிஸ்டா
திருமஞ்சன குடமுழுக்கு பெரும் சாந்தி விழா

மஹாகும்பாபிஷேகம்



யாழ்ப்பாணத் தீபகற்பத்தை அணித்தாயுள்ள தீவுகளில் சைவமும் தமிழும் தழைத்தோங்கும் தலைத் தீவான வேலணைத் தீவின் தலைநகரான ஊர்காவற்றுறையின் தென் கிழக்குத் திசையில் மருதமும் நெய்தலும் ஒன்று சேரும் கிராமம் புளியங்கூடல். விவசாயப் பெருங்குடி மக்களின் அயராத உழைப்பினால் செழிப்புற்று பல திருத்தலங்களைத் தன்னகத்தே கொண்ட கிராமத்தில் புண்ணிய பதியாம் செருத்தனைப் பதியில் கேட்ட வரம் அளிக்கும் கீர்த்தி தெய்வமாம் கத்திரூபமான சக்தியாம் ஸ்ரீ மகாமாரி அம்மனுக்குப் புதிய அதிசுந்தர கருங்கல் சிற்பங்களுடன் கூடிய துவிதள விமானக் கருவறை பிள்ளையார், முருகன் மற்றும் ஏனைய பரிவாரமூர்த்திகளுக்கும் திருமஞ்சன குடமுழுக்குப் பெரும் சாந்தி விழா (மஹாகும்பாபிஷேகம்)

தென்னிந்தியத் தவில் கலைஞர்களுடன் இணைந்து யாழ்.பிரபல தவில், நாதஸ்வரக் கலைஞர்களின் விசேட மேளக் கச்சேரி இடம்பெறும்

மஹா கும்பாபிஷேகம்:-
சித்திரை மாதம் 22 ஆம் நாள் (04.05.2012)
வெள்ளிக்கிழமை காலை 8.30 மணி தொடக்கம் 9.10 மணிவரை.
இணைய முகவரி:-
www.tamilosaii.com, www.mahamary.net
(Like us on facebook) www.facebook .com/ mahamary.

- து.சிவஞானச்செல்வம்.
பிள்ளைகள்
சி.செந்தூரன், சி.சந்திரன்,
செருத்தனைப்பதி
புளியங்கூடல்,
ஊர்காவற்றுறை. (17415) (2-6-9) ஆலய அறங்காவலர்.


## வழிகாட்டல் வகுப்பு

கைதடி, மே.2

அரச சேவையின் கனிஷ்ட ஊழியர்களை அரச முகாமை உதவியாளர் சேவையில் வகுப்பு III இற்கு தரம் உயர்த்துவதற்காக எதிர்வரும் ஒகஸ்ட் மாதம் நடத்தப்பட இருக்கும் மட்டுப்படுத்தப்பட்ட போட்டிப் பரீட்சையில் தோற்றுவோரின் நலன்கருதி விசேட வகுப்பொன்று யாழ். நாவலர் மகாவித்தியாலயத்தில் இம் மாதம் 05 ஆம் திகதி சனிக்கிழமை முற்பகல் 9 மணிக்கு ஆரம்பமாகவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

(வ-288)

## டெங்கு ஒழிப்பு சிரமதானம்

வரணி மகா வித்தியாலய வளாகத்தில் நேற்றுமுன்தினம் டெங்கு ஒழிப்பு சிரமதானப் பணிகள் இடம்பெற்றன.

அண்மையில் பெய்த மழையையடுத்து பாடசாலைச் சமூகத்தினரும் சுகாதார திணைக்களத்தினரும் வித்தியாலய அதிபர், ஆசிரியர் மாணவர்கள் இணைந்து இந்த சிரமதானப் பணிகளை மேற் கொண்டுள்ளனர்.

(வ-9)


காணி விற்பனைக்குண்டு

இராஜ வீதி, கோப்பாயில் 10 பரப்பு காணி விற்பனைக்கு உண்டு. உடன் தொடர்பு கொள்ளுங்கள்.
தொடர்பு:- 0777110427


## கண்ணீர் அஞ்சலி

யாழ் போதனா வைத்தியசாலையில் தாதிய உத்தியோகத்தராக கடமைபுரியும் திருமதி **விஜிதா பவானந்தன்** அவர்களின் பாச மிகு தாயார்

**சுப்பிரமணியம் சரஸ்வதி**

அவர்களின் மறைவையொட்டி துயருற்றிருக்கும் அவரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

தாதியர் நலன்புரிக் கூட்டுறவுச் சங்கம் - யாழ்ப்பாணம்.

(17649) (6,9,10)


ஓட்டோ விற்பனைக்கு

SP Q.U 3890 - பஜாஜ் - பேக்கறி ஒன்றின் பாவனையில் உள்ள பேக்கறி உற்பத்திப் பொருள்களை விற்பனை செய்யக்கூடிய முச்சக்கர வண்டி விற்பனைக்குண்டு.



தொடர்பு. 077 6733 621

களஞ்சியப் பொறுப்பாளர் (Store Keeper)

யாழ்ப்பாணம் Lanka Tiles Show Room இல் களஞ்சியப் பொறுப்பாளராக (Store Keeper) பணியாற்றுவதற்கு தகுதியும், அனுபவமும் வாய்ந்த 30 - 50 வயதிற்கு இடைப்பட்ட ஆண்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. விண்ணப்பிக்க விரும்புபவர்கள் தமது விண்ணப்பத்தினை பின்வரும் விலாசத்திற்கு 09.05.2012 இற்கு முன் அனுப்பி வைக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றார்கள்

Manager,
Lanka Tiles Show Room,
469, K.K.S. Road, Jaffna


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருட்டுக் கும்பல் சிக்கியது பொலிஸாரிடம்

கொழும்பு,மே 3

நாரம்மல நகரின் விற்பனை நிலையம் ஒன்றிலிருந்து ஒரு லட்சத்து 76,000 ரூபா பெறுமதி வாய்ந்த பொருள்களைத் திருடி தயாரிக்கப்பட்ட உழவு இயந்திரப் பெட்டியுடன் குழுவினர் நாரம்மல பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

நாரம்மல தனியார் நிறுவனம் ஒன்றில் வேலை புரிந்த மூவர் நீண்டகாலமாக இந்த நிறுவனத்தில் இரவுவேளையில் பொருள்களைத் திருடி வந்தமை தெரிய வந்துள்ளது.

இவ்வாறு திருடப்பட்ட பொருள்கள் மொரவலப்பிட்டிய பிரதேசத்தில் ஒரு தோட்டத்தில் சேகரிக்கப்பட்டே குறித்த உழவு இயந்திரப் பெட்டி தயாரிக்கப்பட்டுள்ளது.

தயாரிக்கப்பட்ட பெட்டியை வவுனியாவைச் சேர்ந்த நபர் ஒருவருக்கு விற்பனை செய்ய இருந்த நிலையிலேயே இவர்கள் பொலிஸாரின் வலையில் சிக்கியுள்ளனர்.

இவர்களைக் கைது செய்த பொலிஸார் இது குறித்த மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ச)



வடக்கு, கிழக்கு மாகாண சுற்றுலா அபிவிருத்தி தொடர்பில் இலங்கை கைத்தொழில் மற்றும் சுற்றுலா சம்மேளன தலைவர் ஏ.எம்.ஜௌபர், ஆசிய அபிவிருத்தி வங்கியின் இலங்கைப் பணிப்பாளர் திருமதி றீட்டா ஓ சுள்ளிவானை சந்தித்து கலந்துரையாடுகின்றார்.

# தமிழர் கல்வியை அழிக்கவே யாழ். பொது நூலகம் எரிப்பு

### யோகேஸ்வரன் எம்.பி. குற்றச்சாட்டு

எருவில்,மே 3

தமிழர்கள் கல்வியில் சிறந்து, உயர் பதவிகளை வகித்ததை பொறுக்காத சிங்கள அரசியல் தலைவர்கள், 1948 ஆம் ஆண்டுக்குப் பின் தமிழர்களில் கல்வி முன்னேற்றத்துக்கான காரணிகளை அழிப்பதில் கவனம் செலுத்தினர். அதனாலேயே யாழ்.பொதுநூலகத்தை எரித்தனர் என்று தமிழ் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் சீ.யோகேஸ்வரன் குற்றஞ் சாட்டியுள்ளார்.

களுவாஞ்சிக்குடி சமூக சீர்திருத்த மாணவர் நிலையத்தின் 10 ஆண்டு நிறைவு விழாவில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர்



இவ்வாறு தெரிவித்தார்.

இந்தநிகழ்வில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

இலங்கையை அந்நிய நாட்டவர் ஆண்டபோது கல்வியில் தமிழர்கள் உயர்நிலையில் இருந்தனர். அதுமட்டுமின்றி உயர் பதவிகளையும் அவர்களே வகித்தனர். அப்போதைய சட்ட சபையிலும் தமிழர்கள் முக்கிய பிரதிநிதிகளாகத் திகழ்ந்தனர்.

1815 ஆம் ஆண்டு கண்டி உடன்படிக்கையின் பின் 1915ஆம் ஆண்டு அதன் நூற்றாண்டு விழா கொண்டாடப்பட்ட வேளைகளில் சிங்கள மக்களுக்கும் முஸ்லிம் மக்களுக்கும் ஏற்பட்ட கலவரத்தைத் தீர்க்க இங்கிலாந்து சென்று ராணியின் உத்தரவை பெற்று வந்து இரு இனங்களிடையேயும் சமாதானத்தை ஏற்படுத்தியவர் சேர்.பொன்.இராமநாதன்.

இதேபோன்று அவரது சகோதரர் சேர்.பொன்.அருணாசலம் போன்றோரும் பதவிகளை வகித்த கல்விமான் ஆவார். ஆனால் இதனைப் பொறுக்காத சிங்களத் தலைமைகள் தமிழர்களின் கல்வியை அழிக்கும் நடவடிக்கையை மேற்கொண்டு வந்தனர்.

இதன் ஒரு பகுதிச் செயற்பாடே யாழ்ப்பாணத்தின் நூலகம் எரிக்கப்பட்டதாகும். எனவே எமது இனத்தின் எதிர்காலம் தங்கியிருப்பது இளைஞர்களின் கல்வி உயர்விலே ஆகும். இதில் கவனம் செலுத்த வேண்டியது தமிழ் உணர்வு படைத்த அனைவரதும் கடமையாக உள்ளது -என்றார். (ச-31)

### கோரிக்கை நிறைவேறாததால்

## அரச மருத்துவர்கள் பணிப் புறக்கணிப்பு

கொழும்பு,மே 3

போக்குவரத்துப் படியை அதிகரிக்க வேண்டும் என்ற தமது கோரிக்கையை நிறைவேற்ற அரசு தவறியதால் நாடளாவிய ரீதியில் வேலை நிறுத்தப் போராட்டத்தை மேற்கொள்ள அரச மருத்துவ அதிகாரிகள் தீர்மானித்துள்ளனர்.

அரச மருத்துவ அதிகாரிகள் சங்கத்தின் 60 கிளைகளைச் சேர்ந்த அங்கத்தவர்கள் கடந்த வார இறுதியில் நடைபெற்ற சங்கக் கூட்டத்தின் போது ஏகமனதாக இந்தத் தீர்மானம் மேற்கொள்ளப்பட்டதாக சங்கத்தின் தலைவர் டாக்டர் அநுருத்த பாதெனிய தெரிவித்தார்.

தமது சங்கத்தின் பிரதிநிதிகள் கடந்த ஜனவரி மாதம் ஜனாதிபதியைச் சந்தித்த போது, போக்குவரத்துப்படியை 15,000 ரூபாவிலிருந்து 29,000 ரூபாவாக அதிகரிப்பதாக உறுதியளிக்கப்பட்டதாகவும் ஆனால் அது இது வரை நிறைவேற்றப்படவில்லை என்று அவர் கூறினார்.

''அரசியல்வாதிகள் உட்பட அரச உத்தியோகத்தர்கள் பலர் அரச வாகனங்களையும் ஏனைய பல சலுகைகளையும் பெறுகின்றனர். நாம் அத்தகைய நன்மைகளைப் பெறுவதில்லை. அதனால் தான் இந்தப்படியை அதிகரிக்க வேண்டியுள்ளது'' என்று அவர் தெரிவித்தார்.

அரசமருத்துவர்கள் குறைந்தபட்ச மாதாந்தச் சம்பளமாக 28,000 ரூபாவைப் பெறுகின்றனர். ஆரம்பநிலை மருத்துவ அதிகாரிகள் அதிகபட்ச சம்பளமாக 56,000 ரூபாவைப் பெறுகின்றமை குறிப்பிடத்தக்கது. (ச)

## பொன்சேகா குறித்து அறிக்கை சமர்ப்பிக்க உத்தரவு

பிணை மனு விசாரணை முடிந்து தீர்ப்பு வழங்கப்படும் வரை சரத் பொன்சேகாவை தொடர்ந்தும் நவலோக வைத்தியசாலையில் தங்கியிருக்க அனுமதிப்பதா இல்லையா என்பது குறித்து எதிர்வரும் 9ஆம் திகதி நீதிமன்றிற்கு தெரியப்படுத்துமாறு உயர் நீதிமன்றம் சட்ட மா அதிபருக்கு உத்தரவிட்டுள்ளது.

பொன்சேகா தாக்கல் செய்துள்ள பிணை மனு நேற்று உயர் நீதிமன்றில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட போதே, பிரதம நீதியரசர் ஷிராணி பண்டாரநாயக்க உள்ளிட்ட மூன்று நீதியரசர்கள் குழு இந்த உத்தரவைப் பிறப்பித்துள்ளது.

சரத் பொன்சேகா தொடர்ந்தும் வைத்தியசாலையில் தங்கி சிகிச்சை பெற அனுமதிக்க வேண்டும் என்று நலின் லத்துவஹெட்டி கேட்டுக் கொண்டுள்ளார். எதிர் தரப்பு சட்டத்தரணியின் கோரிக்கை குறித்து ஆலோசனை பெறாமல் எதுவும் கூற முடியாது என்று அரச வழக்கறிஞர் தெரிவித்தார்.

அதன்படி இந்தக் கருத்துகளை பரிசீலித்த நீதியரசர் குழு எதிர்வரும் 9 ஆம் திகதிக்கு வழக்கை ஒத்தி வைத்துள்ளமை குறிப்பிடத்தக்கது. - (ச)

## கஞ்சாவுடன் மூவர் கைது

கொழும்பு,மே 3

சீதுவை - கொட்டுகொட பிரதேசத்தில் கஞ்சா போதைப் பொருள் வைத்திருந்த சந்தேகத்தின்பேரில் மூவர் கைது செய்யப்பட்டுள்ளதாக சீதுவை பொலிஸார் தெரிவித்தனர்.

நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை மாலை மேற்கொள்ளப்பட்ட சோதனை நடவடிக்கையின்போதே இவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர். கைதான இருவரிடமிருந்து தலா இரண்டரை கிலோ கிராம் கஞ்சா கைப்பற்றப்பட்டுள்ள தோடு மூன்றாவது நபரிடம் இருந்து 435 கிராம் கஞ்சா கைப்பற்றப்பட்டுள்ளதாகப் பொலிஸார் கூறுகின்றனர். (ச)

# வடக்கு, கிழக்கு இணைப்பின் மூலமே இறுதி அரசியல் தீர்வு

### வடக்கு கிழக்கு மாகாண அரச உத்தியோகத்தர் சங்கம் தீர்மானம்

எருவில், மே 3

வடக்கு, கிழக்கு இணைந்த தாயக பூமியை அடிப்படையாகக் கொண்டே இறுதியானதொரு அரசியல் தீர்வு எட்டப்பட வேண்டும். இலங்கை அரசுடன் இடம்பெறும் பேச்சுகளில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு இந்த விடயத்தை தொடர்ந்தும் வலியுறுத்த வேண்டும் என்று வட கிழக்கு மாகாண அரச உத்தியோகத்தர் சங்கம் தெரிவித்துள்ளது.

போர் முடிந்த நிலையிலும் சிறைச்சாலைகளில் தடுத்து வைக்கப்பட்டிருக்கும் தமிழ் அரசியல் கைதிகள் அனைவரையும் அரசு பொதுமன்னிப்பு வழங்கி விடுதலை செய்யப்படவேண்டும் என்ற விடயத்தை வலியுறுத்தியும் அந்த சங்கம் தீர்மானம் நிறைவேற்றியுள்ளது.

வடக்கு,கிழக்கு மாகாண அரச உத்தியோகத்தர் சங்கத்தினால் திருகோணமலை நகர சபை மண்டபத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற மே தினக் கூட்டத்தின்போது வெளியிடப்பட்ட தீர்மானங்கள் குறித்து அந்தச் சங்கம் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

வடக்கு, கிழக்கு மாகாண அரச உத்தியோகத்தர் சங்கமானது தொழிலாளர் தினமான மே தினத்தை 2010 ஆம் ஆண்டு யாழ்ப்பாணத்திலும் 2 ஆவது மே தினத்தை 2011 ஆம் ஆண்டில் மட்டக்களப்பிலும், 3ஆவது தினத்தை நேற்று முன்தினம் திருகோணமலையிலும் நடத்துவதை இட்டு பெருமை அடைகின்றோம்.

வடக்கு, கிழக்கு மாகாணங்களில் வாழும், பணிபுரியும் அனைத்து தொழிலாளர்களும் ஏனைய மாகாணங்களில் கடமை புரிவோர்களை விட கடந்த கால போரால் மிகவும் பாதிக்கப்பட்டவர்கள். இவர்கள் குறித்து அதிக கவனம் செலுத்தி அனைத்து சலுகைகளையும் வேறுபாடின்றி வழங்க ஆவன செய்யப்படப் வேண்டும்.

கிழக்கு மாகாணத்தை சேர்ந்த பல அரச ஊழியர்கள் வட மாகாணத்துக்கு சம்மதமின்றி இடமாற்றம் பெற்றுள்ளார்கள். அவர்கள் அனைவரையும் கிழக்கு மாகாணத்தில் திரும்பவும் கடமையாற்றுவதற்கான ஒழுங்குகள் செய்யப்பட வேண்டும்.

போரினால் பாதிக்கப்பட்ட அரச ஊழியர்களுக்கு மாதாந்தப் படிகள் வழங்க ஆவன செய்ய வேண்டும்.

வடக்கு, கிழக்கிலுள்ள வேலையற்ற பட்டதாரிகள் அனைவரையும் அரசியல் கட்சிகளில் இணையுமாறு கூறும் கட்சிகளை வன்மையாக கண்டிப்பதுடன் இந்தப் பட்டதாரிகள் அனைவருக்கும் பட்ட மூப்பு அடிப்படையிலும் அவர்களின் தராதரத்திற்கு அமைவாகவும் உடனடியாக வேலை வாய்ப்பு வழங்கு மாறு அரசை கோருகிறோம்.

வடக்கு, கிழக்கில் போர் முடிந்த போதும் இளைஞர்கள் யுவதிகளைக் கைது செய்தல், தடுத்து வைத்தல் என்பன தொடர்ந்து கொண்டே இருக்கின்றன. இது இளைஞர், யுவதிகள் மனங்களில் அச்ச உணர்வை ஏற்படுத்தியதுடன் இயல்பு வாழ்க்கைக்கும் இடையூறாக அமைகிறது. இந்த விடயத்தை அரசு கவனத்தில் எடுப்பதுடன் இனிமேல் இவ்வாறான விடயங்கள் இடம் பெறாமல் இருக்க அரசு உத்தரவாதம் வழங்க வேண்டும்.

வடக்கு, கிழக்கில் சிவில் நிர்வாகத்தில் இராணுவ தலையீடுகள் இல்லாமல் இருக்க அரசு நடவடிக்கை எடுப்பதுடன் இராணுவ முகாங்களை அகற்றவும் ஆவன செய்ய வேண்டும்.

ஜெனிவா தீர்மானத்தை அரசு நடைமுறைப் படுத்துவதுடன் வடக்கு, கிழக்கு மக்களுக்கான ஏற்றுக் கொள்ளக் கூடிய அரசியல் தீர்வை காலம் கடத்தாமல் வழங்குவதற்குரிய செயற்திட்டங்களை செய்கை மூலம் காட்ட வேண்டும்.

எதிர்வரும் காலங்களில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு வடக்கு, கிழக்கில் இடம்பெறும் அனைத்து தேர்தல்களிலும் பெண்களையும், இளைஞர்களையும் இணைத்து கொள்வதை உறுதிப்படுத்த வேண்டும்.

மேற்படி 10 தீர்மானங்களையும் 2012 திருகோணமலையில் இடம்பெற்ற வடக்கு, கிழக்கில் இயங்கும் ஒரே ஒரு இணைந்த தொழில் சங்கம் என்ற ரீதியில் உரிமையுடனும் உறுதியுடனும் சம்மத்தப்பட்ட அனைத்து தரப்பினர்களின் கவனத்திற்கு சமர்ப்பிக்கின்றோம்- என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.(ச-31)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**Dr. Pimple**

Care

முகப்பருக்கள் சம்பந்தமான அனைத்து பிரச்சினைகளுக்கும் நிரந்தர தீர்வு...

மருத்துவ ஆலோசனை

எதிர்வரும் 3ம், 4ம் திகதிகளில் யாழ். கிளையிலும் 6ம், 7ம் திகதிகளில் வவுனியா கிளையிலும் நடைபெற உள்ளது.

முற்பதிவுகளுக்கு : 021 4923416

Jaffna - No. 26, Browns Road. Tel: 021-4923416, 021-2220288
Colombo - No. 21, Frazer Avenue, Dehiwela, 011-4874654, 011-4376078
Colombo - No. 190, George R.De Silva Mawatha Colombo 13, 011-4343270
Vavuniya - No. 162/5, Jaffna Road, Vavuniya, 024-4925807, 024-4924940

# கண்ணீர் அஞ்சலி



## வேலுப்பிள்ளை கந்தையா

(முன்னாள் அதிபர்- யா/ மகாஜனக் கல்லூரி, தெல்லிப்பழை)

எமது கல்லூரி ஆசிரியை திருமதி அகிலா கிருபாரட்ணம் அவர்களின் தந்தை வேலுப்பிள்ளை கந்தையா அவர்கள் நேற்று (02.05.2012) காலமானார். இவரின் பிரிவால் துயருற்றிருக்கும் அவரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்கின்றோம்.

ஆசிரியர் கழகம்
யா/ மகாஜனக் கல்லூரி தெல்லிப்பழை.

# கண்ணீர் அஞ்சலி



யாழ். மாவட்டச் செயலகத்தின் உதவித் திட்டமிடல் பணிப்பாளராகக் கடமை யாற்றும் **எஸ். ஆர். சர்வேந்திரன்** அவர்களின் அன்புத் தந்தை

## அமரர் சிதம்பரப்பிள்ளை இராமநாதர்

(இளைப்பாறிய அதிபர்)

கடந்த 30.04.2012 ஆம் திகதி இறைபதம் அடைந்ததனையிட்டு எமது கண்ணீர் அஞ்சலியினைத் தெரிவித்துக்கொள்வதுடன், அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திப்ப தோடு, அவரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங் களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

யாழ். மாவட்டச் செயலக நலன்புரிக்கழகம்.

# மரண அறிவித்தல்



## வேலுப்பிள்ளை கந்தையா

(இளைப்பாறிய அதிபர்- யா/ மகாஜனக் கல்லூரி, தெல்லிப்பழை)

தையிட்டிப்புலம் - தெல்லிப்பழையைப் பிறப்பிடமாகவும், உடையார் வளவு, சுன்னாகத்தை வதிவிடமாகவும் கொண்ட வேலுப்பிள்ளை கந்தையா நேற்று (02.05.2012) புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வேலுப்பிள்ளை - சாணப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான சின்னத்தம்பி, சின்னத்தங்கம், மாப்பாணர் மற்றும் சுப்பிரமணியம் (லண்டன்), காலஞ் சென்ற சேதுப்பிள்ளை மற்றும் செல்லமுத்து, காலஞ்சென்ற செல்லத்துரை ஆகியோரின் அன்புச் சகோதரனும், அம்பலவாணர் - ஆசைப்பிள்ளை தம்பதியரின் அன்பு மருமகனும், காலஞ்சென்ற மனோன்மணி அம்மை யாரின் அன்புக் கணவரும், காலஞ்சென்ற வேலாயுதகுமாரர் மற்றும் அகிலவல்லி (ஆசிரியர்- யா/ மகாஜனக்கல்லூரி, தெல்லிப்பழை), கலாவல்லி (ஜேர்மனி), காலஞ்சென்ற உமாவல்லி மற்றும் ஞானவல்லி, யோகவல்லி (ஆசிரியை- யா/யூனியன் கல்லூரி, தெல்லிப்பழை) ஆகியோரின் பாசமிகு தந்தையும், செ.கிருபாரட்ணம் (ஆயுள்வேத வைத்தியர்), சிவராஜசிங்கம் (ஜேர்மனி), சிவராஜா (சுவிஸ்லாந்து) ஆகியோரின் அன்பு மாமனும் துரைரட்ணம் (துவாரகன்), தேவரட்ணம் (தேசிகன்), கோபிரட்ணம் (கோபிகன்), சதீஸ் ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (03.05.2012) வியாழக்கிழமை அவரின் இல்லத்தில் நடைபெற்று முற்பகல் 9.30 மணியளவில் தகனக் கிரியைக்காக பூதவுடல் கொத்தியாலடி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

உடையார் வளவு,
சுன்னாகம்.

தகவல்:
குடும்பத்தினர்

## வான் விற்பனைக்கு

டொல்பின் வான் விற்பனைக்குண்டு. சகல வளத்துடன் இருக்கின்றது.
தொடர்புகளுக்கு : 077 6592012, 077 8568656

## வீடு வாடகைக்குத்தேவை

பருத்தித்துறை நகரப்பகுதிக்கு அருகில் விரும்பத்தக்கது.
தொடர்பு: 077 5151761

## கண்டெடுக்கப்பட்டுள்ளது

சிறுதொகை பணம் நீராவியடியில் கண்டெடுக்கப்பட்டுள்ளது. தொலைத்தவர் தொடர்பு கொள்ளவும்.
தொடர்புகளுக்கு: 075 5511 615

## வீடு விற்பனைக்கு

யாழ். நாவாந்துறை நாவலர் வீதியில் தபால் கந்தோர் அருகில் உள்ள ஒழுங்கையில் 1½ பரப்பு காணியுடன் 3 அறைகள் கொண்ட நல்ல தண்ணீர் கிணறு உட்பட உள்ள வீடு விற்பனைக்குண்டு.
தொடர்பு. 077 6623 118, 077 3117 809

## விற்பனைக்கு

அலுமினிய பிற்றிங் (சகல அளவுகளிலும்), LG A/C (18000) மற்றும் கையடக்கத் தொலைபேசிகளுக்கான அனைத்து உதிரிப்பாகங்களும் உடன் விற்பனைக்கு.
தொடர்பு: 077 6042808,
கிளிநொச்சி

## English/ Tamil medium personal Classes

Chemistry G.C.E (A.L)
and Maths Gr. 6 - Gr.11 Homes visited.
Group Classes may also be arranged
Contact No. 077 199 1275

## தேவை

பாடசாலைப் பொருள்கள், எழுதுகருவிகள் விற்பனை நிலையத்திற்கு வேலையாள் தேவை.
ராஜ் கொம்பியூட்டர் பிறிண்டிங் சென்றர்,
இல. 10, இராமநாதன் வீதி, பரமேஸ்வராச்சந்தி,
திருநெல்வேலி
தொடர்பு. 021 222 0231

## தவறிவிட்டது

திரவியநாயகம் றனீஸ்வரன் நாவற்குழி தெற்கு, கைதடி என்பவருடைய தேசிய அடையாள அட்டை (872873155V) உடுவில் சந்திக்கும், மருதனார் மடத்திற்கும் இடையில் 14.04.2012 தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தயவு செய்து உடன் தொடர்பு கொள்ளவும்.

சபாபதிப்பிள்ளை வீதி,
சுன்னாகம் தெற்கு, சுன்னாகம்

தொடர்பு :
077 2840893

## தவறிவிட்டது

தம்பாட்டி ஊர்காவற்றுறையைச் சேர்ந்த செல்வக்குமார் ஜசோக்குமார் என்பவருடைய தேசிய அடையாள அட்டை (862273729 V) சாரதி அனுமதிப் பத்திரம் ATM Card என்பன சாவகச்சேரிக்கும் கிளாலிக்கும் இடையில் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் தயவுசெய்து உடன் தொடர்புகொள்ளவும்.
தொடர்பு. 077 1864 113

## வீடு வாடகைக்கு

நல்லூருக்கு அருகில் 6 அறைகள் கொண்ட மாடிவீடு வாடகைக்கு விடப்படும் (வெளிநாட்டு நிறுவனங்களுக்கு மட்டும்)
தொடர்பு : 075 6743165

## J.C.B வாடகைக்கு (பைக்கோ)



* போக்குவரத்துக்கூலி அறவிடப்படமாட்டாது
* குறைந்த கட்டணத்தில் துரித சேவைக்கு இன்றே நாடுங்கள்

இல. 207, புதிய எரிபொருள் நிரப்பு நிலையம்,
சுன்னாகம்
தொடர்புகளுக்கு:
077 7712482

## வீடு வாடகைக்கு

A - 9 வீதி, மாங்குளத்தில் (பனிக்கன் குளம்) ஐந்து அறைகள், சமையல் அறை, குளியல் அறை, இரு மலகூடம், மேல் மாடியில் காற்றோட்ட வசதியான அறை, மின்சார, நீர் விநியோக வசதிகளுடன், மாபிள் பதிக்கப்பட்டதும், பூந்தோட்டம், வீட்டுத் தோட்டம் உள்ளிட்ட விசாலமான காணியுடன் கூடிய வீடு வாடகைக்கு விடப்படும். விடுதிக்காகவும், அரச, அரசசார்பற்ற நிறுவனங்களுக்கும் [illegible]
தொடர்பு : 077 [illegible], 077 2127791,
077 3544367.

Care



தலை முடி உதிர்தல், பொடுகு, இளநரை, POSORIASIS, புளுவெட்டு போன்ற பிரச்சினைகளுக்கு இம் மாதத்திற்குரிய மருத்துவ ஆலோசனை நடைபெறவுள்ளது.

யாழ்ப்பாணம் : 3ம், 4ம் திகதிகளில்
வவுனியா : 6ம் , 7ம் திகதிகளில் நடைபெறவுள்ளது.

முற்பதிவுகளுக்கு : 021 4923416

Jaffna - No. 26, Browns Road. Tel: 021-4923416, 021-2220288
Colombo - No. 21, Frazer Avenue, Dehiwela, 011-4874654, 011-4376078
Colombo - No. 190, George R.De Silva Mawatha Colombo 13, 011-4343270
Vavuniya - No. 162/5, Jaffna Road, Vavuniya, 024-4925807, 024-4924940

# 31 ஆம் நாள் நினைவஞ்சலி



எமது கல்வியியற் கல்லூரி விரிவுரை யாளர் மா. பிரபாகரன் அவர்களின் பாசமிகு தந்தை

## நாகலிங்கம் மாசிலாமணி

அவர்களின் 31 ஆம் நாள் நினைவான இன்று அவரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்

யாழ்ப்பாண தேசிய கல்வியியற்கல்லூரி,
கோப்பாய்

கல்வியியற்கல்லூரி சமூகம்

# கண்ணீர் அஞ்சலி



## வேலுப்பிள்ளை கந்தையா

(முன்னாள் அதிபர்- யா/ மகாஜனக் கல்லூரி, தெல்லிப்பழை)

வேலுப்பிள்ளை கந்தையா அவர்கள் நேற்று (02.05.2012) புதன்கிழமை காலமானார்.
அன்னார் மகாஜனக் கல்லூரியில் 30 வருடங்கள் ஆசிரியராகவும், 01.08.1984 ஆம் ஆண்டு தொடக்கம் 03.12.1985 ஆம் ஆண்டு வரை அதிபராகவும் சேவையாற்றியவர். அத்துடன் இவர் இந்தப் பாடசாலையின் புகழ் பூத்த பழைய மாணவனுமாவார்.
முன்னாள் அதிபர் அவர்களின் பிரிவால் துயருற்றிருக்கும் அவரது குடும்பத்தினருக்கு எங்கள் ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் மகாஜனனின் ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்கின்றோம்.
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!!

அதிபர், பிரதி அதிபர், இணைப் பிரதி அதிபர், உப அதிபர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள், கல்விசாரா ஊழியர்கள்.

யா/ மகாஜனக் கல்லூரி,
தெல்லிப்பழை.

# மரண அறிவித்தல்

## கைலாசநாதக் குருக்கள் சுப்பிரமணியம்



கல்வளவு, கரணவாய் குருக்கள் பகுதியைப் பிறப்பிடமாகவும், யாக்கரு வீதி, தெடுத்தனை கரவெட்டி யை வசிப்பிடமாகவும் கொண்ட, கைலாச நாதக் குருக்கள் சுப்பிரமணியம் (இளைப்பாறிய நிர்வாக உத்தியோகத்தர், கச்சேரி, வவுனியா). நேற்று (02.05.2012) புதன்கிழமை காலை 7.00 மணியளவில் இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற கைலாசநாதக்குருக்கள் - அமுதவல்லிஅம்மா தம்பதியரின் அன்புமகனும் காலஞ்சென்றவர்களான திருஞான சம்பந்தக்குருக்கள், செவ்வந்தி நாதர். நமசிவாயக் குருக்கள், சிவபாக்கியம் ஆகியோரின் பாசமிகு தம்பியும் சிவக்கொழுந்து (இளைப்பாறிய திட்டமிடல் அதிகாரி) அவர்களின் அன்புக்கணவரும், சின்னம்மா, நமசிவாயம், செல்லையா ஆகியோரின் மைத்துனரும், வாசுகி, றங்கா ஆகியோரின் பாசமிகு தகப்பனும் மனோகரன், கேசவ நாதன் ஆகியோரின் மாமனும், அனங்கஜன், அட்சறா ஆகியோரின் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் கரவெட்டி கிழவிதோட்டத்திலுள்ள அவரது இல்லத்தில் இடம்பெற்று இன்று (03.05.2012) மு.ப. 10.00 மணியளவில் தகனத்துக்காக கரவெட்டி சோனப்பு மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்

"இறையகம்"
யாக்கரு வீதி, கரவெட்டி கிழக்கு.

தகவல்:
குடும்பத்தினர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




ஐந்து மாவட்டங்களிலும் ஓரளவான மேகக் கூட்டத்துடன் கூடிய காலநிலை நிலவும்.

## புனருத்தாரண திருப்பணி

நவாலி வடக்கு - தேத்தாமரத்தடி வைரவர் ஆலய புனருத்தாரண திருப்பணி இடம்பெறவுள்ளது.

கர்ப்பக்கிரகம் முதல் தரிசன மண்டபம் புனரமைப்பு, சுற்றுமதில் அமைப்பு, மடைப்பள்ளி மற்றும் மணிக்கோபுரம் என்பன அமைக்கப் படவுள்ளன. இந்தப் புனரமைப்பு பணிக்காக அடியவர்கள் இந்த மாத இறுதிப் பகுதியில் இருந்து ஆலய அபிவிருத்திப் பணிக்கு உதவலாம் என ஆலய பரிபாலன சபையினர் அறிவித்துள்ளனர். (ந)



கோண்டாவில் பொது நூலகத்தின் ஏற்பாட்டில் நூலக வலுவூட்டல் நிகழ்வின் 11ஆவது நிகழ்வாக உலகப் புவி தினம் கடந்த வெள்ளிக்கிழமை நடைபெற்றது. கோண்டாவில் பொது நூலகர் செல்வி எம்.அனிதா தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் சூழலியல் தொடர்பாக பொதுமக்கள் எதிர் நோக்குகின்ற பிரச்சினைகள் தொடர்பான கருத்துரைகளும் ஆலோசனைகளும் வழங்கப்பட்டன. (ந-14)

# இலங்கைக்குத் திரும்புவோர் சித்திரவதை செய்யப்படுவதற்கான ஆதாரங்கள் இல்லை

## பிரிட்டிஷ் அரசு தெரிவிப்பு

பிரிட்டனிலிருந்து இலங்கைக்குத் திரும்பும் குடியேற்றவாசிகளும் அகதிகளும் சித்திரவதை செய்யப்படுவதற்கான ஆதாரங்கள் இல்லையெனப் பிரிட்டிஷ் அரசு அறிக்கையொன்றில் தெரிவித்துள்ளது.

இலங்கைக்குத் திரும்பும் குடியேற்றவாசிகளும் அகதிகளும் சித்திரவதை செய்யப்படுகின்றனர் என்று குற்றச்சாட்டுகள் இருந்தன. பிரிட்டனிலிருந்து திரும்புபவர்கள் தொடர்பான இத்தகைய அனைத்து குற்றச்சாட்டுகள் தொடர்பாக பிரிட்டிஷ் தூதரகம் விசாரித்தது. இதில் இத்தகைய குற்றசாட்டுகளுக்கான ஆதாரங்கள் எவையும் காணப்படவில்லை என்று 2011 ஆம் ஆண்டுக்கான வருடாந்த மனித உரிமைகள் அறிக்கையில் பிரிட்டிஷ் வெளிவிவகார மற்றும் பொதுநலவாய அலுவலகம் தெரிவித்துள்ளது. (ந)

> இலங்கைக்குத் திரும்பும் குடியேற்றவாசிகளும் அகதிகளும் சித்திரவதை செய்யப்படுகின்றனர் என்று குற்றச்சாட்டுகள் இருந்தன.

## நாம் உலகில் சமாதானத்தை எவ்வாறு நிலைநாட்டலாம்?

கீழே கூறப்படும் வாசகங்களைப் புரிந்து கொண்டால் உலகில் அமைதியை நிலைநாட்டலாம்.

உள்ளத்தில் நேர்மை இருப்பின் குணத்தில் அழகு இருக்கும், குணத்தில் அழகு இருப்பின் வீட்டில் இசைவாக்கம் இருக்கும், வீட்டில் இசைவாக்கமிருப்பின் நாட்டில் ஒழுங்கு இருக்கும், நாட்டில் ஒழுங்கு இருப்பின் உலகில் சமாதானம் நிலவும், உலக சமாதானத்துக்கு வழியாகும் சங்கிலியின் முதற் கோர்வை நேர்மை அல்லது தர்மம் ஆகும்.

சரியான செயற்பாட்டுக்கு மறுபெயர் தர்மம். ஆனால் சரியான செயற்பாட்டுக்கு முதலில் தேவைப்படுவது சரியான எண்ணமாகும்.

உலகின் சமாதானம் தனிப்பட்டவரது சரியான எண்ணத்தில் ஆரம்பித்துப் படிப்படியாக அகன்று பரந்து குடும்பத்திலிருந்து கிராமத்துக்கும், அங்கிருந்து நாடு மற்றும் உலகம் அனைத்துக்கும் விரிவடைகிறது என்பதே இதன் பொருள்.

நன்றி:
தெய்வீகம் மலரும் பொழுது



சாயி சிந்தனை

# விமானத்தில் அட்டகாசம் மூவர் கைது

மதுபோதையில் விமானத்தினுள் பயணிகளுக்கு இடையூறு செய்ததுடன் விமான பணியாளர்களையும் தாக்கிய நபர் ஒருவரை விமான நிலையப் பொலிஸார் கைது செய்தனர்.

கடந்த 29ஆம் திகதி இரவு 11.10 மணியளவில் டுபாயிலிருந்து இலங்கைக்கு புறப்படவிருந்த மிஹின் லங்கா விமானத்தினுள் மது போதையிலிருந்த நபர் ஒருவர் மிகவும் மோசமாக பயணிகளுக்கு இடையூறு செய்தவாறு இருந்துள்ளார். விமானப் பணியாளர்கள் அவரை அமைதியாக அமர்ந்திருக்குமாறு கூறியும் அதைச் செவிமடுக்காமல் மீண்டும் மீண்டும் குழப்பம் செய்துள்ளார். பணியாளர்களுக்கும் தொந்தரவு கொடுத்துவந்தார்.

30 ஆம் திகதி அதிகாலை 5.08 மணியளவில் விமானம் கட்டுநாயக்க விமான நிலையத்தில் தரையிறங்க ஆயத்தமான போது குறித்த நபர் மீண்டும் விமானத்தின் பிரதானபணிப்பெண் மீதும் மற்றுமொரு பணியாளர் மீதும் தாக்குதல் நடத்தியுள்ளார்.

இதனையடுத்து விமானம் தரையிறங்கியதும் சந்தேக நபர் கட்டுநாயக்க விமான நிலைய பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டார். பொலிஸார் அவரைக் கைது செய்து புதுக்கடை மாவட்ட நீதிமன்றத்தில் முன்னிலைப்பபடுத்தினர். கடவத்தை பகுதியைச் சேர்ந்த இந்த நபர் பிணையில் செல்ல அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இதேவேளை,பாங்கொங்கிலிருந்து கொழும்பு நோக்கி வந்து கொண்டிருந்த விமானத்தில் மது போதையில் ஒழுங்கீனமாக நடந்து கொண்ட குற்றச்சாட்டின் பேரில் மாலைதீவுநபர்கள் இருவரையும் கட்டுநாயக்கப் பொலிஸார்கைது செய்துள்ளனர். (ந)


# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம்
14.01.1938

மறைவு
15.05.2011

அமரர் மூத்ததம்பி பொன்னம்பலம்

திதி:- 03.05.2012

இல்லறத்தில் எனை இணைத்தே
இனிய கணவனாய் இனிய புதல்வரைப்
பெற்றே தந்தையானாய்
ஈராறு திங்கள் சென்றும் உன்முகம் காணோம்
இம்மையில் விளக்கேற்றி எவ்வுலகம் நீர் சென்றீர்!

இல.7, நாவலர் வீதி,
முழங்காவில், கிளிநொச்சி.

என்றும் நினைவுகளுடன்,
மனைவி, பிள்ளைகள்.

(17595)

# 31 ஆம் நாள் நினைவஞ்சலி



எமது சிரேஷ்ட ஆங்கில
விரிவுரையாளர்
மா.பிரபாகரன் அவர்களின்
அன்புத் தந்தை

அமரர் நாகலிங்கம் மாசிலாமணி

அவர்களின் 31 ஆம் நாள் நினைவு தினத்தில் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

யாழ்.தேசிய கல்வியியற் கல்லூரி,
கோப்பாய். (17622) (2-6-9)

1 ஆம், 2 ஆம் வருட ஆசிரிய
மாணவர்கள் கலைமாணி - ஆங்கிலம்

# எட்டாம் ஆண்டு நினைவலைகளில்



| மலர்ந்த மங்கள நாள் | உதிர்ந்த இருள் நாள் |
|---|---|
| 20 | 03 |
| ★ | ★ |
| 08 | 05 |
| ★ | ★ |
| 1970 | 2004 |

திதி : சதுர்த்தசி (05.05.2012)

அமரர்
தில்லைநாதன் கெங்காதரன்
(உரிமையாளர் : தரன் மரக்காலை, கொக்குவில்)

ஓடம் புரளப்போவதறியாமல் உம்மோடு
கைவீசிக்களித்திருந்தோம்
கணப்பொழுதும் எம்மைப் பிரியாய் என்று
எண்ணி கனவுலகில் வாழ்ந்திருந்தோம்
நினைவுகளை எம் மனதில் புதையவிட்டு நிஜங்களை
பொய்யாக்கி நீ போய் எட்டு ஆண்டுகள் போனாலும்
முகாரிகளினாலும் பாட முடியாத உறைபனியின் முகடுகளிலும்
கரையாத எம் வலியின் உணர்வுகள்
சொல்லடுக்கி சொல்லிக் கொண்டே இருக்கக்கூடிய
எம் துயரமதனை இமையோரம் எட்டிப்பார்க்கும்
உவர் நீரின் துணைகொண்டு.
அனுதினமும் நிகழ்கால வலிகளாக போக்குகின்றோம்

[illegible]லேன்,
கொக்குவில் கிழக்கு, கொக்குவில்

உம் நினைவுகளுடன் வாழும்:
குடும்பத்தினர்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆண்களின் கல்வித் தரம் வீழ்ச்சியடைந்தமைக்கான காரணம் என்ன?




அண்மையில் நடைபெற்ற ஜி.சீ.ஈ. (சா/த )பரீட்சைப் பெறுபேறுகளின்படி சித்தியடைந்தவீதத்தில் ஆண்களைவிடப் பெண்களே உயர்வாகக் காணப்படுகின்றனர். ஆண்களின் கல்வித் தரம் வீழ்ச்சி அடைவதற்குப் பல காரணங்களைக் கூறலாம்.

இன்றைய சமுதாயத்தில் கல்வி கற்றும் ஆண்கள் சிறு வயதிலே காதல் என்னும் போதையில் விழுவதால்தான் இவர்கள் கல்வியைக் கற்க மறக்கின்றார்கள். அத்தோடு இவர்கள் தங்கள் வயதைவிடக் கூடிய வயது ஆண்களோடு சேர்ந்து தெருவில் நின்று பெண்களுக்கு சேட்டை விடுதல், மது அருந்துதல், புகைப் பிடித்தல் போன்றவற்றுக்கு அடிமையாகிக் கொண்டு செல்கின்றனர்.

''வாழ்க்கையின் அடித்தளம் கல்வி'' என்பதை உணராத ஆண்கள் தமது கல்வியை வெறுத்துச் சிறு சந்தோஷத்துக்காக திரிகின்றனர். சிறுவர்கள் வீதிகளில் தொலைபேசியில் பாடல்களைக் கேட்டுக் கொண்டும் தொலைபேசியில் கதைத்துக் கொண்டும் பொழுதைக் கழிக்கின்றனர். அதுமட்டுமல்ல கணினியில் பேஸ்புக் பார்த்தல் போன்ற பல செயற்பாடுகளாலும் ஆண்கள் தமது கல்வியை இழந்து கொண்டு செல்கின்றனர்.

ஆனால் பெண்கள் இவ்வாறு தங்கள் வாழ்க்கையை வீண் செய்யாமல் தமது வாழ்க்கைசிறப்பாகக்கொண்டு செல்வதற்குக் கற்கின்றனர். பாடசாலைகளிலும் சரி தனியார் கல்வி நிறுவனங்களிலும் சரி பெண்களே அதிகளவு கல்வி கற்று முன்னேறிக் கொண்டு செல்கின்றனர்.

இந்த நிலைமை தொடர்ந்தால் கணவன் வீட்டு வேலை செய்ய வேண்டிய நிலைமை உருவாகும். செய்ய போகப் போகிறார்கள். பெண்கள்தான் காசு சம்பாதிக்கப் போகிறார்கள்.

''இளமையில் கல்வி சிலையில் எழுத்து'' என்பதனை உணராத ஆண்கள் தமது வாழ்க்கையை வீண் செய்யப் போகிறார்கள். இந்த நவீன காலத்தில் கல்வி கற்றவருக்கே சிறப்பு என்பதை எல்லா ஆண்களும் உணர்ந்து விட கல்வியை ஆண்களும் சிறப்பாக முன்னெடுத்து சமுதாயத்தைக் கட்டி எழுப்ப வேண்டும்.

*சி.தர்சிகா,*
யா/உடுப்பிட்டி அ.மி.க.

## இயற்கை வாழ்வு

அன்புக்கோ இருவர் வேண்டும்
அழுகைக்கோ ஒருவர் போதும்
துன்பத்தைத் தனிமையாக
சுவைப்பது போல் வாழ்வில்
இன்பத்தைச் சுவைப்பதில்லை
இயற்கை வாழ்வில்....

பாசத்தின் முடிவு துன்பம்
பயந்தவன் முடிவு ஈனம்
மோசத்தின் முடிவு தோல்வி
முயற்சியின் முடிவு வெற்றி
நாசத்தின் முடிவு நன்மை
நரகத்தின் முடிவு சொர்க்கம்
ஆசையின் முடிவு ஏக்கம்
அழுகையின் முடிவு ஞானம்
இயற்கை வாழ்வில்....

கண்ணீர்விட்டழுதால் நெஞ்சில்
கவலைகள் தீரும்; கொஞ்சம்
தண்ணீர் விட்டாலும் காய்ந்த
பூங்கொடி தழைத்தல் போல்
வெண்ணீலமான கண்ணிலே
விழுகின்ற அருவியோடு
உள்ளீரம் வெளியில் வந்து
உள்ளத்தின் மென்மை காட்டும்
இயற்கை வாழ்வில்.....

*காவேரி,*
*மானிப்பாய்.*



## 3 எழுத்துச் சொல்

அம்மா என்னும் மூன்றெழுத்தை மதித்திடுவோம்
பள்ளி என்னும் மூன்றெழுத்தை அடைந்திடுவோம்
ஆசான் என்னும் மூன்றெழுத்தை மதித்திடுவோம்
கல்வி என்னும் மூன்றெழுத்தைப் பெற்றிடுவோம்

மனம் என்னும் மூன்றெழுத்தைக் கவனமாய்
வைத்திடுவோம்
கோபம் என்னும் மூன்றெழுத்தைத்
தவிர்த்திடுவோம்
அமைதி என்னும் மூன்றெழுத்தை
கடைப்பிடித்திடுவோம்
தனிமை என்னும் மூன்றெழுத்தைத்
தவிர்த்திடுவோம்

காதல் என்னும் மூன்றெழுத்தை விட்டுவிடுவோம்
பதவி என்னும் மூன்றெழுத்தைப் பெற்றிடுவோம்
உலகு என்னும் மூன்றெழுத்தில் நற்பிரஜையாக
வாழ்ந்திடுவோம்
வாழ்வு என்னும் மூன்றெழுத்தைத் தொடங்கிடுவோம்

அயத்திகா இராசதுரை, தரம்- 10 ஏ,
தொண்டைமானாறு, வீரகத்திப் பிள்ளை மகா வித்தி.

# தோல்வியையும் நேசியுங்கள்



வாழ்க்கை என்பது ஒரு விளையாட்டு. அதில் வெல்வதோ தோற்பதோ என்பது நம் கையில்தான். வெற்றி என்றவுடன் அனைவருமே விரும்பி ஏற்பார்கள். ஆனால் தோல்வி என்றவுடன் அதைத் தூக்கி வீசிவிட்டு வாழ்க்கையே பறிபோனவர்கள் போல் காணப்படுவார்கள்.

தோல்வியைத் தோல்வியாக நினைக்கும்போது நிஜமாகவே நாம் தோற்றுப் போகிறோம். தோல்விதான் வெற்றியின் முதல்படி என்பதை முதலில் புரிந்துகொள்ள வேண்டும். இயலாமை என்னும் நோய் நம்மை வாட்டும்போதே நாம் தோற்றவராகிறோம். எனவே இயலாமை என்னும் இருளை முற்றாக அகற்றி முயற்சி என்னும் விளக்கை நம் மனதில் ஏற்ற வேண்டும்.அந்த விளக்கு ஒளி வீசும் ஒவ்வொரு நிமிடமும் நாம் வெற்றியாளராக மாறிக் கொண்டிருப்போம்.

உங்களுக்கு உங்கள் உறவினர்களால் அல்லது நண்பர்களால் சில சந்தர்ப்பங்களில் தோல்வி ஏற்பட்டிருக்கலாம். அதற்காக நீங்கள் அவர்களை எதிரிகளாக நினைத்துப் பழி வாங்கும் நினைப்புடன் செயற்பட முற்படுவீர்கள். இது கூட உங்களுக்கு ஏற்படும் பெரும் தோல்வியாக அமைந்துவிடும். அவர்களுக்காக அவர்கள் முன் நீங்கள் சாதனையாளராக மாற முயற்சியுங்கள்.

நியூட்டனின் விதியை ஒருமுறை நினைத்துப் பாருங்கள். எல்லாத் தாக்கத்துக்கும் சமனும் எதிருமான மறுதாக்கம் உண்டு என்றார். அதுபோலவே நம் வாழ்க்கையில் தோல்வி ஏற்பட்டு விட்டால் நிச்சயம் ஒரு வெற்றி இருக்கும். எனவே ஒவ்வொரு தோல்வியையும் வெற்றியாய் மாற்ற முடியும் என்ற நம்பிக்கையை உங்கள் மனதில் பதியுங்கள்.

உங்களுக்குத் தோல்வி ஏற்பட்டவுடன் தோற்றுப் போனோம் என்று ஒதுங்காதீர்கள். உங்களைத் தோற்க வைப்பவர்களின் முன்னால் சாதனையாளராக மாறிக்காட்டுங்கள். வெற்றியையும் தோல்வியையும் சமனாக நேசியுங்கள். தோல்வியும் உங்கள் வாழ்க்கையில் வெற்றியாக மாறும். அப்போது உங்களைத் தோற்க வைத்து வென்றவர்கள் கூட உங்கள் முன் தோற்றுப் போகக் கூடும். ''நான் தோற்றவன்; வெற்றியாளன் அல்லன்'' என்று ஒருபோதும் நினைக்காதீர்கள். மனிதன் மனிதனாகப் பிறக்கும்போது மட்டுமே மனிதனாக வாழ முடியும். எனவே கிடைத்தற்குரிய அரிய அற்புதமான மனிதப் பிறவியில் தோல்வியைக் கண்டு துவண்டு விடாமல் முயற்சியுடன் செயற்படுங்கள். வெற்றிக்கு வழி தோல்விதான் என்பதை மறவாதீர்கள்.

*-அபி*

### இளைஞர், யுவதிகளே!

*உங்களின் திறமைகளை வெளிக்கொணரவும் பிரச்சினைகள் பற்றிப் பேசவும் தேடல்களுக்குத் தீனி போடவும் 'இளவல்கள் வட்டம்' என்ற இந்தப் பகுதி மலர்ந்துள்ளது. இந்தப் பகுதிக்கான உங்கள் படைப்புக்களையும் ஏதாவது சந்தேகங்களையும் விமர்சனங்களையும் கீழேயுள்ள படிவத்தோடு இணைத்து அனுப்பிவையுங்கள்.*

**'இளவல்கள் வட்டம்',**
**'உதயன்', 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.**

பெயர் :-..................................
முகவரி :- ..................................
..................................
.................... ....................
திகதி கையொப்பம்

### இளவல்கள் வட்டம்

### விமர்சனம்

***அண்மையில் வெளியான ஜி.சி.ஈ (சா/த) பரீட்சைப் பெறுபேறுகளின்படி ஆண்களின் கல்வித் தரம் வீழ்ச்சியடைந்தமைக்கும் பெண்களின் கல்வித் தரம் முன்னேறியமைக்குமான காரணம் என்ன? உங்கள் காரணங்களை விமர்சனப் பகுதியில் முன் வைத்து விமர்சியுங்கள்.***

தரமான விமர்சனங்கள் பிரசுரமாவதோடு சிறந்த விமர்சனங்களுக்குப் பரிசுகளும் வழங்கப்படும்.



## வாழ்வின் திறவுகோல் ஒழுக்கம்

ஒளியை திறக்க உதவும்
திறவுகோல் - ஒழுக்கம்
ஊசியின் காதினுள்ளே
உலகத்தை திணிக்க
உருவாகும் முயற்சியின்
முதுகெலும்புகள் - மாணவர்கள்

உன்னை இந்த உலகத்தில்
அறிமுகம் செய்த உத்தமர்கள்- உன்
பெற்றோர்கள் என்றால்
உலகத்தையே உன்னிடம்
அறிமுகம் செய்த உன்னதர்கள்
ஆசிரியர் என்ற பெயரோடு
உலாவி வருகின்றனர் இவ்வுலகத்தில்

ஒழுக்கத்தின் முதல்படியான கீழ்படியை
மனமிடுக்கோடு தோற்றிக் கோள்வோம்
ஒழுக்கமே உயிரேன உணர்ந்து -
இன்றைய
சமுதாயத்தில் மாணவர்களாகிய நாம்
பயிரேனத் திறமையை விதைத்து
பெயரேன நற்பேற்றை அறுவடை
செய்வோம்

மாணவர்களால் மானம் பெற்றது உலகம்
என்று மார்தட்டுவோம் நாம்.

*சாரங்கா ரவிக்குமார்,*
தரம்-11,
வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்

## திருமதி சிவபாக்கியம் ஸ்ரீபத்மநாதன்



புன்னாலைக்கட்டுவன் வடக்கைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சிவபாக்கியம் ஸ்ரீபத்மநாதன் நேற்று (02.05.2012) புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சின்னப்பு-நாகம்மா தம்பதியரின் மூத்த புதல்வியும், காலஞ்சென்ற ஸ்ரீபத்மநாதனின் பாசமிகு மனைவியும், கற்பகப்பொன்மலரின் அன்புத் தாயும், யோகேந்திரம் (ஜேர்மனி), பரமேஸ்வரி (ஜேர்மனி), காலஞ்சென்ற சிவஞானம் ஆகியோரின் சகோதரியும், விநாயகம்பிள்ளையின் மாமியும், மனோறஞ்சன், கார்த்திகா, தனுஷா ஆகியோரின் பாசமிகு பேர்த்தியுமாவார்.

அன்னாரது இறுதிக்கிரியைகள் இன்று (03.05.2012) வியாழக்கிழமை ஒரு மணிக்கு புன்னாலைக்கட்டுவன் வடக்கிலுள்ள அவரது இல்லத்தில் இடம்பெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக புன்னாலைக்கட்டுவன் வடக்கு இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்தத் தகவலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

'கற்பகம்'
புன்னாலைக்கட்டுவன் வடக்கு,
புன்னாலைக்கட்டுவன்.

தகவல்:
செ.விநாயகம்பிள்ளை
(மருமகன்).

## யாழ். நகரிலும் வெசாக் நிகழ்வுகள்


யாழ்ப்பாணம், மே. 03

வெசாக் தினத்தை முன்னிட்டு பாதுகாப்புப் படையினரால் விசேட அலங்காரப் பந்தல்கள் யாழ். பொது நூலக முன்றிலில் அமைக்கப்பட்டு வருகின்றன.

யாழ். பாதுகாப்புப் படைகளின் தலைமையகத்தினால் அமைக்கப்பட்டு வரும் இந்த அலங்காரப் பந்தல்கள் நாளை மறுதினம் சனி மற்றும் ஞாயிறு தினங்களில் மாலை 6.30 மணிமுதல் காட்சிப்படுத்தப்படவுள்ளதாக படைத்தரப்பு அறிவித்துள்ளது. (16)

# சர்வதேச ஊடக சுதந்திர தினம்

## மே - 03



இடம் : திருமறை கலாமன்றம்
பிரதான வீதி, யாழ்ப்பாணம்.

காலம் : மே-03 வியாழக்கிழமை
பி.ப 3.30

**நிகழ்வுகள்**

நூல் வெளியீடு : மறைந்த கார்ட்டூனிஸ்ற் பயஸின்
**காலக்கிறுக்கல்கள்**

வெளியீட்டுரை : திரு. ஆ. சபேஸ்வரன்
உதவி ஆசிரியர், யாழ். தினக்குரல்
விரிவுரையாளர்-யாழ்.பல்கலைக்கழக ஊடக வளங்கள் பயிற்சி மையம்

சிறப்புரைகள் : **சமகாலப்போக்கிலில் தமிழ் ஊடகங்கள்**
திரு. எ.தேவராஜ் பிரதம பொறுப்பாசிரியர் வீரகேசரி வார இதழ்
**நாலாவது தூண்**
சட்டத்தரணி திரு. கு.குருபரன்
விரிவுரையாளர் யாழ்.பல்கலைக்கழக சட்டபீடம்
**சமூக ஊடகங்கள்**
அருட்திரு றூபன் மரியாம்பிள்ளை அடிகளார்
ஊடக கல்வி விரிவுரையாளர், யாழ்.பல்கலைக்கழகம்.

*அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.*

நிமலராஜன் ஞாபகார்த்த அமைப்பு

(17434) (6,9,10)

உதயன் விளம்பரத் தொடர்புக்கு
advt@uthayan.com
0215671111

## வாகனம் விற்பனைக்கு


50 ஸ்ரீ ISSUZU DOUBLE CAB வாகனம் விற்பனைக்கு உண்டு

தொடர்பு: 0779111638

# மரண அறிவித்தல்

## தம்பிமுத்து துரைசிங்கம்

(கிராமிய சிவில் பாதுகாப்புக் குழுத்தலைவர்)



உடுவிலைப் பிறப்பிடமாகவும் மல்வத்தையை வசிப்பிடமாகவும் கொண்ட தம்பிமுத்து துரைசிங்கம் (சேனர்) (01.05.2012) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான தம்பிமுத்து-அன்னம்மா தம்பதியரின் மூத்த புதல்வனும், காலஞ்சென்ற இராசேந்திரம் யோன்பிள்ளை மற்றும் கனகம்மா தம்பதியரின் பாசமிகு மருமகனும், ஜெபநேசராணியின் அன்புக் கணவரும், ஜெயராஜசிங்கம், சாந்தினி, சந்திரசிங்கம், ஜெயசிங்கம் ஆகியோரின் அன்புச் சகோதரரும், காலஞ்சென்ற ஜெபநேசராஜன் மற்றும் ஜெசீலன், ஜெயசீலராணி ஆகியோரின் மைத்துனரும், சுபின்சியா, சுதர்சன், ஜென்சியா, பிறண்ஸன், நிறோஜன், ஆகியோரின் பாசமிகு தந்தையும், காலஞ்சென்ற பிறேம தயாளன் மற்றும் மேரி மெற்றலினா ஆகியோரின் மாமனாரும், நிறூஜன், நிலானிகன், நிஜானிகன், நிதர்சன், சுஜீபன் ஆகியோரின் பேரனுமாவார்.

அன்னாரின் நல்லடக்க ஆராதனை மல்வம் திருக்குடும்ப ஆலயத்தில் இன்று (03.05.2012) வியாழக்கிழமை மு.ப 10.00 மணிக்கு திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டு மல்வம் சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

மல்வம், உடுவில், சுன்னாகம்.

(C/1388) (6,14,10)

தகவல்:
குடும்பத்தினர்.

# கண்ணீர் அஞ்சலி



எமது சக உத்தியோகத்தர் திருமதி கமலநாதன் வதனியின் பாசமிகு தந்தை

## புண்ணியமூர்த்தி வேலும்மயிலும்

அவர்களின் மறைவால் துயருற்றிருக்கும் அவரது குடும்பத்தவர்களுக்கும் எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்வதோடு அவரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர் சங்கம்,
பிரதேச செயலகம், நல்லூர்

## கார் விற்பனைக்கு

WP KD xxxx தொடரிலக்கமுடைய Dr பாவனையில் உள்ள NISSAN SUNNY SUPER SALON சில்வர் கலர் கார் விற்பனைக்கு உண்டு.

தொடர்பு: 077 3295347

## கணினி திருத்தம் (COMPUTER REPAIR)

உங்கள் கணினிகள் பழுதடைந்து விட்டனவா? உடன் உங்களது வீடுகளுக்கே வந்து உரிய முறையில் திருத்தி தருகிறோம். அழையுங்கள்

0779086737 GUNAA BEST PC

# கண்ணீர் அஞ்சலி

எமது பிரதேச செயலகத்தில் பொது முகாமைத்துவ உதவியாளராக கடமையாற்றும் திருமதி ஜெயந்தி ஜெகசீலன் அவர்களின் பாசமிகு மாமனார்

**வேலுப்பிள்ளை பஞ்சாட்சரம்**

அவர்கள் (01.05.2012) செவ்வாய்க்கிழமை லண்டனில் காலமானார். அன்னாரின் பிரிவினால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அவரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.


பிரதேச செயலகம்,
தென்மராட்சி,
சாவகச்சேரி.

ஊழியர் நலன்புரிச்சங்கம்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வெற்றியை நோக்கி...



திருகோணமலை மாவட்ட மட்ட விளையாட்டு நிகழ்வுகள் அண்மையில் நடைபெற்றன. இதில் ஓர் அங்கமாக மாபெரும் சைக்கிள் ஓட்ட நிகழ்வும் நடைபெற்றது. ஏராளமான வீரர்கள் இதில் கலந்துகொண்டனர்.

# பெரு விளையாட்டுக்கள் வவுனியாவில் ஆரம்பம்



வவுனியா, மே 3

வவுனியா மாவட்ட இளைஞர்சேவைகள் மன்றம் நடத்தும் மாவட்ட மட்ட பெருவிளையாட்டுக்கள் கடந்த 28 ஆம் திகதி ஆரம்பமாகின.

நாளைமறுதினம் வவுனியா, நகரசபை மைதானத்தில் உதைபந்தாட்டமும், வவுனியா சைவப்பிரகாச மகளிர் கல்லூரியில் பெண்களுக்கான கரப்பந்தாட்டம், வலைப்பந்தாட்டம் என்பனவும்,

6 ஆம் திகதி கலைமகள் விளையாட்டுக் கழக மைதானத்தில் ஆண்களுக்கான கரப்பந்தாட்டமும், நகரசபை மைதானத்தில் ஆண், பெண்களுக்கான கபடியும்,

10 ஆம் திகதி நகரசபை மைதானத்தில் மெய்வல்லுநர், கயிறு இழுத்தல் போட்டிகளும் இடம் பெறவுள்ளன.

இதேவேளை பாடசாலை மாணவர்களுக்கான மேலைத்தேய பாண்ட் இசைத்தல் போட்டி 12 ஆம் திகதி இடம் பெறவுள்ளது என வவுனியா இளைஞர் சேவைகள் மன்ற உதவிப் பணிப்பாளர் எம்.பி.சரத்சந்திரபால தெரிவித்தார். (த-400)

# கரப்பந்தாட்ட இறுதிக்கு முன்னேறிய அணிகள்

யாழ்ப்பாணம்,மே 3

கைதடி நவபுரம் நவசத்தி விளையாட்டுக்கழகம் வடமாகாண ரீதியாக நடத்திய கரப்பந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரின் அரையிறுதியாட்டங்கள் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை இடம்பெற்றன.

இதில் முதலில் இடம் பெற்ற அரையிறுதியாட்டத்தில் புத்தூர்கலைமதி விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து ஆவரங்கால் இந்து இளைஞர் விளையாட்டுக் கழக அணி மோதிக் கொண்டது. இதில் 5 செற்களைக் கொண்ட ஆட்டத்தில் ஆவரங்கால் இந்து இளைஞர் விளையாட்டுக்கழக அணி 3:2 என்ற செற்கணக்கில் வெற்றி பெற்று இறுதியாட்டத்திற்கு தகுதி பெற்றது.

தொடர்ந்து இடம் பெற்ற இரண்டாவது அரையிறுதியாட்டத்தில் ஆவரங்கால் மத்திய விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து கிளிநொச்சி மருதநிலா விளையாட்டுக்கழக அணி மோதிக் கொண்டது.

இதில் 5 செற்களைக் கொண்ட ஆட்டத்தில் ஆவரங்கால் மத்திய விளையாட்டுக்கழக அணி 3:1 என்ற செற்கணக்கில் வெற்றி பெற்று இறுதியாட்டத்திற்கு தகுதி பெற்றது. (ங-23)

# புதிதாக இணைக்கப்படவுள்ள மத்தியஸ்தர்களுக்கான வகுப்பு


யாழ்ப்பாணம்,மே 3

யாழ்.உதைபந்தாட்ட மத்தியஸ்தர் சங்கத்தினால் புதிதாக இணைக்கப்படவுள்ள மத்தியஸ்தர்களுக்கான வகுப்பு எதிர் வரும் ஞாயிற்றுக்கிழமை மு.ப 10 மணிக்கு நாவாந்துறை சென் நீக்கிலஸ் சனசமூக நிலைய மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

மேற்படி மத்தியஸ்தர்களுக்கான வகுப்பில் பங்குபற்றவிரும்பும் விளையாட்டுக்கழகங்கள் தங்களது கழகங்களில் இருந்து 5 பேரை இந்த வகுப்பிற்கு அனுப்பிவைக்க முடியும் என வும் முன்னர் நடைபெற்று வந்த மத்தியஸ்தர்களுக்கான வகுப்பில் பங்கு கொண்டோரையும் புதிதாக ஆரம்பிக்கப் பட இருக்கும் வகுப்பில் கலந்து கொள்ளுமாறு செயலாளர் தெரிவித்துள்ளார்.

## யாழ். மாவட்ட பாடசாலைகளுக்கு இடையிலான பெண்களுக்கான கரப்பந்தாட்டம்

# சண்டிலிப்பாய் இந்துவை பந்தாடியது மகாஜனா



யாழ்ப்பாணம்,மே 3

யாழ். மாவட்ட பாடசாலைகளுக்கிடையிலான 19 வயதுப் பிரிவு பெண்களுக்கான கரப்பந்தாட்டச் சுற்றுப் போட்டியின் இறுதியாட்டத்தில் மகாஜனக் கல்லூரி வெற்றி பெற்றுச் சம்பியனானது.

கடந்த வாரம் நெல்லியடி மத்திய மகாவித்தியாலய மைதானத்தில் இடம் பெற்ற இறுதியாட்டத்தில் சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரி அணியை எதிர்த்து தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரி அணி மோதிக் கொண்டது.

ஆரம்பத்திலிருந்தே மகாஜனக் கல்லூரி வீராங்கனைகள் அபார ஆட்டத்தை வெளிப்படுத்தினர். தமக்குக் கிடைத்த சந்தர்ப்பங்களை எல்லாம் அவர்கள் புள்ளிகள் ஆக்கினர். ஆனால் மகாஜனவின் வேகத்துக்கு சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரி வீராங்கனைகளால் ஈடுகொடுக்க முடியவில்லை. சிறிதேனும் வெற்றியைப் பெறுவதற்காக வேனும் சண்டிலிப்பாய் இந்து வீராங்கனைகள் முயற்சிக்க வில்லை. மகாஜனாவின் ஆட்டத்தால் அதிர்ச்சி உற்றவர்கள் போல வெற்றியைத் தாரை வார்த்துக்கொடுத்து விட்டு சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரி வீராங்கனைகள் தோல்வியோடு வெளியேறினார்கள்.

**ஆரம்பத்திலிருந்தே மகாஜனக் கல்லூரி வீராங்கனைகள் அபார ஆட்டத்தை வெளிப்படுத்தினர். தமக்குக் கிடைத்த சந்தர்ப்பங்களை எல்லாம் அவர்கள் புள்ளிகள் ஆக்கினர்.**

மூன்று செற்களை கொண்ட ஆட்டத்தில் தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரி அணி இரண்டு நேர் செற்களை 25:7,25:4 என்ற புள்ளிகள் அடிப்படையில் வெற்றி பெற்று சம்பியனானது.

மூன்றாமிடத்திற்கான ஆட்டத்தில் நெல்லியடி மத்திய மகாவித்தியாலய அணியை எதிர்த்து மட்டுவில் தெற்கு அமெரிக்கன் மிசன் வித்தியாலய அணி மோதிக் கொண்டது. இதில் மூன்று செற்களைக் கொண்ட ஆட்டத்தில் நெல்லியடி மத்திய மகாவித்தியாலய அணி 2:0 என்ற செற்கணக்கில் வெற்றியீட்டியது. (23)

# காமாட்சியை இறுதியில் வீழ்த்தி கார்மேல் போய்ஸ் சம்பியனானது



கொழும்புத்துறை, மே 3

கொழும்புத்துறை றொசாரியன் விளையாட்டுக் கழகத்தினால் உயிர்ப்பு ஞாயிறு விழாவை ஒட்டி நடத்தப்பட்ட கிரிக்கெட் சுற்றுப் போட்டியின் இறுதிப்போட்டியில் குருநகர் கார் மேல் போய்ஸ் அணி வெற்றி பெற்று சம்பியன் கிண்ணத்தை பெற்றுக் கொண்டது.

20 இற்கு மேற்பட்ட கழகங்கள் பங்குபற்றிய இந்தச் சுற்றுப் போட்டியின் இறுதிப் போட்டி அரியாலை சனசமூகநிலைய மைதானத்தில் கடந்த ஞாயிற்றுக் கிழமை நடை பெற்றது.

கொக்குவில் காமாட்சி விளையாட்டுக்கழக அணியும், குருநகர் கார் மேல் போய்ஸ் விளையாட்டுக் கழக அணியும் மோதிக் கொண்டன.

8 பந்துப் பரிமாற்றங்களைக் கொண்ட போட்டியில் முதலில் துடுப்பெடுத்தாடிய காமாட்சி அணி 48 ஓட்டங்களைப் பெற்றது.

கார்மேல் போய்ஸ் அணி 2 இலக்குகளை இழந்து வெற்றியடைந்தது.

ஆட்டமிழக்காது 25 ஓட்டங்களைப் பெற்ற கார் மேல் போய்ஸ் அணி வீரரான பிரசாந் சிறந்த துடுப்பாட்ட வீரராகவும்,சிறந்த பந்து வீச்சாளராகவும் 2 ஓவர்கள் பந்து வீசி 10 ஓட்டங்களுக்கு 2 இலக்குகளை வீழ்த்திய சஞ்சித்தும் தெரிவு செய்யப்பட்டனர். தொடரின் ஆட்ட நாயகனாக காமாட்சி விளையாட்டுக் கழக வீரன் மோகன்குமார் தெரிவானார் .

வெற்றிக் கேடயத்தை றொசாறியன் சனமூக நிலையத்தின் முன்னாள் பொருளாளரும் இறுதிப் போட்டியின் பிரதம விருந்தினருமான எஸ்.யேசுதாஸ் வழங்கினார். (ங-135)

# இன்றைய ஆட்டங்கள்



யாழ்ப்பாணம், மே 3


வவுனியா மாவட்ட பாடசாலைகளுக்கு இடையிலான 15,19 வயதுப் பிரிவு ஆண்,பெண்களுக்கான உதைபந்தாட்டப் போட்டி நெளுக்குளம் மகா வித்தியாலயத்தில் இடம்பெறவுள்ளது . (ங-23-400)

***

யாழ்ப்பாணம், மே 3

யாழ் மாவட்ட பாடசாலைகளுக்கிடையிலான 15,19 வயதுப் பிரிவு ஆண்,பெண்களுக்கான பூப்பந்தாட்டப் போட்டி இன்றும், நாளையும் இடம் பெறவுள்ளது.

இதில் இன்று வியாழக்கிழமை 15 வயதுப் பிரிவு ஆண்களுக்கான போட்டி சென்.ஜோன்ஸ் கல்லூரியிலும்,15 வயதுப் பிரிவு பெண்களுக்கான போட்டி சுண்டுக்குழி மகளிர் கல்லூரியிலும்,நாளை வெள்ளிக்கிழமை இடம் பெறும் 19 வயதுப் பிரிவு ஆண்களுக்கான போட்டி சென். ஜோன்ஸ் கல்லூரியிலும் 19 வயதுப் பிரிவு பெண்களுக்கான போட்டி சுண்டுக்குழி மகளிர் கல்லூரியிலும் இடம் பெறவுள்ளன. (23)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சாதனையுடன் வென்றார் சேவாக்




ஐ.பி.எல்., வரலாற்றில் தொடர்ந்து ஐந்தாவது அரைச் சதம் அடித்து அணித்தலைவர் சேவாக் சாதனை படைக்க, டில்லி அணி 6 இலக்குகள் வித்தியாசத்தில் வென்றது. இதன் மூலம் 16 புள்ளிகள் பெற்ற டில்லி அணி 'பிளே-ஓப்' சுற்றுக்கு முன்னேறுவது உறுதியாகி உள்ளது. சொந்த மண்ணில் சொதப்பிய ராஜஸ்தான் அணி தொடர்ந்து நான்காவது தோல்வியை பெற்று ஏமாற்றியது.

ஜெய்ப்பூரில் நேற்றுமுன்தினம் நடந்த ஐந்தாவது ஐ.பி.எல்., தொடரின் 43 ஆவது லீக் ஆட்டத்தில் டில்லி டேர்டெவில்ஸ், ராஜஸ்தான் ரோயல்ஸ் அணிகள் மோதின.

ராஜஸ்தான் அணியில் கெவான் கூப்பர்(வலது முழங்கால் எலும்பு முறிவு) நீக்கப்பட்டு, வொட்சன் வாய்ப்புப் பெற்றார். டில்லி அணியில் அகார்கருக்கு பதிலாக சுழற்பந்து வீச்சாளர் பவன் நேகி சேர்க்கப்பட்டார். நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற ராஜஸ்தான் அணித்தலைவர் டிராவிட், துடுப்பாட்டத்தை தேர்வு செய்தார்.

ராஜஸ்தான் அணிக்கு மீண்டும் ஒரு முறை டிராவிட், அஜின்கியா ரஹானே இணைந்து வலுவான அடித்தளம் அமைத்தனர். இவர்கள் டில்லி பந்து வீச்சை ஒருகை பார்த்தனர். இர்பான் பதானின் இரண்டாவது பந்து பரிமாற்றத்தில் ரஹானே 3 பவுண்டரிகள் அடித்தார். டிராவிட்டும் ஓர் பவுண்டரி அடிக்க, மொத்தம் 18 ஓட்டங்கள் எடுக்கப்பட்டன. முதல் இலக்குக்கு 71 ஓட்டங்கள் சேர்த்த நிலையில், பவன் நேகி சுழலில் ரஹானே (42) வெளியேறினார். இதற்குப் பின்னர் மத்திய வரிசை துடுப்பாட்ட வீரர்கள் ஏமாற்ற, இலக்குகள் சரிந்தன. தொடர்ந்து மிரட்டிய நேகியின் பந்தில் வொட்சன் (8) வீழ்ந்தார். ஓவேஸ் ஷா (1) ஏமாற்றினார்.

ஆட்டத்தின் 13 ஆவது பந்து பரிமாற்றத்தை வீசிய இளம் நேகி,19, இந்த முறை இரட்டை அடி கொடுத்தார். இரண்டாவது பந்தில் ஆடத்தான ஹொட்ஜை (1) வெளியேற்றினார். 6 ஆவது பந்தில் மனேரியாவை (2) ஆட்டமிழக்கச் செய்து, திருப்புமுனை ஏற்படுத்தினார். இவர் 4 பந்து பரிமாற்றங்களில் 18 ஓட்டங்கள் மட்டும் கொடுத்து 4 இலக்குகள் வீழ்த்தி அசத்தினார்.

ஒருபக்கம் இலக்குகள் சரிந்தாலும் மறுபக்கம் சிறப்பாக விளையாடிய டிராவிட் அரைசதம் கடந்து நம்பிக்கை கொடுத்தார். இவர் 57 ஓட்டங்களுக்கு (7 பவுண்டரிகள்) மோர்கல் பந்தில் 'போல்டானார்'. ராஜஸ்தான் அணி 20 பந்து பரிமாற்றங்களில் 6 இலக்குகளுக்கு 141 ஓட்டங்கள் மட்டும் எடுத்தது.

சுலப இலக்கை விரட்டிய டில்லி அணிக்கு முதல் பந்து பரிமாற்றத்தில் அதிர்ச்சி காத்திருந்தது. அங்கீத் சவான் சுழலில் ஜெயவர்தனா 'டக் அவுட்டானார்'. பின்னர் சேவாக், பீற்றர்சன் இணைந்து ராஜஸ்தான் பந்துவீச்சை துவம்சம் செய்தனர். அங்கீத் சவான் பந்து பரிமாற்றத்தில் சேவாக் 'ஹட்றிக்' பவுண்டரி அடித்தார். ஹாக் பந்தில் பீற்றர்சன் ஒரு இமாலய சிக்சர் அடித்தார். சேவாக் தன் பங்கிற்கு பங்கஜ் சிங் பந்தில் ஒரு சிக்சர் அடித்து, தொடர்ந்து 5 ஆவது அரைசதம் எட்டினார்.


ஐந்தாவது ஐ.பி.எல்., தொடரில் இருந்து விடைபெறும் பீற்றர்சன், தனது முத்திரையை அழுத்தமாக பதித்தார். மேற்கிந்தியத்தீவுகளுக்கு எதிரான டெஸ்ட் தொடரில் கலந்து கொள்ள இங்கிலாந்து செல்லும் இவர், 36 ஓட்டங்களுக்கு வெளியேறினார். ரோஸ் ரெய்லர் (6) ஏமாற்றினார். ஹாக் சுழலில் சேவாக் 73 ஓட்டங்களுக்கு (12 பவுண்டரிகள், 1 சிக்சர்) ஆட்டமிழந்தார்.

மனேரிய பந்து பரிமாற்றத்தில் நமன் ஓஜா அடுத்தடுத்து பவுண்டரிகள், சிக்சர் அடிக்க, டில்லி அணி 15.2 பந்து பரிமாற்றங்களில் 4 இலக்குகளுக்கு 144 ஓட்டங்கள் எடுத்து எளிதான வெற்றி பெற்றது. யோகேஷ் (9), நமன் ஓஜா (11) ஆட்டமிழக்காமல் இருந்தனர். ஆட்ட நாயகன் விருதை டில்லி பந்து வீச்சாளர் பவன் நேகி வென்றார்.

**முதல் வீரர்**

73 ஓட்டங்கள் எடுத்த டில்லி அணித்தலைவர் சேவாக், ஐ.பி.எல்., அரங்கில் தொடர்ந்து ஐந்து அரைசதம் அடித்த முதல் வீரர் என்ற பெருமை பெற்றார். இந்த முறை துடுப்பாட்டத்தில் அசத்தும் இவர், புனே (57), புனே (87*), மும்பை (73), ராஜஸ்தான்(63) அணிகளுக்கு எதிராக ஏற்கனவே அரைசதம் அடித்தார். தவிர, 'ரி-20' வரலாற்றில் தொடர்ந்து 5 அரைசதம் அடித்த உலகின் முதல் வீரர் என்ற சாதனையும் படைத்தார்.

20 பந்தில் அரைச் சதம் எட்டினார் சேவாக். இதன் மூலம் இந்தத் தொடரில் அதிவேக அரைசதம் அடித்த இரண்டாவது வீரரானார். முதல் இடத்தில் ராஜஸ்தான் அணியின் ஓவேஸ் ஷா உள்ளார். (5)




# புத்துயிர் பெறும் டெக்கான்




ஐ.பி.எல்., பரபரப்பான லீக் ஆட்டத்தில் கங்குலி தலைமையிலான புனே அணி, டெக்கான் சார்ஜர்ஸ் அணியிடம் 13 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வீழ்ந்தது. ஏற்கனவே டெக்கானிடம் வீழ்ந்த புனே அணி மீண்டும் ஏமாற்றியது. சங்ககாரா, கமரான் வைபிட்டின் அதிரடி ஆட்டம் டெக்கான் அணிக்கு கைகொடுத்தது.

கட்டாக்கில் உள்ள பாராபதி மைதானத்தில் நேற்று முன்தினம் நடந்த ஐந்தாவது ஐ.பி.எல்., தொடரின் 42 ஆவது லீக் ஆட்டத்தில் டெக்கான் சார்ஜர்ஸ், புனே வாரியர்ஸ் அணிகள் மோதின.

புனே அணியில் ஜெசி ரைடர் நீக்கப்பட்டு, ஆஸ்திரேலியாவின் மைக்கேல் கிளார்க் வாய்ப்பு பெற்றார். நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற டெக்கான் அணித் தலைவர் சங்ககாரா, துடுப்பாட்டத்தை தேர்வு செய்தார்.

டெக்கான் அணிக்கு முதல் பந்து பரிமாற்றத்திலேயே அதிர்ச்சி காத்திருந்தது. சாமுவேல்ஸ் சுழலில் பார்த்திவ் படேல் 'டக்-அவுட்' ஆனார். மற்றொரு தொடக்க வீரர் ஷிகர் தவான் (13), புவனேஷ்வர் குமார் பந்தில் 'கிளீன் போல்டானார்'. இதனால் டெக்கான் அணி 4.4 பந்து பரிமாற்றங்களில் 2 இலக்குகளுக்கு 23 ஓட்டங்கள் மட்டும் எடுத்து திணறியது.

பின்னர் இணைந்த சங்ககாரா, [illegible] டத்தை கையில் எடுத்துக் கொண்டது. புனே பந்து வீச்சாளர்கள் சொதப்பினர். சாமுவேல்ஸ் வீசிய 15 ஆவது பந்து பரிமாற்றத்தில் 19 ஓட்டங்கள் (4 பவுண்டரிகள்) எடுத்த சங்ககாரா, பார்னல் பந்தில் அடுத்தடுத்து இரண்டு பவுண்டரிகள் அடித்து, ஐ.பி.எல்., அரங்கில் தனது 10 ஆவது அரைச் சதத்தை பூர்த்தி செய்தார். மறுமுனையில் இவருக்கு ஒத்துழைப்புக் கொடுத்த வைபிட், தன்பங்கிற்கு அரைச் சதம் அடித்தார். இவர், கங்குலியின் பந்தில் மூன்று இமாலய சிக்சர்கள் விளாசி ரசிகர்களை உற்சாகப்படுத்தினார்.

மூன்றாவது இலக்குக்கு 157 ஓட்டங்கள் சேர்த்த போது, நெஹ்ரா பந்தில் சங்ககாரா (82) 'போல்டானார்'. அபாரமாக ஆடிய வைபிட் (74), பார்னல் வேகத்தில் வெளியேறினார். டெக்கான் அணி 20 பந்து பரிமாற்றங்களில் 4 இலக்குகளுக்கு 186 ஓட்டங்கள் குவித்தது. டுமினி (4), சமந்த்ரே (2) ஆட்டமிழக்காமல் இருந்தனர்.

'சவாலான இலக்கை விரட்டிய புனே அணியின் மனிஷ் பாண்டே (0), அன்கித் சர்மா வீசிய முதல் பந்தில் ஆட்டமிழந்து ஏமாற்றினார். பின்னர் மைக்கல் கிளார்க், கங்குலி இணைந்து போராடினர்.

ஸ்ரைன் பந்தில் 'ஹட்ரிக்' பவுண்டரிகள் அடித்த கிளார்க், பிரதாப் சிங், டுமினி பந்தையும் விட்டுவைக்கவில்லை. டுமினி பந்தை சிக்சருக்கு பறக்கவிட்ட கங்குலி, ஸ்ரைன், அமித் மிஸ்ரா, பிரதாப் சிங் பந்தில் பவுண்டரி அடித்தார். இரண்டாவது இலக்குக்கு 90 ஓட்டங்கள் சேர்த்த போது, மைக்கல் கிளார்க் (41) 'ரன்-அவுட்' ஆனார். இவருக்கு ஒத்துழைப்புக் கொடுத்த கங்குலி (45) ஆறுதல் தந்தார்.

பின்னர், ஸ்டீவன் ஸ்மித்-ரொபின் உத்தப்பா ஜோடி அதிரடியாக ஓட்டங்கள் சேர்த்தது. உத்தப்பா (26) அதிக நேரம் நிலைக்கவில்லை. ஸ்மித் ஓரளவு நம்பிக்கை அளித்தார். கடைசிப் பந்து பரிமாற்றத்தில் புனே அணியின் வெற்றிக்கு 23 ஓட்டங்கள் தேவைப்பட்டன. பிரதீப் சிங் வீசிய இந்தப் பந்து பரிமாற்றத்தில் வெறும் 9 ஓட்டங்கள் மட்டும்தான் எடுக்க முடிந்தது. புனே அணி 20 பந்து பரிமாற்றங்களில் 5 இலக்குகளுக்கு 173 ஓட்டங்கள் எடுத்து தோல்வி அடைந்தது. ஸ்மித் (47) ஆட்டமிழக்காமல் இருந்தார். ஆட்டநாயகன் விருதை டெக்கான் அணித் தலைவர் சங்ககாரா தட்டிச் சென்றார்.


**முதல் பந்தில் இலக்கு**

புனே அணியின் சாமுவேல்ஸ் வீசிய ஆட்டத்தின் முதல் பந்தில், டெக்கான் வீரர் பார்த்திவ் படேல் (0) 'போல்டானார்'. பின்னர், டெக்கான் அணியின் அன்கித் சர்மா வீசிய முதல் பந்தில், புனே தொடக்க வீரர் மனிஷ் பாண்டே (0) ஆட்டமிழந்தார். (5)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முதல் தடவையாய் தடுமாறுகின்றோம்



ஐ.பி.எல். வரலாற்றில் சென்னை சுப்பர் கிங்ஸ் அணி முதன்முறையாக சவாலுக்குட்படுத்தப்பட்டுள்ளதாக சென்னை சுப்பர் கிங்ஸ் அணியின் பயிற்றுவிப்பாளர் ஸ்டீவன் பிளமிங் தெரிவித்துள்ளார். நடப்பு சம்பியனான சென்னை சுப்பர் கிங்ஸ் அணி தங்களது பட்டத்தைத் தக்கவைத்துக் கொள்வதற்காக கடுமையான அழுத்தத்தை எதிர்கொண்டு காணப்படுகிறது.

இந்தத் தொடர் முழுவதும் சென்னை சுப்பர் கிங்ஸ் அணி தேவையானளவுக்கு திறமைகளை வெளிப்படுத்தவில்லை என்பதை ஏற்றுக்கொண்ட ஸ்டீவன் பிளமிங், ஐ.பி.எல். தொடரில் முதன் முறையாக சவாலுக்குள்ளாக்கப்படுவதன் காரணமாக அதைப் பற்றி ஆராய வேண்டிய தேவையுள்ளதாகத் தெரிவித்தார். வழக்கமாக சென்னை சுப்பர் கிங்ஸ் அணி தொடர்ச்சியான திறமைகளை வெளிப்படுத்தும் வழக்கம் கொண்ட போதிலும், இந்த முறை அணியில் காணப்படும் சில குறைகளை நீக்க வேண்டிய தேவையுள்ளதாகத் தெரிவித்துள்ளார்.

சென்னையில் இடம்பெறும் ஆட்டங்களில் சென்னை சுப்பர் கிங்ஸ் அணி தடுமாறிவருகிறது என்பது பற்றி சென்னை சுப்பர் கிங்ஸ் அணி அறிந்துள்ளது எனத் தெரிவித்த ஸ்டீவன் பிளமிங், கடந்த பருவ காலங்களில் சென்னை சுப்பர் கிங்ஸ் அணி சென்னையில் இடம்பெறும் போட்டிகளில் மிகுந்த பலமாகக் காணப்பட்டது என்ற வகையில், தற்போதைய நிலைமை வருத்தமளிப்பதாகவும் தெரிவித்தார்.

ஆடுகளங்களுக்கு ஏற்றவாறு ஆட்டங்களை வெளிப்படுத்த சென்னை சுப்பர் கிங்ஸ் தவறியிருக்கிறது எனத் தெரிவித்த அவர், எனினும் அதை தோல்விக்கான காரணமாகத் தெரிவிக்க விரும்பவில்லை எனவும் அவர் தெரிவித்துள்ளார். இந்தத் தொடரிலிருந்து சென்னை சுப்பர் கிங்ஸ் இன்னமும் வெளியேற்றப்படாத போதிலும், இனிவரும் ஆட்டங்களில் சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்த வேண்டிய தேவையுள்ளதாகவும் அவர் தெரிவித்தார். (5)

# மறைந்தார் நீச்சல் சம்பியன் டேல் ஒயன்

100 மீற்றர் பிரேஸ்ட்ஸ்ரோக் நீச்சலில் தற்போதைய உலக சம்பியனான டேல் ஒயன் தனது 26 ஆவது வயதில் திங்கட்கிழமை உயிரிழந்தார்.

நோர்வேயைச் சேர்ந்த டேல் ஒயன் லண்டன் ஒலிம்பிக் போட்டிகளுக்கான நோர்வே நீச்சல் போட்டியாளர்களுடன் அமெரிக்காவில் பயிற்சிகளில் ஈடுபட்டுவந்தார். இந்த நிலையில் கடந்த திங்கட் கிழமை இரவு குளியலறையில் ஷவரில் குளித்துக் கொண்டிருந்த போது தரையில் வீழ்ந்து மரணமானதாக நோர்வே நீச்சல் சம்மேளனம் அறிவித்துள்ளது. அவருக்கு மாரடைப்பு ஏற்பட்டு அதனால் மரணமடைந்திருக்கலாம் என்றும் தெரிவிக்கப்படுகின்றது.

'அவர் குளியலறைக்குச் சென்று நீண்ட நேரமாக திரும்பிவராமல் இருந்ததால் கதவை தட்டியபோது பதில் எதுவும் வரவில்லை. பின்னர் உள்ளே சென்று பார்த்த போது அவர் தரையில் கிடந்தார்.

அவர் அவசரமாக மருத்துவ மனைக்குக் கொண்டு செல்லப்பட்டு அவரின் இதயத்தை மீண்டும் துடிக்க வைப்பதற்கு ஒரு மணித்தியாலத்திற்குமேல் முயற்சிக்கப்பட்டபின் அவர் இறந்துவிட்டதாக அறிவிக்கப்பட்டது என்று நோர்வே நீச்சல் சம்மேளனம் தெரிவித்தது.

கடந்த வருடம் சீனாவின் ஷாங்காய் நகரில் நடைபெற்ற உலக நீச்சல் சம்பியன்ஷிப் போட்டிகளில் 100 மீற்றர் பிரேஸ்ட்ஸ்ரோக் போட்டியில் டேல் ஒயன் தங்கப்பதக்கம் பெற்றிருந்தார். அதற்குமுன் 2008 ஆம் ஆண்டு நடைபெற்ற ஒலிம்பிக் போட்டியில் அவர் வெள்ளிப் பதக்கம் வென்றார். ஒலிம்பிக் நீச்சல் போட்டியில் நோர்வே வென்ற முதலாவது பதக்கம் இதுவென்பது குறிப்பிடத்தக்கது. (5)

# யுனைட்டட்டை வென்றது சிட்டி



இங்கிலாந்து பிறீமியர் லீக் தொடரின் புள்ளிகளின் பட்டியலில் முதலிடத்தில் காணப்பட்ட மன்செஸ்டர் யுனைட்டட் கழகத்தை - மன்செஸ்டர் சிட்டி கழகம் வெற்றிகொண்டுள்ளது. அத்தோடு புள்ளிப்பட்டியலில் முதலிடத்தையும் மன்செஸ்டர் சிட்டி கைப்பற்றியுள்ளது.

மன்செஸ்டர் சிட்டி கழகம் 1-0 என்ற கணக்கில் வெற்றிகொண்டே முதலிடத்தை அடைந்துள்ளது. இதன் மூலம் 44 வருடங்களின் பின்னர் இங்கிலாந்து பிறீமியர் லீக் பட்டத்தை வெல்வதற்கான வாய்ப்பு மன்செஸ்டர் சிட்டிக்கு ஏற்பட்டுள்ளது.

இடம்பெறவுள்ள நியூ காஸில் கழகத்திற்கு எதிரான போட்டியிலும், குயீன்ஸ் பார்க் ரேஞ்சர்ஸ் கழகத்திற்கு எதிரான போட்டியிலும் வெற்றிபெற்றால் மன்செஸ்டர் சிட்டி பட்டத்தைக் கைப்பற்றுவது ஓரளவுக்கு உறுதியாகும்.

மன்செஸ்டர் சிட்டி கழகம் சார்பாக வின்சென்ட் கொம்பனி 45 ஆவது நிமிடத்தில் கோலொன்றை அடித்து மன்செஸ்டர் சிட்டி கழகத்திற்கு ஆதிக்கத்தை வழங்கினார். அதன் பின்னர் மன்செஸ்டர் யுனைட்டட் கழகம் கோல்களை அடிக்க முனைந்த போதிலும், மன்செஸ்டர் சிட்டியின் சிறப்பான தடுப்பாட்டம் காரணமாக யுனைட்டட் அணியால் கோல்கள் எதனையும் அடிக்க முடிந்திருக்கவில்லை. இந்த ஆட்டத்தின் போது மன்செஸ்டர் யுனைட்டட் கழகத்தின் முகாமையாளர் சேர் அலெக்ஸ் பேர்ஹஸெனுக்கும், மன்செஸ்டர் சிட்டியின் முகாமையாளர் ரொபேர்ட்டோ மன்சினிக்குமிடையில் வாய்த்தர்க்கம் ஏற்பட்டதுடன், அது சிறிது நேரம் நீடித்திருந்தமையும் குறிப்பிடத்தக்கது.

ஏப்ரல் மாத ஆரம்பத்தில் முதலிடத்தில் காணப்பட்ட மன்செஸ்டர் யுனைட்டட் கழகத்திற்கும், இரண்டாமிடத்தில் காணப்பட்ட மன்செஸ்டர் சிட்டிக்குமிடையிலான புள்ளி வித்தியாசம் 8 ஆகக் காணப்பட்ட போதிலும், தற்போது மன்செஸ்டர் சிட்டி முதலிடத்தைக் கைப்பற்றியுள்ளது மன்செஸ்டர் சிட்டியின் போராடும் குணத்தை வெளிப்படுத்துவதாக அமைந்துள்ளது. (5)

## மரண அறிவித்தல்

### வல்லிபுரம் இராசையா

(உரிமையாளர், இராசையா கிறசர்)



திருநெல்வேலி கேணியடியைப் பிறப்பிடமாகவும், கோண்டாவில், இருபாலை வீதியை வசிப்பிடமாகவும் கொண்ட வல்லிபுரம் இராசையா (கல்லுடைக்கும் ஆலையின் உரிமையாளர்) நேற்று (02.05.2012) புதன்கிழமை சிவபதம் அடைந்தார்.

அன்னார் மகேஸ்வரியின் அன்புக் கணவரும், காலஞ்சென்றவர்களான வல்லிபுரம்-செல்லம்மா தம்பதியரின் அன்பு மகனும், பூரணம் கந்தையாவின் அன்புச் சகோதரனும், இராஜேஸ்வரன், இராஜேஸ்வரி, கேதீஸ்வரி ஆகியோரின் அன்புத் தந்தையும், சந்திரவதனா, சந்திரரத்தினம், கெங்காதரன் ஆகியோரின் அன்பு மாமனும், சஞ்சீபன், காயத்திரி, இரஜீவன், சுஜீவன், துவாரகன், தாட்சாயினி, கீர்த்தனன், வைசாலினி, சுதர்சினி, குமரன் ஆகியோரின் அன்புப் பேரனும், பிரணவி, ஜதுனவி, கஜோரிகா ஆகியோரின் அன்புப் பூட்டனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (03.05.2012) வியாழக்கிழமை பி.ப. 3 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று தகனக்கிரியைக்காக பூதவுடல் திருநெல்வேலி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

இருபாலை வீதி,
கோண்டாவில்.

தகவல்:
இ.இராஜேஸ்வரன்
(மகன்).


வீடியோ, தொலைக்காட்சி துறையினருக்கான
Digital film making.
DV, H.D.V Vedio Editing
செயல்முறை பயிற்சி வகுப்புக்கள் நடைபெறுகின்றன.
0777162090
Singlair Digital Medias
48/1 Stanley Road,
Jaffna

CHEMISTRY
S.Vasu
A/L 2012
தொழில்முறை இரசாயனவியல்
சனி, ஞாயிறு காலை 5.45 - 6.45 a.m.
ஆரம்பம்:-05.05.2012 சனி 5.45 a.m.
NEC பருத்தித்துறை வீதி, ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம்.

திருமணம் செய்து UK செல்வதற்கான A1 Exam
DMI COMPUTER EDUCATION
Sponsor/Settlement Visa
British High Commission ஆல் அங்கீகரிக்கப்பட்ட City &Guilds இன் கற்கை நெறியை எமது நிறுவனத்திலேயே கற்று, ஆங்கிலப்பரீட்சைக்கு எமது நிறுவனத்திலேயே தோற்றமுடியும்.
# சித்தியடைவதற்கான 100% உத்தரவாதம் எமது நிறுவனத்தால் வழங்கப்படும்.
# சித்தியடையாவிட்டால் கற்கைநெறிக் கட்டணம் மீளளிக்கப்படும்.
DMI COMPUTER EDUCATION
யாழ்ப்பாணம் No.113, கன்னாதிட்டி வீதி, Tel.: 021-222 4403
நெல்லியடி M.M.V. வீதி, Tel.: 021-226 2470
சாவகச்சேரி No.174, கண்டி வீதி, Tel.: 021-227 0243
யாழ்ப்பாணம், நெல்லியடி, சாவகச்சேரியில்
0777577333

SUBRA(14)
சித்தன்கேணி - வட்டுக்கோட்டை இரு இடங்களிலும் ஆரம்பம்
2014 கலை, வர்த்தக, கணித, விஞ்ஞானப் பிரிவுகள்
பிரிவு II - 05.05.2012
★ காரைநகர் பிரதேச மாணவர்களுக்கு விசேட சலுகை வழங்கப்படும்.
★ தகுதியான, தரமான ஆசிரியர்களின் வழிகாட்டல்.

1ST IN Com,G.A.Q
யாழ்ப்பாணம், பேராதனை பல்கலைக்கழகம் (வெளிவாரி)
* A/L கலை, வர்த்தகம், கணிதம், விஞ்ஞானம் ஆகிய பிரிவுகளில் மூன்று பாடம் சித்தி அடைந்தவர்கள் விண்ணப்பிக்க தகுதி உடையவர்கள் ஆகும்.
* புதிய பிரிவுக்கான விரிவுரைகள் ஆரம்பமாகிவிட்டன
குறிப்பு:- காமராசர் பல்கலைக்கழகத்திற்கான புதிய ஆண்டிற்கான B.A., B.Com, B.Sc ஆகியவற்றிற்கான பதிவுகளும், விரிவுரைகளும் ஆரம்பமாகிவிட்டன.
விவரங்களுக்கு:- S.அருள்நங்கை (நிர்வாகி)
புதிய உயர் கல்லூரி,
ஆரியகுளம் சந்தி,
யாழ்ப்பாணம்.

இது விசா ஆலோசனைத் துறையில் புதுமைப் புரட்சியே
எம்மிடம் ஆஸ்திரேலியா 5 வருட குடும்ப் விசா, Student visa ஆலோசனை பெற்றுச் செல்பவர்களின் வேலைவாய்ப்புத் தேவையினை ஓரளவு பூர்த்தி செய்வதற்காக...
இன்று ஆஸ்திரேலியா மெல்பேர்ன் நகரில் திசைகாட்டி தனது இணை நிறுவனமாக
KUSHI RESTAURANT குஷி ரெஸ்ரோறன்ற்,
504B, Hampton Street, Melborn, Australia
T.P- 0061390437100
என்ற நிறுவனத்தை ஆரம்பித்து வைக்கிறது என்பதை மிக்க மகிழ்வோடு அறியத் தருகின்றோம்.
குறிப்பு:- யாழ்ப்பாணம் பாரம்பரிய மதிய உணவான [தாழிதம், பயறு, கரட் சம்பல், யாழ்ப்பாண ஊறுகாய்] என்பவற்றில் கைதேர்ந்த IELTS பரீட்சையில் 4.5 புள்ளிகளைப் பெற்றவர்கள் இருப்பின் யாழ்ப்பாணத் தலைமைச் செயலகத்துடன் தொடர்பு கொள்ளவும்.
மாதாந்தம் 5 இலட்சம் - இலங்கை ரூபாவில்

திசைகாட்டி [பிறைவேற்] லிமிட்டற்
தலைமைக் காரியாலயம்:
37, சிவகுருநாதர் வீதி, பிறவுன் றோட், யாழ்ப்பாணம். 0212219016
கிளைகள்:
22A, பிராங்பெட் பிளேஸ், பம்பலப்பிட்டி. 0112508443
115A, இரத்தினபுரம் வீதி, கிளிநொச்சி.0212285544
504B, Hampton Street, Melborn, Australia.LandlineT.P- 0061390437100

CHEMISTRY
S.Vasu
A/L 2013
பண்பறிபகுப்பு
ஆரம்பம்:- 04.05.2012 வெள்ளி 5.00 p.m.
NEC பருத்தித்துறை வீதி, ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம்.

CHEMISTRY
N.Vakeesan
A/L 2013
Inorganic
Wed., Fri. 3.00 - 4.30 p.m.
ஆரம்பம்: 04.05.2012 Fri. 3.00 p.m.
NEC
கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம் (பெருமாள் கோவில் அருகில்)

உங்கள் ஆலயங்களிலும் தென்னிந்திய இசைநிகழ்ச்சியை நடத்த விரும்புகின்றீர்களா
தென்னிந்திய பிரபல திரைப்படபாடகர் T.M சௌந்தராஜன் அவர்களின் புதல்வர் T.M.S செல்வக்குமார் தற்போது யாழ்ப்பாணம் வருகை தந்திருப்பதை முன்னிட்டு அவரின் இசைநிகழ்ச்சியை இம்மாதத்தில் நடத்த விரும்புவோர் தொடர்புகொள்ளவும்.
தென்னிந்திய கலைஞர்களின் தொடர்புகட்கு:- 0771827274


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 03.05.2012 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.